147

Columbia Records
MAGIC NOTES
TRADE MARK

கொலம்பியா

ரிகார்டுகளில்

★ பொங்கல் புது நாளில்

உங்கள் அபிமான நக்ஷத்திரங்களின்
இன்னிசைப் பாடல்களை கேளுங்கள்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - FEB 1944
MADRAS

M. K. தியாகராஜ பாகவதர்

T. R. ராஜகுமாரி

P. U. சின்னப்பா

பாடியிருக்கும்

புதிய டாக்கி கீதங்கள்

★ சிவகவி

★ குபேர குசேலா

ஸரஸ்வதி ஸ்டோர்ஸ், மதராஸ்.

G.H.RAO

கூடிய விரைவில் ஆரம்பம்

ரம்னீக் ப்ரொடக்ஷன்

முதல் தரமான தமாஷ் படம்

இந்தியாவின் சிறந்த தமாஷ் நடிகர்களான

அசோக் குமார் — லீசா சிட்னிஸ்

மற்றும் பிரபல நடிகர்கள் நடிப்பது

டைரக்டர்:
கஜானன் ஜாகிர்தார்

சங்கீதம்:
நினு முஜம்தார்

டெக்கான் பிலிம் வெளியீடு

சப் டிஸ்ட்ரிப்யூடர்ஸ்: சௌத் இந்தியா பிலிம் டிஸ்ட்ரிப்யூடர்ஸ்

159 மவுண்ட் ரோடு :: சென்னை

A. நஞ்சப்பா & கம்பெனி

புக் செல்லர்ஸ் :: ஜெனரல் மர்சன்ட்ஸ் :: கோயமுத்தூர்

ஹெட்ஆபீஸ்: **அவனுசி ரோட்**

தினசரி உபயோகத்துக்கு வேண்டிய சோப்பு, வாசனை திரவியங்கள், பவுடர், கூந்தல் தைலம், கண்ணாடி, சீப்பு, முதலியவைகளும், மற்றும் விளையாட்டு பொம்மைகள், பிஸ்கோத்து, மிட்டாய், ஸ்டேஷனரி சாமான்கள் முதலியன

பிரான்ச்: **ராஜ வீதி**

பள்ளிக்கூடப் பாடப் புஸ்தகங்கள், நோட் புஸ்தகங்கள், கணக்குப் புஸ்தகங்கள், பேனா, பென்சல், காகிதம், முதலியன மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

உங்கள் திருப்தியே எங்கள் லாபம்

ஒருமுறை பரீக்ஷை செய்யுங்கள்

PESUM PADAM PONGAL MALAR

1944

☆

INDEX TO ADVERTISEMENTS

Amir Ali	78
Ananda Vilas	73
Aryan Soap	56
Beemiah Chetty, S.	14
Bharat Studio	4
Castor Oil Works K. P. ...	79
Cavery Soap Sales Depot ...	30
Chandra Talkies Ltd.	85
City News Agency	16
Coimbatore Dayalbagh Stores Ltd. ...	83
Coimbatore Swadeshis Limited ...	35
Coimbatore Swadeshi Weaving Factory Ltd.	16
Dasai Gownder & Co. N. ...	53 & 82
Deccan Films	2 & 4
Fashion Home	24
Famous Talkie Distributors ...	Cover 2
Gita Stores Ltd.	16
Gemini Studios	39
Gopala Padma Vilas	Cover 3
Ilangovan Productions	84
Jagadalapradapan	25
Jaya Embroidery House ...	59
Kandha Vilas	88
Karuppanna Gowder, S.	61
Klein & Peyerl	24
Krishna & Co. P. A. R.	11
Mani & Co.	20
Modern Agencies	20
Modern Theatres Ltd.	86
Modern Ware House	15
Murugesa Mudaliar & Bros. A. ...	83
Muthuswamy Chettiar S. R. P. ...	51
Nanjappa & Co. A.	2
Neela Stores	32
Padma Pictures Ltd.	85
Pesum Padam Kariyalayam ...	61
Prince Studio	32
Pudu Malar Nilayam	13
Rajagopal, K. B.	61
Rajaji Ware House	44
Raja Theatre & Diamond Talkies ...	36
Rajen Pictures (Ceylon)	81
Raju Chettiar & Bror., P. A.	Cover 4
Royal Hindu Restaurant	51
Salem Provident Society Ltd. ...	73
Sarada Embroidery Stores ...	73
Saraswathi Stores	1
Sastry & Sastry	18
South India Film Distributors ...	71
South India Pictures	40 & 76
Sivaram & Co.	Cover 3
Srinivas, V.	63
Subramania Iyer, V. N. ...	79
Swarna Films & South India Pictures ...	87
Valmiki	Art Insert
Variety Hall Talkies	23
Weston News Agencies	4

பேசும் படம்

பொங்கல் மலர் 1944

பொருளடக்கம்

அட்டைச் சித்திரம்: M. S. சரோஜினி (ஜகதலப்ரதாபனில்)	
பொங்கற் புதுநாள்: பாரதி தாஸன் ...	5
கலைச்செல்வம் ...	6
நடிகையின் பிரார்த்தனை யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் ...	8
பேசும்படம் பேசுகிறது ...	9
குறிப்பும் திரட்டும் ...	10
அறிவு வளர்ச்சிப் படங்கள் வேண்டும் ஸ்ரீ ஜி. டி. நாயுடு ...	12
நகைச்சுவை: "கந்தருவா" ...	15
ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள் ஸ்ரீ பி. டி. சம்பந்தம் ...	17
சினிமாவும் சங்கீதமும்: "அம்பலவாணன்" ...	19
நேயர் பேச்சு ...	21
தமிழிசை நட்சத்திரங்கள்: "பஞ்சபாணம்" ...	29
பொதுமக்களின் ரஸனை: "பி. எஸ். என்." ...	31
நக்ஷத்திரங்களுக்கு ஒரு உணவுத்திட்டம் "ரஜனி" ...	33
சேலத்தில் இரண்டு தினங்கள் ஆசிரியர் ராமநாத் ...	34
நடிகர் உலகம்: "மமுகி" ...	37
நாடகமும் சங்கீதமும் ...	41
யுத்தமும் படத்தொழிலும்: ஸ்ரீ கே. எ. ராவ் ...	43
விசித்திரம்: ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம் ...	49
இதோ பதில் ...	50
"மேக்கப்" ஸ்ரீ டி. இ. சாமையா ...	52
புதிய பாதை: "கி. ஸ்ரீ. வே" ...	54
விமர்சனம்: "கர்மயோகி" ...	55
நடிக டைரக்டர் ராஜா ...	57
திவான் பகதூர் விமர்சனம் ...	62
கிஸ்மத் விமர்சனம் ...	64
டைரக்டர் ஸ்ரீராமுலு: "கலிங்கம்" ...	66
படப் பிரதிநிதி: ஸ்ரீ பி. எஸ். கணேசன் ...	69
மிஸ் பிரேமா: "வல்லிக்கண்ணன்" ...	75
சிந்தனை அலைகள்: ஸ்ரீ எஸ். பி. மாதையா ...	80
மலர் மணம் ...	87

மூவர்ணச் சித்திரங்கள்:

வசுந்தரா, வசந்தா, காஞ்சனமாலா, ஸ்நேகப்ரபா, மாலதி.

படங்கள்

பக்கங்கள்: 26, 27, 45, 46, 47, 48, 65, 68.

ஆபீஸ்: 289 எஸ்பிளனேட், சென்னை

இம்மலரிலுள்ள கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவன அல்ல

பிரசுர உரிமை உண்டு

விலை ரூபாய் ஒன்று

பொங்கல் வாழ்த்து

★

மங்களப் பொங்கல் மலர்ந்தது எங்கும்!
பொங்குது நேர்மை பூத்தது புதுயுகம்!
அன்பும் தொழிலும் ஆற்றலும் செழித்து.
இன்பக் கழனியில் இங்கிதம் தங்குக!
சிற்பம் துலங்குக! திரைவரும் சினிமா
பொற்புறும் படங்கள் பொலிவுடன் ஓங்குக
தமிழகம் தனிலே சாந்தி நிலவுக!
அமிழ்தினும் இனிய அருங்கலை வளருக!
வாழ்க! நமது மாண்புறும் நண்பர்கள்,
வாழ்க! கைத்தொழில் வணிகம் சிறப்புடன்
வாழ்க! நட்பின் மகிமையும் பொங்குக!
வாழ்க! யாவரும் பொலிவுடன் வாழ்கவே

★

வே. நமசிவாயம், ஆர்டிஸ்ட்
பாரத் ஸ்டுடியோ, சென்னை

பேசும் படம்

☆

இலங்கை ஏஜண்டுகள்

☆

வெஸ்டன் நியூஸ் ஏஜென்ஸீஸ்

170, அட்டுப்பட்டித் தெரு, கொழும்பு

வீனஸ் பிக்சர்ஸாரின் உன்னதத் தயாரிப்பு

உல்ஹாஸ், மும்தாஸ் ஷாந்தி

தோன்றும்

"லேடி டாக்டர்"

மற்றும் நந்த்ரேகர், முபாரக் முதலியோர் நடித்தது

சங்கீதம்: அனில் பிஸ்வாஸ்

பாட்டு, வசனம்: வல்லி சாஹேப்

டெக்கான் பிலிம் வெளியீடு

84273

JL
031n211,PP
N44

பேசும் படம்
பொங்கல் மலர்
1944

வசுந்தரா

தோற்றம் பலவாகும்—நல்ல
சொக்கழகுத் தங்கம்

பேசும் படம்

படம் 2
காட்சி 4-5

பொங்கல் மலர்

ஜனவரி
1944

பொங்கற் புதுநாள்

[பாரதி தாசன்]

ஆடுங்கள் பொங்க லென்று
பாடுங்கள் ! செங்கதிரும்
ஆழும்தி ரைக்கடலின்
மேலெழுந்ததே !

போடுங்கள் நன்முரசு
நீடுந் திசை முழங்கப்
"பொங்கல்" திருத்தாழி
மேல் வழிந்ததே !

வேடன் கொடுத்த நறுந்
தேனும் உருக்கு நெய்யும்
ஈடற்ற செங்கரும்பின்
சாறும் சொரிந்தே,

நாடும் பழச் சுளையும்
ஏலம் பருப்பும் இட்டுப்
பேடன்ன மாதர்கள் ப
டைத்த விருந்தே,

வீடுங் கமழ்ந்தது நன்
னாடுங் கமழ்ந்தது வெங்
காடுங் கமழ்ந்தது கை
தொட்டவுடனே

பீடுற்ற செந்தமிழைப்
போலே இனித்தது ; நல்
நாவின் கடை நுனியில்
இட்டவுடனே !

வாடப் புரிந்த இருள்
ஒடிற்று ! நல்லுணர்வு
கூடிற்று ; வாழிய இப்
பொங்கற் புதுநாள் !

கூடும் தமிழர் பெரு
வாழ்வின் பெருத்த இன்ப
மேநல்கி வாழிய தைத்
திங்கள் திருநாள் !

கலைச் செல்வம்

தமிழ்க்கவி சுப்பிரமணிய பாரதியார் நமது பாரத நாட்டை, பாருக்குள்ளே நல்ல நாடு என வர்ணித்தார். கவிதையுள்ளம் கனிந்துருகும் உயர்நாடு பாரத நாடென்றார். தானத்திலும் கானத்திலும் நிறைந்து விளங்குவதென்றார். கலையூற்றுப் பெருக்கெடுத்து ஓடிவழிவது நம் நாட்டிலே. வீரப்படைகள் தங்கள் தீரத்தை நிலைநாட்டியது பாரத மண்ணிலே. பாரத மக்கள் தங்கள் மனோதிடத்தை யாகங்கள் மூலம் பெருக்கினார்கள். தெய்வபக்தி நம் பாரத நாட்டில் தலை சிறந்து விளங்குகிறது. இயற்கைக் காட்சிகள் மலிந்து மனிதர்களின் உள்ளத்தை இன்பமயமாக்குவது இந்நாட்டில்தான்.

நம்மில் பலர் மேல்நாட்டு மோகம் கொண்டவர். நம்மையும் நமது நாட்டையும் ஏளனம் செய்பவர்கள். மேல்நாட்டாரைப் பின்பற்றி அவர்களைச் சிலாகித்துக் கொண்

டாடுபவர்கள். இவர்களுக்கு நாட்டுப்பற்று இல்லை. ஏன்? அவர்கள் தங்கள் சுற்றிலுமுள்ளவைகளைக் கவனிப்பதில்லை. பாரத அன்னையின் எழில் மேனி அவர்கள் கண்ணில் படுவதில்லை. கண்ணிருந்தும் குருடர்களாய் விளங்குபவர்கள். இவர்களின் கண்களைத் திறக்க நமது நாட்டின் செல்வங்களை விவரித்தார் பாரதியார்: அவைகளைக்கண்டு அனுபவிக்க வழிகாட்டினார். அவைகளைப் போற்றிக் கொண்டாடக் கூறப்பித்தார்.



தமிழ்ப்பட உலகிலும் இன்று கண்ணிருந்தும் குருடர் பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு நமது கலைச் செல்வம் புலனாவதில்லை. நம்மைச் சுற்றிலுமுள்ள செல்வங்கள் புதியன அல்ல. பழமையைப் புதிதாக்குவதும் ஒரு கலை. சினிமாவும் ஒரு புதிய கலைதான். பழைய செல்வங்களுக்கு புது மெருகூட்டி மக்கள் மனதைக் கவரவல்ல நவீன கலை சினிமாதான். இக்கலை நன்கு வளர்ந்து நாம் பயனுற எல்லாக் கலைகளுக்கும் தெய்வமாகிய சரஸ்வதி தேவியை வணங்குவோம்.

நடிகையின் பிரார்த்தனை

(யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்)

கல்யாணி ராகம்] [திரிபுடை தாளம்

பல்லவி

கலைவரந் தருவாய் — தில்லைக்
கனகசபையில் ஆடும்
எனது குல தெய்வமே (கலை)

அநுபல்லவி

அலைமனத் தையடக்கி
ஆசையெல் லாம் உன்மேல்
நிலையாக வைத்து — நிதம்
நிருத்தமிட்டுக் கொண்டாடும் (கலை)

சரணம்

தேனுங் கனிரசமும்
தேவர் அமுதம் போல
ஞானக் கவிபழுத்த
கானரசம் பெருகும் (கலை)

குயிலும் கிளியும் போலக்
கொஞ்சுந் தமிழிசையும்
மயிலினைப் போல் ஆடும்
ஒயில்நடையும் வளரும் (கலை)

மழலையைப் போலக் கொஞ்சும்
குழலும் யாழும் முழவுந்
தழுவி ததிங்கிணதோம்
என்று ஜதிமிதிக்கும் (கலை)

ஒன்பது ரசங்களும்
உணர்ச்சியுடனே காட்டி
அன்பு பெருகியுன்னை
ஆராதனை செய்யவே (கலை)

'பேசும்படம்' பேசுகிறது

1942 செப்டம்பர் மாதத்தில் 'பேசும் படம்' பேச ஆரம்பித்தது! முதல் இதழில் பேசும் படம் பேசுகிறது என்ற தலைப்பில் தமிழ் சினிமாக்கலை நோய் வாய்ப்பட்டு கவலைக்கிடமான நிலைமையில் இருப்பதாகவும், அதன் வியாதிகளைச் செவ்வனே அறிந்து, குணமாக்கவல்ல மருந்துகளைப் பிரயோகிக்க வேண்டியது அவசியம் என்றும், இதற்கு முதற்படியாக வியாதியின் போக்கை சந்தேகமற அறிந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டிருந்தேன். இடைக்காலத்தில் யுத்தம் காரணமாக சினிமாத்தொழில் முன்னேற்றத்தில் பல இடையூறுகளும் வந்திருக்கின்றன. சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் லைசென்ஸ் முறையைக் கவனிக்கும்பொழுது இவ்வருஷத்தில் புதுப்படங்கள் அதிகமாக வரும் என எதிர்ப்பார்ப்பதற்கில்லை. வாரக்கணக்கில் ஓடிக்கொண்டிருந்த படங்கள் இனி மாதக் கணக்கில் ஓட்டப்படவேண்டும். அல்லது வட இந்தியப் படங்களை மென்மேலும் நமது நாட்டில் காட்டுவதற்காக வரவழைக்க வேண்டும். இல்லையேல் சினிமாக் கொட்டகைகள் மூடப்படவேண்டும். முன்னிருந்தபடியே நமது தமிழ்ப் படங்களின் தரம் மோசமாய் இருக்குமானால் பொது மக்கள் தமது பொழுது போக்குக்காக வடநாட்டை எதிர்நோக்கி இருப்பது இயற்கையே. வட நாட்டிலும் கூட பிலிம் பஞ்சம் இங்கிருப்பது போலவே இருப்பதால் இதிலும் கஷ்டமிருக்கிறது. எனவே ஒவ்வொரு தமிழ்ப்பட முதலாளியும் தான் எடுக்கப் போகும் படங்களில் விசேஷ கவனம் செலுத்தி அவைகளை ஜனங்கள் திரும்பத்திரும்பப் பார்த்து இன்பமடையும்படி செய்தலின் அவசியம் பன்மடங்கு அதிகமாகிறது. குப்பைப் படங்கள் நமக்குத் தேவையில்லை. பழைய பாணியிலேயே நமது தொழில் சென்று கொண்டிருக்குமானால் அதற்குப் பொறுப்பான முதலாளிகள் தொழிலுக்கே பெருந்திங்கு இழைத்தவர்களாகிறார்கள். கிடைக்கக் கூடிய பிலிமையும் வசதிகளையும் வைத்துக்கொண்டு தொழில் முன்னேற்றத்தைக் குறித்து மேலும் மேலும் உயர்தரப் படங்கள் எடுக்க வேண்டியதில் முதலாளிகள் கவனம் செலுத்துவார்களாக.

யுத்த காலத்தில் எல்லாத் தொழில்களும் முன்னேற்ற மடைகின்றன. ரசாயன ஆராய்ச்சிகள் வெகு துரிதமாய்ச் செல்கின்றன. யுத்தத்திற்குப் பின் ஆகாய தரிசனி முன்னேற்றமடைந்து பல வீடுகளிலும் காட்சியளிக்கக்கூடும். படப்பிடிப்பு முறைகளிலும் பலவித மாறுதல்கள் ஏற்படலாம். ஆகாய தரிசனி வீட்டுக்கு வீடு புகுந்து கொண்ட பொழுதிலும் சினிமாத் தொழிலுக்கு ஒரு பாதகமும் ஏற்படாது. சினிமா எவ்விதம் மாறும்; என்னென்ன புதிய முறைகள் கையாளப்படும் என்பனபோன்ற கேள்விகளுக்கு பதில் தற்போது கூறமுடியாது. ஆயினும் நவீன வசதிகளின் காரணமாக பொது மக்களின் மனதை இன்னும் பன்மடங்கு கவரப் போவது சினிமா ஒன்றுதான் என்று நிச்சயமாய்க் கூறலாம்.

ஆகவே சினிமாவிற்கு யுத்தத்திற்குப் பின் இப்பொழுதிருப்பதைவிட பன்மடங்கு மேலான வரவேற்பு காத்துக் கொண்டிருக்கிறது. இதை எதிர்பார்த்து நாம் நமது நடிப்புக்கலையை விருத்தி செய்வோமாக. ஏற்கனவே நமது நாடெங்கிலும் ஆங்காங்கே தோன்றிவரும் நாடகக் கம்பெனிகளும் நடிப்புக் கலைக்கு பெருந்தொண்டு செய்கின்றன. பிலிம் கிடைக்காவிட்டால் நடிப்புக்கலை பிலிமிலிருந்து மேடைக்குச் செல்லவேண்டியது இயற்கைதானே. மறுபடியும் பிலிம் ஏராளமாகக் கிடைக்கும்போது நாடக நட்சத்திரங்கள் மறுபடியும் சினிமா வானில் பிரகாசிப்பார்கள் என்று நம்பலாம்.

ஒருவன் தன் கஷ்ட காலத்தில்தான் கடவுளை நினைக்கிறான். தன்னை சீர்திருத்திக் கொள்ளவும் முற்படுகிறான். ஆகையால் தற்போது சினிமாத் தொழிலுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டகாலம் அத்தொழிலை சீர்படுத்த பெரிதும் பயன்பட வேண்டும். முற்போக்கான முறையில் சீர்திருத்தம் அமையுமென்று எதிர்பார்போமாக.

—டி. வி. ராமநாத்

குறிப்பும் திரட்டும்

கல்கத்தா குண்டுவீச்சு

சென்றமாதம் கல்கத்தா நகரின் மீது பட்டப் பகலில் ஜப்பானிய விமானங்கள் குண்டு வீசிய போது நடந்த சம்பவங்களைப் பற்றி சில ருசிகரமான விஷயங்கள் 'தீவாளி' என்ற பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சௌரங்கியிலுள்ள சினிமாக் கொட்டகைகளில் காலைக் காட்சிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அப்பொழுது அபாய அறிவிப்புச் சங்கு அலறியது. புதிதாகக் கொண்டுவரப்பட்ட திட்டங்களின்படி காட்சிகள் நிறுத்தப்படாமல் நடந்து கொண்டேயிருந்தன. ஆனால் அபாயச் சங்கு ஒலித்ததென்றும் படம்பார்ப்போர் பிரியப்பட்டால் பாதுகாப்பு இடங்களுக்குப் போய்ப் பதுங்கிக் கொள்ளலாம் என்றும் ஒரு சிலேடுமூலம் அறிவிக்கப்பட்டது. சினிமா பார்த்துக் கொண்டிருந்தவர்களில் வெகு சிலரே வெளியேறி பாதுகாப்பு எடுத்துக்கொண்டனர். 100-க்கு 95 பேர் இருந்த இடத்திலேயே இருந்தனர். அதே சமயத்தில் சற்று தூரத்தில் ஜப்பானியர்களால் எறியப்பட்ட குண்டுகள் சாதாரண மக்களிடையே விழுந்து பலர் உயிர்விட்டுக் கொண்டிருந்தனர்.

அப்பத்திரிகை ஆசிரியரும் அன்று மாலை 3 மணிக்கு தென் கல்கத்தாவில் ஒரு சினிமா பார்த்துவிட்டு பிறகு வட கல்கத்தாவில் நடந்த ஒரு நாடகத்தையும் பார்த்தார். இரண்டு இடங்களிலும் கூட்டம் வழக்கத்திற்கு அதிகமாகவே இருந்தது. வழக்கம் போலவே ஆண், பெண் இருபாலரும் நிறைந்திருந்தனர். கல்கத்தா நகரமக்கள் காட்டிவரும் திடசித்தம் மிகவும் போற்றத்தக்கது என்று குறிப்பிடுகிறார்.

திரும்பத் திரும்ப குண்டுவீச்சு நடைபெற்றால் ஜனப் போக்குவரத்துக்கு அதிகத்தடை ஏற்படலாம். சமயத்திற்கேற்றபடி நிலைமையை அனுசரித்து பொது ஜனங்களுக்கு சௌகரியத்தை ஏற்படுத்திக் கொடுப்பது கொட்டகை முதலாளிகளின் கடமையாகும். இவைகளில் முதலாவதாக குண்டுவீச்சின்போது பதுங்கிக்கொள்ள பாதுகாப்பிடங்கள் அமைப்பதாகும். அதிகமான ஜனங்கள் திரளுமிடங்களில் ஏற்ற வசதிகளிருப்பது மிகவும் அவசியம். நமது சினிமாக் கொட்டகைகளின் மேற்புரக் கூரை தகரத்தினால் போடப்பட்டிருப்பதால் இவைகளைக் கண்டு தொழிற்சாலை என நினைத்து ஜப்பானியர் குண்டு வீசலாம். இதைத் தடுப்பதற்காக கூரையின்மேல், ஆகாயத்திலிருந்து பார்ப்போருக்கு நன்கு தெரியும்படியான குறிகள் போட்டுவைக்கலாம். பிலிம்கள் போன்ற சடுதியில்பற்றி எரியக்கூடிய வஸ்துக்கள் தனியாக ஒரு அறையில் பத்திரப்படுத்தி வைக்கப்பட வேண்டும். தீ அணுக முடியாத விசேஷ அறைகள் அமைக்க வேண்டும். பிலிம்கள் வைக்கப்படும் அறை கொட்டகைக்குச் சற்று தூரத்தில் தனியாக இருப்பது நலம்.

கல்கத்தாவைப்போன்று சென்னையும் வெடிவீச்சு அபாயத்திற்கு ஆளாகக் கூடுமாதலால் சென்னைத் தியேட்டர் முதலாளிகளும் தகுந்த முன் ஜாக்கிரதையுடன் இருக்கவேண்டியது அவசியம்.

கால வித்தியாசம்

கோவையில் பிளேக் நிலைமையின் காரணமாக சினிமா காட்டப்படும் நேரங்கள் திருத்தியமைக்கப்பட்டிருக்கின்றன. கோவை நகரசபையார் கொண்டு வந்த தீர்மானத்தை யொட்டி இரவு 10-30 மணிக்குமேல் எந்தப் படமும் காட்டப்படுவது கூடாது என்று தடை செய்யப்பட்டிருக்கிறது. இதனால் கொட்டகைக்காரர்கள் இரவில் இரண்டு ஆட்டங்கள் காட்ட வழியின்றி வசூலும் குறைந்து திண்டாடுகிறார்கள். இரண்டு ஆட்டங்கள் காட்டுவதனால் பிற்பகலிலோ அல்லது காலையிலோ காட்ட வேண்டியிருக்கிறது. இதில் பிரமாதமான வசூலும் கிடைக்காது. பிளேக் நிலைமை படிப்படியாய் சீர்திருந்தி வருவதால் கால வித்தியாசத்தால் நேரிட்டிருக்கும் இக்கால வித்தியாசம் சீக்கிரம் மாறி முன்போல் கொட்டகை முதலாளிகள் இரவு ஆட்டங்களையும் காட்ட வசதி ஏற்படுமென்று நம்புகிறோம்.

பிலிம் பை

ஸ்ரீ கே. சுப்ரமண்யம் சமீபத்தில் பத்திரிகைகளுக்கு விடுத்த ஒரு அறிக்கையில் சிலர் நாகரீகமாகவும், அழகாகவும் இருக்குமென்று உபயோகப்பட்ட பழைய பிலிம்களினாலான பைகளை சிறுவர்களும், பெரியவர்களும் உபயோகிப்பதுபற்றியும் அதனால் விளையும் ஆபத்தைப்பற்றியும் எச்சரித்திருப்பதுடன், அத்தகைய பிலிம்களை வாங்குவோரும், விற்போரும் இது விஷயத்தில் தகுந்த நிபந்தனைகளைப் பெற்று ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். இந்த விஷயங்கள் உரியவர்களின் கவனத்தில் படவேண்டும்.

லாகூர் சினிமாக்கள்

லாகூர் மின்சார சப்ளை கார்ப்பரேஷனுக்கு போதுமான அளவு நிலக்கரி கிடைக்காததன் காரணமாக லாகூரிலுள்ள 20 சினிமாக் கொட்டகைகளும் சென்றமாதம் 7-ந்தேதி முதல் மூடப்பட்டன. இதையொட்டி நிலக்கரி சப்ளை சரிப்படும் வரையில் லாகூரிலுள்ள பெரும்பாலான் யந்திரங்களுக்கு மின்சார சப்ளை நிறுத்தப்பட்டிருப்பதாக பஞ்சாப் கவர்னர் தற்காப்புச் சட்டப்படி ஒரு உத்திரவைப் பிறப்பித்தார். 20 கொட்டகைகள் இருந்தும் அவற்றில் ஒன்றுகூட தங்கள் பொழுது போக்குக்கு வசதியளிக்காமலிருந்தால் ரஸிகர்கள் சும்மா இருப்பார்களா? சர்க்காரின் இச் செய்கையை ஆக்ஷேபித்தும், கண்டித்தும் கிளர்ச்சிகள் நடைபெற்றன. அதன் பலனாக கொட்டகைக் காரர்கள் ஒரே ஒரு காட்சிமட்டும் காட்டலாம் என்று தங்களது முந்திய உத்திரவை கருணைகூர்ந்து திருத்தி மற்றொரு உத்திரவு பிறப்பித்திருக்கின்றனர் பஞ்சாப சர்க்கார்.

திருவாங்கூரின் முயற்சி

ரஷ்யா முதலிய மேல்நாடுகளில் சினிமா மூலமும், ரேடியோ மூலமும் கல்வி போதிக்கப்படடு வருகிறது என்று கேள்விப்பட்டிருக்கிறோம்; படித்தும் இருக்கிறோம். அத்தகைய கல்வி போதனா முறையை நம் இந்தியாவிலும் அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்று எத்தனையோ பேர் ஆசைப்பட்டிருப்பார்கள். அவர்களது ஆசையை ஓரளவு நிறைவேற்ற அகில இந்திய ரேடியோக்கள் அவ்வப்போது கல்வி சம்பந்தமான விஷயங்களை ஒலி பரப்பி வந்தன. இதனால் யாருக்கு எவ்வளவுதூரம் பயன் விளைந்தது என்பது நமக்குத் தெரியாது. சினிமாவின்மூலம் போதிக்க இது வரை யாரும் என்ன காரணத்தாலோ முயலவில்லை. தற்போது திருவாங்கூர் சர்க்கார் இது விஷயத்தை தங்கள் சமஸ்தானத்தில் அமுலுக்குக் கொண்டுவரத் திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்றும், திட்டம் அநேகமாய் ஜனவரி பிற்பகுதியில் அமுலுக்கு வரலாமென்றும் அறிந்து மகிழ்கிறோம். இது சம்பந்தப்பட்ட விஷயங்களில் திருவாங்கூர் சர்க்காருக்கு வேண்டிய ஆலோசனைகூற பிரபல சினிமா டைரக்டர் ஸ்ரீமான் சுப்ரமண்யத்தை அவர்கள் நியமித்திருப்பதை அறிந்து நமது மகிழ்ச்சி இரட்டிக்கிறது.

மேனாட்டுச் செய்திப் படங்களும், இந்திய சர்க்காரின் செய்திப்பட இலாகாவிலிருந்து வெளிவரும் படங்களும் திருவனந்தபுரம் மாணவ மாணவிகளுக்குக் காட்டப்படும் என்றும், பின் இது சம்பந்தமாய் மாணவ மாணவிகளும் ஆசிரியர்களும் சர்ச்சை செய்வார்கள் என்றும் தெரிகிறது. திருவாங்கூர் சர்வகலா சாலையும் இது விஷயத்தில் சர்க்காருடன் ஒத்துழைக்குமாம்.

கல்வி போதனைப் படங்கள் எடுப்பதில் நல்ல அனுபவமுள்ள ஸ்ரீ சுப்ரமண்யம் சிறந்த முறையில் கல்வி போதனைக்கேற்ற படங்களைத் தயாரிக்கப் பெரிதும் பாடுபடுவார் என்று நம்புவதுடன், திருவாங்கூர் சர்க்காரின் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

சர்க்கார் எச்சரிக்கை

நாளது 1944-ம் வருஷத்தில் படம் எடுப்பதற்கான லைசன்ஸை பெற்றவர்கள் தங்கள் லைசன்ஸை மற்றொருவருக்கு விற்றாலும் குறிப்பிட்ட தேதிகளில் மாதாந்திர இருப்பு விவரங்களை சரிவர அனுப்பத் தவறினாலும், மனுவில் தப்பான விவரங்கள் கொடுத்திருந்தாலும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட லைசன்ஸ் எவ்வித எச்சரிக்கையுமின்றி ரத்து செய்யப்படும் என்று இந்திய சர்க்காரின் கைத்தொழில் சிவில் சப்ளை இலாகா பட முதலாளிகளுக்கு ஒரு சுற்றுக் கடிதம் அனுப்பியிருக்கிறது. தவிர சர்க்கார் அனுமதித்திருக்கும் பிலிமின் அளவுக்குள்ளாகவே படத்தை எடுத்து முடிக்கவேண்டிய பொறுப்பு படமுதலாளிகளைச் சேர்ந்தது என்றும், பிலிம் பெறுவதற்கு முன்பே அதிகப்படித் தேவைக்கு மனுச் செய்து கொள்ளாவிட்டால் அதிகப்படி கச்சா பிலிம் வேண்டும் என்ற கோரிக்கை கவனிக்கப்பட மாட்டாது என்றும் அதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பட முதலாளிகள் இதைப் பார்த்துப் பிழைப்பார்களாக!

பிரசாரப் படங்கள்

பிரிட்டனிலும் ஹாலிவுட்டிலும், யுத்தம் ஆரம்பித்தது முதல் எடுக்கப்பட்டுவரும் முழுநீள யுத்தப் பிரசாரப் படங்களை (யுத்த முயற்சிக்கு ஆதரவளிக்கும் படங்கள்) அந்தந்த பாஷை பேசும் பிரதேசங்களில் அந்தந்த பாஷா விமர்சனங்களோடு காட்ட இந்திய சர்க்கார் யோசித்து வருவதாகவும், இதுபற்றி யோசிக்க பிரபல அமெரிக்கப்படக் கம்பெனிகளின் பம்பாய் ஆபீஸ் மானேஜர்களை இந்திய சர்க்கார் டில்லிக்கு அழைத்திருப்பதாகவும் தெரிகிறது. இந்திய சர்க்கார் "செய்தால் செய்தது" தான் என்ற விஷயம் எல்லோருக்கும் தெரிந்ததே. மற்றபடி படத்தைப் பார்ப்பதற்கும் சம்மதம்தான். ஆனால் காசு கொடுத்தா என்ற விஷயம்தான் கொஞ்சம் யோசிக்க வைக்கிறது. மற்றோர் விஷயம். ஹாலிவுட்டில், இது போன்ற யுத்தப் பிரசாரப் படங்களில் நடிக்கும் நடிகர்களுக்கும், அவற்றைத் தயாரிக்கும் பட முதலாளிகளுக்கும் இந்த யுத்தப் பிரசாரப் படங்களின் மேலேயே ஒரு அலுப்பு ஏற்பட்டு முன்போல் சாதாரணப் படங்களைத் தயாரிக்க யோசித்து வருவதாகவும், சில இடங்களில் "இன்று யுத்தப் பிரசாரப் படம் இல்லை" என்ற போர்டுகள் தொங்குவதாகவும் தேரிகிறது. அவ்வித நிலைமை நம் நாட்டிலும் ஏற்பட்டு விடக்கூடாது என்று சமய சந்தர்ப்பத்தைத் உத்தேசித்து தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

P. A. R. கிருஷ்ணா & கோ.

ஷராப் வியாபாரம்

பெரிய கடை வீதி :: கோயமுத்தூர்

“அறிவு வளர்ச்சிப் படங்கள் வேண்டும்”

—ஜி. டி. நாயுடு

சினிமாப் படங்கள் முதன் முதலில் கல்வியைப் புகட்டும் சாதனமாக, அதாவது வெகு தூரத்தில் நடக்கும் சங்கதிகளைப் பொதுஜனங்களுக்குப் பட மூலமாகக் காட்டி அறிவூட்டும் கருவியாக உபயோகப்பட்டு வந்தன. கொஞ்ச காலத்திற்குப் பிறகு படங்கள் உருவங்களையும் செயல்களையும் காட்டுவதோடன்றி பேசக்கூடியதாகவும் உற்பத்தி செய்யப்பட்டன. நாளாவட்டத்தில் இப்படங்கள் வியாபாரக் கருவிகளாகி அந்த வியாபாரத்திலும் பணம் கொள்ளையடிப்பது ஒன்றையே நோக்கமாகக் கொண்டது என்று சொல்லும் இழிநிலைக்கு வந்துவிட்டன. இப்பொழுது இந்தப் படங்களால் நன்மை என்பது ஓர் அணுவளவேனும் இல்லையென்று நிரூபித்துக் காட்டலாம். எவ்வளவு நிரூபித்தாலும், இந்தத் தொழில் வளரவேண்டும் என்பவர்களின் நோக்கத்தை ‘சென்ஸார் போர்டு’ ஈடேற்றி விடுகிறது. அரசியலைப் பற்றியோ அல்லது சண்டைக்கு இழுக்கக் கூடியதாக உள்ள சங்கதிகளோ இல்லையாயின் சென்ஸார் போர்டு படத்தைக் காட்ட அனுமதி கொடுத்துவிடுகிறது.

இந்த சினிமாப் படங்கள் நம் இளம் வாலிபர்கள், பெண்மணிகள்—என் முதியவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம்—ஆகியவர்களின் மனோநிலை, சரீரநிலை முதலியவற்றை எவ்வளவு தூரம் ஊடுருவிக் கெடுத்திருக்கின்றன என்பதை !நினைக்கும்போது இன்னும் இவைகள் எங்கு கொண்டு போய்விடுமோ என்று நெஞ்சம் பதறுகின்றது. இப் படங்களைக் கல்வி, அறிவு வளர்ச்சிக்காக உபயோகப்படுத்தி அதனால் முன்னேற்றமடைவதுபோய், கெட்ட பழக்க வழக்கங்களை நம் மக்களிடைப் புகுத்தியிருப்பதை மனச்சாட்சியுடைய படமுதலாளிகள் உட்பட எவராலும் மறுக்க முடியாது.

சாதாரணமாக இளைஞர்களுடைய பழக்க வழக்கங்கள், தொழில், எதிர்கால வாழ்க்கை முதலியவைகள், அவர்கள் எங்கு இருந்து, எதனுடன் பழகுகிறார்களோ அதைப் பொறுத்தே உண்டாகின்றன. இவை எப்படி உண்டாகின்றன என்பதை விரிவாய் எழுதப்புகின் அது ஒரு பெரும் புராணமாய் விடும் என்று பயந்து சுருக்கமாய்ச் சொல்ல விரும்புகிறேன்.

கால நிலை காரணமாக நம் இளைஞர்களின் தேகக் கட்டை



ஜி. டி. நாயுடு

யும், மனோ நிலைமையையும் மேல் நாட்டினரோடு இணைக்க முடியாது. அதைவிட்டு இங்குள்ள இளைஞர்களை எடுத்துக் கொண்டால் அவர்கள் மனம் பெண்களை நாடிக்கொண்டிருக்கிறது. இளம் யுவதிகளின் மனமும் ஆண்களை நாடிக் கொண்டிருக்கும். இதைக் கட்டுக்குள் அடக்குவதற்காகவே வரையறைப்படுத்தவே கல்யாணங்கள் செய்யப்படுகின்றன. கல்யாணமான பின்னும் புருடன் மனைவிகள் அளவுமீறாதிருக்க முன்னோர் ஏற்படுத்திய கட்டுப்பாடுகள் வழக்கத்திலிருக்கின்றன.

ஓர் இளம் பெண், அல்லது ஒரு இளைஞன் தன்னுள் எழும் காம இச்சைகளை சாதாரணமாக அடக்க முடிவதில்லை. ஆனால் மனோ விகாரங்களினால் உற்பத்தியான இந்த இச்சையைத் தவிர்த்து மேற்கொண்டு அதிகமான சந்தர்ப்பங்களில்லாததால் அந்த இச்சை விருத்தியாவதில்லை.

சினிமாப் படங்கள் வந்தபின் அவற்றை அடிக்கடி பார்ப்பதின் விளைவாக இளைஞர்களின் மனோ விகாரங்கள் படிப்படியாய் வளர்ந்து எல்லையின்றிப் பரவ ஆரம்பித்து விடுகின்றன.

சாதாரணமாக ஓர் இளைஞன் ஒரு திருட்டுக் கூட்டத்தில் விடப்பட்டு, திருடுவதற்குத் தூண்டக் கூடிய பொருள்கள் இருக்குமிடத்திலும் இருந்தால் அந்த இளைஞன் வெகு சீக்கிரம் திருடுவதில் தேர்ச்சி பெற்று விடுவான். இதேமாதிரி, இளைஞர்கள் குடிப் போரிடம் நெருங்கிப் பழகிவிட்டாலும், அல்லது வீண் செலவு செய்பவர்களிடம் பழகினாலும் அப்பழக்கங்களை அவன் வெகு விரைவில் பழகிக் கொள்வது இயல்பு. மேற்கூறியவைகளெல்லாம் நெருங்கியிருக்கும்போதுதான் தொடருகின்றன. ஆனால் ஆண்கள் பெண்களைப் பார்ப்பதிலும், பெண்கள் ஆண்களைப் பார்ப்பதிலும் நெருங்கியிருக்க வேண்டிய அவசியமேயின்றி பார்த்தலாகிய ஒரே செயலினால் இவர்கள் மனம் கோளாறடைந்து, சிதைந்து விடுகிறது.

கடைசியில் சொன்ன இந்த ஆபத்து இந்தியாவிலுள்ள எந்தப் படத்திலாவது இல்லையென்று எவராவது நிரூபித்தால் அவருக்குப் பரிசு கொடுக்கலாம். நான் பார்த்த வரைக்கும், கேட்ட வரைக்கும் பெண்கள் வந்து படத்தின் முன்னால் நின்று ஆண்களின் மனதைக் கலைக்கும் சாகஸங்களைச் செய்து காட்டுவதும் அதேமாதிரி ஆண்கள், பெண்களுக்குச் செய்து காட்டுவதுமே எல்லாப் படங்களிலும் இருக்கின்றன. எல்லாப் படங்களிலும் அதிகம் இல்லை யென்றாலும், சிறிதளவாவது இருக்கத்தான் செய்கிறது. அப்படியிருந்தாலும்படம் பார்க்க வரும் இளைஞர்கள் அந்த பாகங்களை மட்டும் பொறுக்கியெடுத்து மனதில் பதியவைத்துக் கொண்டுபோய் விதை விதைக்கிறார்கள்.

சாதாரணமாக நம்வீடுகளிலோ வீதிகளிலோ, பொது இடங்களிலோ பெண்களை ஆண்களும், ஆண்களைப் பெண்களும் நேரடி

யாக எடுத்துப் பார்ப்பதற்குப் பயந்து கொள்கிறார்கள். ஆனால் படம் பார்க்கப்போகிற கூட்டங்களிலும் கோயில்களுக்குப் போகிற கூட்டங்களிலும் இம்மாதிரி பார்க்கும் எண்ணத்தோடு போகிறவர்களுக்கு சௌகர்யமாய்ப் பார்க்க உருவங்களும், செயல்களும் மலிந்து கிடக்கின்றன. அநேக படங்களில் நடிகர்களாக வருகின்றவர்கள் தங்களைப் பெரிதும் சிங்காரித்துக் கொண்டு, தங்கள் தோற்றத்தை மற்றவர்களுக்குக் காட்டி வருகிறார்கள். இத்தகைய படங்களையே நம் இளைஞர்கள் விரும்பிப் பார்க்கிறார்கள்.

என்னுடைய பல வருட அனுபவங்களில் இந்த சினிமாப் படங்களும், நாடகங்களும் எந்த நன்மைக்காக ஏற்பட்டதோ அதை விட்டு நம் சமூக வாழ்க்கைக்கு விரோதிகளாக வளர்ந்து வருகின்றன என்பது என் அபிப்பிராயம். இதனால் இத்தொழில் சம்பந்தப்பட்டவர்கள் இவற்றைவிட்டுவிட வேண்டுமென்பது என்கருத்தல்ல.

சினிமாப் படங்களை எப்படி உபயோகித்து நல்ல பயனைப் பெறலா மென்பதையும் என்னென்ன கெடுதிகளை நீக்க வேண்டு மென்பதையும் இந்த ஒரு கட்டுரையில் எழுதி முடிக்க முடியாது. பலதரப்பட்டவர்களும் கலந்து தர்க்கித்து முடிவு செய்ய வேண்டிய விஷயம். மேல் நாட்டில் சினிமாக்கலை நாளுக்கு நாள் வளர்ந்து எண்ணில் அடங்காத நன்மைகளைச் செய்துவரும் போது, நம் நாட்டில் துரதிர்ஷ்டவசமாக அது கெடுதிகளையே வளர்த்து வருவது வருந்தத் தக்கது. மேல் நாடுகளில் இப்படத் தொழில் விருத்தியடைந்திருக்கும் அளவுக்கு, தொழில், இரசாயனம், விவசாயம், கல்வி, முதலிய அறிவு வளர்ச்சிக்கான படங்கள் பெருகியிருக்கின்றன.

நான் மேல் நாடு சென்றிருந்த பொழுது இம்மாதிரிக் கல்வி வளர்ச்சிப் படங்களை நம் ஊரிலும் உற்பத்திசெய்து உபயோகிக்க வேண்டுமென்று அரும்பாடுபட்டு, பொருளும் செலவு செய்து கொண்டுவந்த சில படங்களை பல பள்ளிக்கூடங்களிலும், பொது இடங்களிலும் காட்டியும் பயனில்லை. காரணம், இளைஞர்களுக்கு வழி காட்டுபவர்களாயுள்ளவர்கள் இதில் விசேஷ அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை.

உலகத்தில் சினிமாப் படங்களின் மூலம் கல்வி பரப்புவதுதான் சிறந்த வழி என்று எல்லோராலும் முடிவு செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. நம்முடைய சமூகங்கள் ஜாதி, மத வேற்றுமைகளை யொழித்து, கல்வி, தொழில் ஆகியவற்றின் வளர்ச்சியில் ஈடுபட்டாலொழிய நாம் காண்கின்ற சுயராஜ்யக் கனவு, நனவாக முடியாது. அத் தொழில் வளர்ச்சியும், கல்வி வளர்ச்சியும் விரைவாகவும், சுலபமாகவும் சினிமாப் படங்களின் மூலம்தான் ஏற்படவேண்டும். ஆகையால் பட முதலாளிகள் எல்லோரும் ஒன்று சேர்ந்து தொழிலில் விருத்தியடைந்து இப்பொழுது காட்டிவரும் பட முறைகளையும், அவற்றின் குறைபாடுகளையும் ஒழித்து, அறிவு, கல்வி, தொழில் வளர்ச்சிக்கான படங்களை உற்பத்தி செய்வதில் தகுந்த கவனம் செலுத்தி முன்னணிக்கு வரவேண்டும் என்பதே என் கோரிக்கை.

புது மலர் நிலய

புதுப் புத்தகங்கள்

ஆசிரியர்: சரத் சந்திரர்

மொழிபெயர்ப்பு: ஆர். ஷண்முகசுந்திரம்

★ சந்திரநாத் ... ... ரூ. 1—8—0

★ ரமா ... ... ரூ. 2—0—0

விற்பனை உரிமையாளர்:

ஆனந்த நூலகம்

(புத்தக வியாபாரிகள்)

வடக்கு வெளி வீதி :: மதுரை

★ ஏனைய தமிழ்ப் புத்தகங்களும் கிடைக்கும்

★ விவாக ★
சுப முகூர்த்தங்கள்

தை பிறந்துவிட்டது

உங்கள் வீடுகளில் நடக்கும் சுப முகூர்த்தங்களுக்குத் தேவையான ஜவுளி தினுசுகள் ஏராளமாய் இருக்கின்றன

ஸ்திரீகளுக்கு :

பனாரஸ், காஞ்சீவரம், பங்களூர், சேலம், பட்டு சேலைகள், பார்டர்கள், அச்சுப் புடவைகள், மதுரை சிந்தடி, நார்மடி சேலைகள், எங்கள் சொந்த தரியில் தயாரித்த 100 நெ., 80 நெ. நூல் சேலைகள், வாயில், சீட்டி, ஜாக்கட், ஜம்பர், பாவாடை, ரவிக்கை முதலியன.

★

குழந்தைகளுக்கு :

நூதன நாகரீக ஆடை தினுசுகள்.

★

ஆடவர்களுக்கு :

ட்வீட், பாப்ளின், முதலிய பல வகை கோட்டிங், ஷர்ட்டிங் தினுசுகள் மற்றும் மெத்தை, ஓல்டால், சால்வை, பெட்ஷீட், கம்பளம், கர்டன் முதலியன.

எல்லாம் முதல்தர சரக்குகள்

நீதியான விலை

தென் இந்தியாவில் பிரசித்திபெற்ற கடை

ஒயிட் ஷாப்

☆

S. பீமைய செட்டி

கோயமுத்தூர்

நகைச்சுவை

"கந்தருவா"

ஸ்ருங்காரம், வீரம், ஹாஸ்யம், சாந்தம், ரௌத்ரம், அற்புதம், குச்சை, ஸோகம், பயானகம்—இவை நவரஸங்கள். நம் தாய் மொழியில், உவகை, பெருமிதம், நகை, சமநிலை, வெகுளி, வியப்பு, இழிப்பு, அவலம், அச்சம் என ஒன்பது சுவைகளாகக் கொள்ளப்படும். இவற்றுள் ஹாஸ்யம், அதாவது நகைச்சுவை அர்த்தமற்ற பரிகாசத்தின் விளைவாக மாட்டாது. அதன் சிறப்பு மகத்தானது. மற்ற சுவைகளுள் எதற்கும் அது தாழ்ந்தது மன்று. அழகிய வானவில்லில் திகழும் ஏழு வர்ணங்களில், எது எதை விட உயர்ந்தது அல்லது தாழ்ந்தது என்று நம்மால் சொல்லக் கூடுமா ?

உண்மையான நகைச்சுவையின் இலட்சியம் கேவலம் வெறுங் கேலியல்ல; ஏளனமல்ல; அது இரக்கம் நிரம்பியதோர் சிரிப்பு (Sympathetic Laughter). ஒரு குறிப்பிட்ட பாத்திரத்தையோ அல்லது சமூகத்தின் குறைபாடுகளையோ பலஹீனங்களையோ சம்பந்தப்பட்டவரின் மனம் புண்படாதவிதம், இலாகவமாகவும், இனிமையாகவும் எடுத்துக்காட்டித் திருத்தவல்லது அது.

உதாரணமாக ஒரு சிறுகாட்சி. இளைய ஜமீன்தார் ஒருவர். அவருக்குச் சற்று ஒழுங்கு தெரிந்த ஒரு சேவகன். இருவரும் ஏதோ அலுவலாகப் பக்கத்தில் உள்ள பெரிய நகரத்துக்குச் செல்கின்றனர். நாகரீக வசதிகள் நிரம்பிய ஹோட்டலில் தங்குகின்றனர். வந்ததுமே முக க்ஷவரத்தில் முனைந்து விடுகிறார் ஜமீன்தார். சேவகனுக்கு நெடு நேரமாக அடங்காத தாகம். "ஐயா! தாகமாக இருக்கிறதே!" என்கிறான். எஜமான் ஸ்நான அறையைக் காட்டுகிறார். அங்குசென்ற சேவகன் தண்ணீர்க் குழாயைக் காண்கிறான். அதில் அடுத்தடுத்து இரண்டு மரைகள் இருக்கின்றன. குழாயருகில் வலது கையைக் குவளைபோல் பிடித்துக் கொண்டு குனிந்தபடி, மற்ற கையால் ஒரு மரையைத் திருப்புகிறான். அவ்வளவுதான்! திடீரென்று, பேரிரைச்சலுடன் அறைக்குள் அடைமழை பொழிய ஆரம்பித்து விடுகிறது! அவன் திருகியமரை ஸ்நான வசதிக்கென (Shower Bath) அமைந்ததென்று கிராமவாசியான அவனுக்கு எப்படித் தெரியும்? திடுக்கிட்டுத் திகிலடைந்து, உடல் நனைந்து, உள்ளம் பதற, உளறியடித்துக்கொண்டு ஓடிவந்து விடுகிறான். இந்தக் காட்சியைக் கண்டு ஜமீன்தார் விழுந்து விழுந்து சிரிக்கிறார். இம்மாதிரிக் காட்சியைத் திரையில் கண்டால் நமக்கும் சிரிப்புவரத்தான் செய்யும். ஆனால் கூடவே அந்த சேவகனின் அறியாமைக்காக, அவன்பால் ஓர் இரக்கமும் நம்முள் உதிக்குமல்லவா? ஆம், அத்தகைய இரக்கத்தைப் பிறக்கச் செய்வதே உயர்ந்த நகைச்சுவை.

நகைச்சுவையை மிகுதியாக நடிப்பில் கையாளும் நடிகர் ஹாஸ்ய நடிகர் (Comedian). தமிழ் நாட்டில் தெருக் கூத்தில் நடமாடும் கட்டியக்காரன், நாடக மேடையில் உலவும் மாடவியன், திரையில் ஜொலிக்கும் ஹாஸ்ய நட்சத்திரங்கள் யாவரும் நகைச்சுவையை முழுக்க முழுக்கப் படைத்தவராகக் கருதப்படுபவர். பிரபலம் வாய்ந்த சார்லீ சாப்ளின், எடி காண்டர் முதலியோருக்கேற்பட்டிருக்கும் கீர்த்தியிலிருந்து நகைச்சுவை நடிப்பின் சிறப்பும் பெருமையும் நன்கு விளங்கும். ஒவ்வொரு நாடகத்திலும் ஒவ்வொரு ஹாஸ்ய பாத்திரம் இருந்தே தீரும். இம்மாதிரி ஹாஸ்ய பாத்திரங்களை சிருஷ்டிப்பதில் ஆங்கில நாடகச் சக்கரவர்த்தியான ஷேக்ஸ்பியர் மிகவும் வல்லவர். அவரது அரசவை நகைச்சுவை சிருஷ்டிகள் (Court Fools) இலட்சிய அலைகள் புரளும் நகைச்சுவைக் கடலிடை எழுந்த அமுத விளைவுகள். நம் நாட்டில் தெனாலிராமன் தெரிந்த நபரே. இந்த ஹாஸ்ய பாத்திரத்தை வடமொழியில் 'விதூஷக்' என்பர். நாம் இதையே தற்பவமாக 'விதூடகன்' என்று வழங்கி வருகிறோம்.

இனி விதூடகனையே நேரில் சந்திப்போம். நாடகக் கலையில் நுண்ணிய ஆராய்ச்சி செய்து, தமிழ் மொழியில் அக்கலைக்கான இலக்கணம் வகுத்து, நமக்கு 'நாடகவியல்' என்னும் நூலை உதவிய பேராசிரியர் திரு. வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார்,

"கதைநிகழ்ச் சியினிற்
பயன்படு வோனைத்
தராதிபர் சபையைச் சார்கன
வானைச்
சுதந்திர யூகமு மிதந்தரு
சூழ்ச்சியும்
படைத்துரை யாற்றலும்
பாரியல் பறிதலு
முடையவனாகி உண்மைதேர்
வதன்க
ணுவமையில் லோனாய்
நவநவ மாகச்
சதுர வசனஞ் சாற்று
வோனைக்
காணும் போதெலா
நகைவிளைப் போனைங்
குதூகல புருடன் விதூடக
னென்ப" என்று

விதூடகனின் சிறப்பைச் சொல்லெனும் வண்ணங்குழைத்துச்

சூத்திரமெனும் சித்திரமாக வரைந்திருக்கிறார்.

விதூடகன் முக்கிய கதைப் போக்கிற்குப் பயன்படும் ஓர் அத்தியாவசியமான சிருஷ்டியாம்; மன்னர் சபையிடை, பிரபுக்களுடன் பிரபுவாகப் பழகும் கனவானும்; சுய யோசனையும், நன்மையே தரும் சாகஸமும், போர்க்கலைப் பயிற்சியும், உலக ஞானமும், உண்மையை உணர்ந்தறிதலில் ஒப்பற்ற வன்மையும், புதுப்புது சாமர்த்தியமான வார்த்தைகள் பேசும் வாக்கு சாதுரியமும், தன்னைக் காணும் போதெல்லாம் கண்டவர் முகம் நகை கொள்ளும்படி விடா நகைப்பை ஊட்டும் விசேஷ திறமை வாய்ந்தவனும் விதூடகன்.

நம் நாட்டில் பல பத்திரிகைகளால் பிரமாதமாக காமெடியன் என்று பிரபலப்படுத்தப் பட்டு, நாடக மேடையிலும் திரையுலகிலும் நடித்து வரும் நகைச்சுவை நடிகர் மிகப் பலர். அவர்களுள் எவரிடமேனும் மேற்கூறிய அம்சங்களில் சிலவேனும் புலப்படுகின்றனவா வென்று பாருங்கள்! சூத்திரத்தில் தரிசித்த விதூடகனுக்கும் நம்மிடையே காணப்படும் காமெடியன்களுக்கும் ஒரு சிறிது உடன்பாடு தென்பட்டாலும், நம்நாடு செய்த பாக்கியத்தை எண்ணி எண்ணிப் பரவச மடையலாம்.

உங்களுக்குத் தேவையான
துணிமணிகளுக்கு

கீதா ஸ்டோர்ஸ்
லிமிடெட்

அவனுசி ரோட் :: கோயமுத்தூர்

எங்கள் டெய்லரிங் டிபார்ட்மெண்டில்
தயார்செய்யப்பட்ட ரெடிமேட் ஆடைகள்
உங்களுக்குப் பூரண திருப்தியளிக்கும்

கோயமுத்தூர் சுதேசி
வீவங் பாக்டரி லிமிடெட்

தபாலாபீஸ் ரோட் :: கோயமுத்தூர்

★

எங்கள் பாக்டரியில் உறுதியானதும்
சாயத்திற்கு உத்திரவாதமுள்ளதுமான

பெட்ஷீட்கள்
கர்டன்கள்
கோட்டிங்
ஷர்ட்டிங்
ரகங்கள்

நூதன டிசைன்களில் தயார்
செய்யப்படுகின்றன
முழு விவரங்களுக்கும்
சாம்பிள்களுக்கும் எழுதுங்கள்

Are your Sales Dull
THEN

YOU NEED AN EFFICIENT
AGENCY TO REPRESENT YOU

WE REPRESENT CLASS JOURNALS and we have an efficient organisation to catch the needs of the reading Public in Coimbatore area. We may be able to help you to push your sales.

CONSULT

THE CITY NEWS AGENCY
LEADING NEWS AGENTS
40, KARUPPA GOUNDAN STREET :: COIMBATORE

★

வசந்தா

★

★

காஞ்சனமாலா

★



ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள்

— பி. டி. சம்பந்தம்

நாடக உலகில் ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகளைத் தெரியாதவர்கள் வெகு சிலர்தான். சில வருஷங்களுக்கு முன் கோவலன் நடிப்பில் ஸ்ரீ சூரியநாராயண பாகவதர் என்பவர் நிகரிலாத கியாதி பெற்றிருந்தார். அக்காலத்தில் "கோவலனை நடிக்க இவர் பிறந்தாரோ அல்லது இவருக்காகவே கோவலன் சரித்திரம் உண்டாயிற்றோ" என்று கண்டோரெல்லாம் வாயாரப் புகழத்தக்க பேறு பெற்றிருந்தார் பாகவதர். அவர் அத்தகைய புகழ் பெறுவதற்குக் காரண பூதர் ஸ்ரீ சங்கரதாஸ் சுவாமிகள்தான்.

சிலப்பதிகாரத்தில் கதை ரூபமாகவும், எளிய நடையில் அம்மானை ரூபமாகவும் இருந்த கோவலன் சரித்திரத்தை, வெகு இடங்களில் அம்மானைப் பாடலையே தழுவி பல ராகங்களில் பற்பல நூதன மெட்டுகளில் சங்கீத உபாத்தியாயரின்றி அமைத்துக் கொண்டு அவற்றை நாடக மேடைக்கேற்றவாறு கற்பித்து, சிறப்பிக்கச் செய்தவரும் இவர் தான்.

கவித்துவம்

பெரும்பாலும் அவர் எடுத்து எழுதும் சரித்திரங்களுக்குத் தனது மெட்டுகளையே புகுத்திக் கொள்வதும் அவரியற்றும் பாடல்களைநடிகர்களுக்குத்தாமே சொல்லிக் கொடுப்பதும் வழக்கம். அவரது மெட்டுகள் வெகு சுலபமாக மனதில் படியும். ஆனால் அதிலடங்கியிருக்கும் கரடு முரடான பதங்கள் இலகுவாக வாயில் நுழையாது. ஆனால் விடமாட்டார். வாயினால் சொல்லியே பாடம் வருவிப்பதுண்டு. பிறகுதான் ஏட்டில் எழுதுவது. ஒருதரம் வந்த பாட்டை, அதன் எதுகை, மோனை, பிராசம் என்னும் கவி லக்ஷணங்கள் காரணமாக எப்போதும் மறக்க முடியாது.

வசன கர்த்தா

வசனம் எழுதுவதிலும் அப்படியே. அத்துடன் ஒரு விசேஷமும் அவரிடம் உண்டு. ஒரே சமயத்தில் ஒன்றைவிட மற்றொன்றை உயர்த்திப் பேசும் கட்டங்களில், வெகு திறமையாக வசனம் அமைப்பார். உதாரணமாக "சதி அநுசூயா" சரித்திரத்தில், கல்வி, செல்வம், பலம் இவைகளின் சக்திமார்களான சரஸ்வதி, லக்ஷ்மி, பார்வதி இவர்கள் தங்களை உயர்த்தியும் மற்றவரைத் தாழ்த்தியும் பேசி வாதிடும் சமயத்தில் நாரதர் பிராப்தமாகி சரஸ்வதியின் சார்பாக, "எம்மையுலகத்தும் யாங்காணேன் கல்வி போல் மமரருக்கும் மருந்து" என்று கல்வியைப் புகழ்ந்தும், லக்ஷ்மியின் மனங்களிக்க, "பொருளில்லார்க் கின்பமில்லை புண்ணியமில்லை.........பெருநிலத்திடை நடக்கும் பிணமென்னப்படுவரன்றே" என்று செல்வத்தைச் சிறப்பித்தும், பார்வதி பரமானந்தங்கொள்ள, "குயவனுக்குப் பலநாள் வேலை, தடி கொண்டவனுக்கு ஒருநாள் வேலை" என்று பலத்தையே மேம்படுத்தியும், தேவிமார் மூவருக்கும் பழமொழி, திருக்குறள், மூதுரை ஆதாரங்களடங்கிய வசனங்களை நாரதர் மூலமாகச் சொல்லச் செய்தார். இதிலிருந்து சுவாமிகளின் திறமையையும், திருக்குறள், மூதுரை போன்ற பல அரிய நூல்களில் அவருக்குள்ள நல்ல பயிற்சியையும் அறிந்து கொள்ளலாம்.

மலையாள பாஷைப் பயிற்சி

மதுரை ஸ்ரீ ஜெகந்நாத ஐயர் அவர்களது நாடகக் கம்பனியாகிய மதுரை பாலமீன ரஞ்சனி சங்கீத சபையில் இவர் உபாத்தியாயராக அமர்ந்து திருவனந்தபுரத்தில் நாடகம் நடத்திக்கொண்டிருந்தபோது (1918-ல்) லவகுச என்னும் உத்தர ராமாயணத்தை எழுதும்படி ஸ்ரீ ஐயர் கேட்டுக் கொண்டார். அதற்கிணங்க ஸ்ரீ ஸ்வாமியும் எழுத முற்பட்டார். கதை தெரிந்திருப்பினும் சில சந்தேகங்கள் தெளிவதன் பொருட்டு தனக்கு பேச்சளவில் கூட பரிச்சயம் இல்லாத மலையாள பாஷையை ஒரே வாரத்தில் படிக்கக் கற்றுக்கொண்டு வால்மீகியாரது ஸ்லோகங் கொண்ட மலையாள உத்தர ராமாயணத்தைத் தருவித்து ஆராய்ந்தபிறகே நாடகத்தை எழுதி முடித்தார்.

ஆராய்ச்சி முதிர்ந்த இவரால் எழுதப்பெற்ற நீண்ட வசனங்கள், சந்தங்கள், முடுக்குகளமைந்த பாட்டுகள், இவற்றைப் பாடம் செய்து பொருளுணர்ந்தவரும் கவி எழுதும் திறமையை அடைவார்கள் எனலாம். இம்மாதிரி கவித்வம் பெற்றவர்தான் இவரது சிஷ்யர்களில் ஒருவரான ஸ்ரீ கே. பி. ஆதிமூலம் என்பாரும். இவருக்குத் தமிழ் நாடகப் பிதா என்றொரு பட்டமும் உண்டு.

சகாக்கள்

இவரது காலத்தில் நாடகத் துறையில் சிறந்து விளங்கிய கவிவாணர்கள் இருவரே. ஸ்ரீ முத்துசாமி கவிராயர் ஒன்று. ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளை இரண்டு. இவர்களது கவியின் பாகம், இடை, நுனிக் கரும்புபோன்றனவாம். இவைகளில் அடிக்கரும்பு போன்ற ருசியுள்ளது ஸ்ரீ சுவாமிகளது பாடல். (அதிகக் கஷ்டங் கொண்டுமென்ற பிறகே சுவை பெறுதல். ஊன்றிக் கவனித்த பிறகே பொருள் சுவையை அறியக்கூடும்.) இடைக் கரும்பு போன்றது ஸ்ரீ கவிராயரது பாடல் (மென்றலாகிய கஷ்டம் அதிகமின்றி சுவை கொள்ளுதல் போல்). பாடல் பாடம் செய்வோருக்குக் கஷ்டமின்றி நாதச்சுவையோடு பொருள் சுவையும் பெற அமைந்துள்ளது. நுனிக் கரும்பின் தன்மையது ஸ்ரீ சிவஷண்முகம் பிள்ளையாரது பாடல் (மென்மையும் இள இனிமையும்). யாவரும் எளிதில் பொருள் அறியத் தக்கதாக அமைந்திருத்தல்.

பிரியாநட்பும் பேரன்பும்

இவர்களில் சுவாமியும் கவிராயரும் முதிர்ந்த நேசமுடைய

வர்கள். அடிக்கடி சந்திப்பதும் உண்டு. அப்படிச் சந்திக்கும் காலங்களில் அவர்களது உத்தரப் பிரதியுத்தர, வினா விடை வாக்குவாதங்களால் எழும் பதப் பொருட்சுவை யமுதம், தமிழ் வாசம் அறிந்தவர்களுக்குத் தெவிட்டாத இன்பம் கொடுத்து, இவர்கள் என்றும் பிரியாதிருக்க வேண்டும் என்னும் எண்ணமும் கொடுக்கும். இவர்களது சந்திப்புக் காலங்களில் ஸ்ரீ கவிராயருக்கு வேண்டிய சகல சௌகரியங்களும் சுவாமியவர்களாலேயே விருப்போடு நடத்தப் பெறும். இந்தச் செயலானது அவர்களது பிரியா நட்பிற்கும், பேரன்பிற்கும் அஸ்திவாரமாக அடி கோலிக்கொண்டேயிருந்தது. இவர்களது அன்பிற்கறி குறியாக சுவாமி எழுதிய பல சரித்திரங்களில் கவிராயரது பாடல்களும் ஒலிக்கும். மனோஹரா என்னும் நாடகத்தில் வசந்த சேனைக்குத் "தூக்கம் பிடிக்க வில்லை மன ஏக்கம்" என்னும் தர்பார் இராகப் பாட்டு இவ் வண்ணம் அமைந்ததே.

வித்வ பரம்பரை

சில வருஷங்களுக்கு முன் தென்னாட்டில் மிருதங்கம், கஞ்சிரா வித்தையில் புகழோங்கியிருந்த ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி பிள்ளை அவர்களின் குரு ஸ்ரீ மாமுண்டியா பிள்ளை என்று தென்னாட்டவர் வெகுவாக அறிந்ததே. அந்த மாமுண்டியா பிள்ளை ஸ்ரீ சுவாமியவர்களின் சகோதரர் என்பதும் கர்ண வியாபகம். சுவாமியவர்கள் சகோதரரது வித்வத்திறத்தை சதா ஞாபகம் கொள்ளுமாறு அவரால் ஜதி சொல்லச் செய்து (அடதாள திரிச்ரத்தில்) சிவன் பேரில் ஒரு திருப்புகழ் இசைத்து அடிக்கடி அதைப் பாடிக்கொண்டிருந்ததும் உண்டு. அந்தப் பாட்டின் தலைப்பு, "ஆண்ட சக்ரவர்த்தி எனுமணி முடி புனை" என்பதாம். இப்படியே அநேகரது ஞாபகார்த்தத்தின் பொருட்டு பல பாட்டுகளையும் இயற்றி இருக்கிறார்.

புதிய நாடகக் கம்பெனி

1919-ல் ஸ்ரீ ஜெகந்நாதய்யரது மதுரை பால மீன ரஞ்சனி சங்கீத சபை சென்னைக்கு வந்த சில மாதங்களுக்குள் (அக்காலத்தில் இருந்த பிள்ளைகளது அபாக்கியந்தானோ என்னவோ) சுவாமி கம்பனியை விட்டுப் பிரிய நேர்ந்தது. மதராஸில் எங்களை விட்டுப் பிரிந்தார். மதுரைக்குச் சென்று இதைவிடப் புருஷார்த்த காரியத்தைப் புரிந்தார். சகல அதிகாரமும் தனதாக வைத்து தத்வமீன லோசனி வித்வ பால சபா என்றொரு நாடகக் கம்பனியை உண்டாக்கி, பரபரப்புடன் பல நாடகங்களைக் கற்பித்து, தென்னாடு முழுதும் திக்கு விஜயம் செய்துவந்தார். அவரது தத்வ மீனலோசனி வித்வ பால சபை என்னும் ஹாரத்தில் பதிந்திருந்த மணிகள்தான், டி. கே. பிரதர்ஸ் என்னும் சிறந்த நடிக திலகங்கள். இவர்கள் இன்றும் ஒரு நாடகக் கம்பனியை நடத்தி நற்கியாதி பெற்று வருகிறார்கள் என்றால் அது குரு பீடத்தின் மகிமைதான் அல்லவா?

அந்திய காலம்

இத்துணை கலாநிதியமாம் ஸ்வாமியவர்கள் தமது வாழ்நாட்களில் சில கஷ்ட நஷ்டங்களையும் அடைந்தார் எனினும் அவை யாவும் பற்றற்றாரின் பிராரத்வம் என்றே சொல்லவேண்டும். ஏனெனில், "பொருளிலார்க் கிவ்வுலகமில்லை........." என்று பலருக்குப் பாடம் செய்து வைத்த அவர், தனது பொருள் தனைப் போற்றி வாழ்ந்தாரில்லை. ஆகவே இவரது ஆத்மாவும் கடனைக் கழிக்கக் காத்திருந்ததென்றே துணிய வேண்டியதோடு நில்லாது,

"காலத்தினாற் செய்த நன்றி
சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது;
தினைத்துணை நன்றி செய்யினும்
பனைத்துணையாக் கொள்வர்
பயன் தெரிவார்;
எந்நன்றி கொன்றார்க்கும்
உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

என்றவாறு மனிதவாழ்க்கைக்கு வன்மைதரும் திருவள்ளுவரது வாக்கியத்தால் சுவாமியவர்களைத் தோத்தரிக்கவும் தூண்டுகிறது. ஆனதால் ஸ்ரீலஸ்ரீ சங்கரதாஸ் சுவாமியவர்கள் இறந்தும் இறவாதாரே!

ஆஸ்திரியாவிலே சுமார் 600 தியேட்டர்கள் தான் இருக்கின்றன. பலதியேட்டர்களில் வாரம் இருமுறை அல்லது ஒருமுறைதான் படம் காண்பிக்கப்படும். ஆனால் வாரம் இருமுறை செய்திப் படங்கள் காட்டப்படும்.

* * *

ஜப்பானிய நட்சத்திரங்கள் மிக்க சிரமப் பட்டு உழைக்கிறார்கள்; நாள் ஒன்றுக்கு 16 மணி நேரங்கூட சில சமயம் உழைக்கிறார்கள்.

26 & 27, EAST MADA STREET — MYLAPORE P. O. — MADRAS

சினிமாவும் சங்கீதமும்

"அம்பலவாணன்"

பேசாப் படங்கள் வெளிவந்த காலத்தில் அவற்றில் நடிப்பு ஒன்றே பிரதானமாக விளங்கி வந்தது. பின், காலச் சுழலின் வேகத்தாலும், நாகரீக முதிர்ச்சியாலும் பேசும் படங்கள் தோன்றி பாட்டையும், பின்னணி சங்கீதம் போன்றவைகளையும் பிரதானமானவைகளாக்கச் செய்துவிட்டன.

அக்காலத்தில் ஜனங்கள்பேசும் படங்களின் மூலமாக வெளிவர ஆரம்பித்த பாட்டுகளை வெகுவாக ரஸிக்கவும் ஆரம்பித்தார்கள். இதனால் 'வள்ளி திருமணம்' கர்ணாமிர்தமான 61 பாடல்கள் நிறைந்த 'கிருஷ்ண லீலா' போன்ற 'நூற்றுக்கு நூறு பேசும் படங்கள்' பாட்டுகளை மட்டும் பிரதானமாகக் கொண்டு வெளிவந்தன. இதையும் அக்காலத்திய ரஸிகர்கள் ரஸித்துத்தான் வந்தார்கள்.

நாளடைவில் "ஆ" என்றால் பாட்டு, "ஓ" என்றால் பாட்டு என்று தொட்டது தொண்ணூறுக்கும் பாட்டுகள் பாடும் வழக்கம் வளர்ந்து வந்ததாகையால், இந்த அசந்தர்ப்ப, அசம்பாவிதப் பாட்டுகள் குறைய வேண்டும் என்ற எண்ணம் ரஸிகர்களின் உள்ளத்தில் உறுத்த ஆரம்பித்தது. அதன் பயனாய் பட முதலாளிகளும் பாட்டுகளைப் படிப்படியாய்க் குறைத்துவர ஆரம்பித்தார்கள். தமிழ்ப் படங்களில் ஆரம்பத்திலிருந்த 60 பாட்டுகள் தற்போது முப்பது பாட்டுகளுக்கு வந்து சேர்ந்திருக்கின்றன. இது பெரிதும் பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

பேசும் படங்களில் பாட்டின் ஸ்தானம் என்ன என்பதை அறிந்துகொள்வது அவசியம். பொதுவாக சினிமாவின் நோக்கம் பொழுது போக்கு என்று வைத்துக் கொள்ளலாம். கல்வியூட்டல் பிற்பாடுதான். பொழுது போக்கை நாடுபவன் தன் கவலையையும், சோர்வையும் மறந்து தெம்பு அடைய ஒரு சினிமாப் படம் உதவிபுரியுமானால் அவன் எவ்வளவோ சந்தோஷப்படுவான். அத்துடன் அவனுக்குப் பொருள் விளங்கக் கூடியபடி எளிய நடையிலும், இனிய மெட்டிலும் அமைந்த ஒன்றிரண்டு பாட்டுகளைப் பொருத்தமான இடங்களில் படத்தையொட்டிக் கேட்க நேர்ந்தால் அவன் சந்தோஷம் பன்மடங்கு பெருகி, பெரிதும் திருப்தியடைவான். அப்படத்தை மேற்கொண்டு ஒன்றிரண்டு தடவை பார்க்கக்கூட அவன் உள்ளம் தூண்டும். இதிலிருந்து பேசும் படத்தில் பாட்டின் ஸ்தானம் என்ன என்று நாம் அறிந்து கொள்ள முடிகிறது. அத்துடன் பேசும் படத்தில் புகுத்தப்படும் பாட்டுகள் (1) எளிய நடையில் அமைந்திருக்க வேண்டும், (2) அவை இனிமையாக இருக்க வேண்டும், (3) சந்தர்ப்பத்திற்கேற்ற இடங்களில் பாடப்பட வேண்டும், (4) புகுத்தப்படும் பாட்டுகளும் அதிகமாக இருப்பது கூடாது என்னும் விஷயங்கள் புலனாகும். பாட்டுகள் எளிய நடையிலமைந்து இனிமையாகப் பாடப்பெறினும் அளவுக்கு மீறிப் புகுத்தப்பட்டால் படம் பார்ப்போருக்குச் சலிப்பை உண்டாக்கிவிடும் என்பது பலரறிந்த உண்மை.

தமிழ்நாட்டில், நல்ல கருத்தமைந்ததும், எளிய நடையிலானதுமான பாட்டுகளை சினிமாவுக்காக அமைத்து வரும், ஸ்ரீ பாபநாசம் சிவன் போன்றோருக்கு நல்ல கிராக்கியும், மதிப்பும் இருந்து வருவது நமக்குத் தெரிந்த விஷயந்தான்.

ஸ்ரீ எம். கே. தியாகராஜ பாகவதர், ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி ஆகியவர்களின் இன்குரற் பாடல்களைக் கேட்கத்தான் 'அசோக்குமார்'. 'சிவகவி', 'சகுந்தலா' முதலிய படங்களைப் பொதுஜனங்கள் பலமுறை திரும்பத் திரும்பப் பார்த்து விடுகிறார்கள்.

இதிலிருந்து எளிய நடையிலமைந்த பாடல்களுக்கும், இனிய குரலுடையவர்களுக்கும் தமிழ் நாட்டில் பஞ்சமில்லை என்று தெரிந்து கொள்கிறோம். சந்தர்ப்பத்திற்கேற்ற இடங்களில் பாடல்கள் பாடப்பட வேண்டும் என்ற விஷயமும், பாட்டுகள் அளவுக்கு மீறி இருப்பது கூடாது என்ற விஷயமும் தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் அவ்வளவு திருப்தியளிக்கவில்லை என்றுதான் சொல்ல முடிகிறது.

பாட்டுகளை அசந்தர்ப்பமாயும் அனாவஸ்யமாகவும் புகுத்தும் வழக்கம் இன்னும் நின்றபாடில்லை. இந்திய சர்க்காரின் கட்டுப்பாட்டுக்குட்பட்டு 11,000 அடிகளுக்குள் பிடிக்கப்பட்ட இரண்டொரு படங்களில்கூட அசந்தர்ப்பமாயும், அனாவஸ்யமாயும் பாட்டுகள் புகுத்தப்பட்டிருக்கின்றன. "இன்று கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்" என்று அன்று பார்த்தன் பீமனுக்குச் சொன்னது போல், இக்குறைகளைப் பூரணமாக நிவர்த்திக்க நாம் காலத்தை எதிர் நோக்கிக் காத்திருக்க வேண்டியதுதான்.

கர்நாடக சங்கீதம்

பொதுவாக தமிழ்ப் படங்களில் கர்நாடக சங்கீதத்துக்கே முழு ஸ்தானமும் அளிக்கப்பட வேண்டும். இதற்கு தேசிகரும் சாமாவும் திறம்பெற நடித்த 'ஜெமினி நந்தனார்' ஒரு நல்ல வழி காட்டி. சமூகப் படங்களில்கூட கர்நாடக சங்கீதத்திற்கே பிரதானம் அளிக்கப்பட வேண்டும். ஒரு சில நல்ல வட இந்திய மெட்டுக்களைப் பின்பற்றுவதும் அவ்வளவாகத் தவறல்ல.

பின்னணி சங்கீதம்

பின்னணி சங்கீதம் தற்போது ஒரு படத்தின் பிரதான அம்சங்களில் ஒன்றாகி விட்டது. சமய சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு பல விதமான உணர்ச்சிகளையும் படம் பார்ப்போரிடம் உண்டாக்கிவிடும் சக்தி இதற்கு உண்டு. தற்போது வரும் தமிழ்ப் படங்களில் பெரும் பான்மையானவைகளில் நாம் நல்ல பின்னணி சங்கீதத்தைக் கேட்கிறோம். இது

இன்னும் அபிவிருத்தியடையும் என்றும் நம்ப இடமிருக்கிறது.

இரவல் சங்கீதம்

படம் சம்பந்தப்பட்ட பாட்டுகள், அநேகமாய் முதலிலேயே பிரத்தியேகமாய் தொனிப்பதிவு செய்யப்படுகின்றன. பிற்பாடு படப் பிடிப்பின் போதும் அப்பாட்டைப் பாடச் செய்து வாயசைப்புக் கேற்ப பாட்டை இணைத்து விடுவார்கள். இதனல் பாடத் தெரியாதவர்களும், குரலினிமையில்லாதவர்களும் கூட இனிமையாகப் பாடுவதாகக் காட்ட முடியும். இனிய குரலுடையவர்களைப் பாடச் செய்து தக்க பின்னணி கீதத்துடன் அவர்கள் பாட்டை தொனிப் பதிவு செய்து கொண்டு, அப்பாட்டிற்கேற்ப பாடத் தெரியாத நடிகர்களை வாயசைக்கச் செய்து பாட்டை இணைத்து விடுவார்கள். இம்முறை சௌகரியமானது தான் என்ருலும் பிறர் கொடுக்கும் இரவல் குரலாலேயே தாங்கள் பிழைக்க வேண்டியிருப்பது பாடத்தெரியாத நடிகர்களுக்கு ஒரு பெரிய குறையாகும். பாடத் தெரியாதவர்களுக்கு அல்லது இனிமையான குரல் இல்லாதவர்களுக்கு கூடிய வரையில் பாட்டுகள் கொடுக்காம லிருப்பது நல்லது. பிரபல வட இந்திய நடிகரும் ஆயிரக் கணக்காகச் சம்பளம் வாங்குபவருமாகிய சந்திரமோகன் இது வரையில் பாடாமலேயே எத்தனையோ படங்களில் நடித்துப் புகழ் பெற்றிருக்கிருர் என்பதை நாம் மறக்கக்கூடாது.

எனது பிரார்த்தனை

கே. சாரங்கபாணி

திரைப்படங்கள் நம்நாட்டில் பல வருஷங்களுக்கு முன்பிருந்தே காட்டப்பட்டு வருகின்றன. அக்காலத்தில் பெரும்பாலும் அன்னிய பாஷைப் படங்களே காட்டப்பட்டு வந்தன. அவற்றை பாஷை புரிந்த ஒரு சிலரும், பாஷை புரியாதவர்களும் பார்த்து சம்பவங்களாலும், முக அங்க பாவனைகளாலும் ஓரளவு கதையைப் புரிந்துகொண்டு அனுபவித்து வந்தார்கள்.

படிப்படியாய் பேசாப்படங்கள் பேச ஆரம்பித்ததோடு அவை தமிழிலும் பேச ஆரம்பித்து பட உலகில் விஸ்தாரமாக இடங்கொண்டு விட்டன. இதனல், தமிழின் மேன்மையும் புராணங்களின் பெருமையும், கர்னாடக சங்கீதத்தின் உயர்வும் நன்ருக விளங்க வசதி ஏற்பட்டு, ரஸிகர்களுக்குப் பேரானந்தமளித்து வருகிறது; இன்னும் அளித்துவரும்.

இத்தகைய பேசும் படங்களாகிய திருவிளக்குகளுக்கு நம் பேசும் படம் தூண்டுகோல்போல் இருந்து கலையின் முன்னேற்றங் கருதி தொண்டாற்றி வருகிறது. தைப் பொங்கலன்று இது பொங்கல் மலராக வெளி வருவதையறிந்து எனக்கும் ரஸிகர்களுக்கும் இது ஒரு பெரும் விருந்து என மகிழ்ச்சியடைகிறேன்.

பேசும் படம் நீடூழிகாலம் வாழ்ந்து கலாசேவை புரிந்துவர கலாதேவியைப் பிரார்த்திக்கின்றேன்.

மாடர்ன் ஏஜென்ஸீஸ்

அவனசி ரோட்

கோயமுத்தூர்

★

உலகம் எங்கும் கீர்த்திபெற்ற

H. M. V.

அமெரிக்கன் ரேடியோ

இன்னும் தேவையான இதர ரேடியோ சம்பந்தமான சாமான்களும், மில் ஸ்டோர்களும், மலிவாகவும் உத்திரவாதத்துடனும் கிடைக்கும்

"இந்தியன் எக்ஸ்பிரஸ்"

இங்கிலீஷ் தினசரி பத்திரிகையை தவருமல் வாசியுங்கள்

BLADEX

ப்ளேடெக்ஸ்

★

துருப்பிடிக்காத இரண்டு பழைய ப்ளேடுகளும் ஒருபாட்டில் ப்ளேடெக்ஸும் ஒரு வருஷத்திற்கு உங்கள் முக விலாசத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் வைத்திருக்கும்

ப்ளேடெக்ஸ் பாட்டில் 6 அணுதான்

மற்றெல்லா முறைகளையும்விட மலிவானது

SOLE AGENTS:

MANI & CO.

R. S. PURAM :: COIMBATORE

நேயர் பேச்சு

தமிழ்ப் படங்களும் விமர்சனங்களும்

தற்காலத் தமிழ்ப்பட நிலைமை பின்னேக்கிச் சென்று கொண்டிருக்கிறது. கலை, தொழில் இவைகளின் வளர்ச்சியைச் சிறிதும் கருதாது, சுயநலத்தை எண்ணி, ஆபாஸங்களை ஹாஸ்யமென்று படங்களில் புகுத்துகிறார்கள் படமுதலாளிகள். பொது ஜனத்தை மோசம் செய்து பணம் பறிக்கும் வழியே இது.

பொதுஜன மனப்பான்மையும் ஒருவிதத்தில் இதற்குக் காரணமாகும். இந்த ஆபாஸத்தைப் பார்க்கத் திரும்பத் திரும்பச் செல்லும் மஹாஜனமே, இந்த அவகேடான நிலைக்குக் காரணம். கொஞ்ச காலமாக இந்த மனப்பான்மை மாறிவருகிறது. அடியுடன் அவர்கள் மனத்தை மாற்றச் சரியான படங்களை எடுக்கப் படமுதலாளிகள் ஆரம்பிக்கும் வரை படக்கலை முன்னேருது.

இந்த விஷயத்தில் பொதுஜனத்திற்கும், படமுதலாளிகளுக்கும் உதவி செய்யக்கூடியவர்கள் விமர்சகர்களே. சரியான விமர்சனங்களால் பொது ஜனங்களின் மனத்தை மாற்றி நல்ல வழியில் திருப்ப வேண்டியது அவர்கள் கடமை. விமர்சகர்கள் சிறிதும் பயமின்றி, பாரபக்ஷமற்ற உண்மையான விமர்சனங்களை எழுதவேண்டும். கலை முன்னேற்றத்திற்கும், படங்களின் நல்ல நிலைமைக்கும், சரியான விமர்சனங்கள் அத்தியாவசியமானது.

பட முதலாளிகள் விமர்சகர்கள்மீது கோபங் கொள்ளாது, அவர்கள் எழுதியிருப்பவைகளில் நியாயமான குறைகளை, மென்மேலும் எடுக்கும் படங்களில் தீர்த்துவைக்க வேண்டும். பட முதலாளிகளுக்கு விமர்சகர்கள் விரோதிகள் அல்ல. படங்களின் மேன்மையையும் பட முதலாளிகளின் நன்மையையும் கருத்தில் கொண்ட ஆப்த நண்பர்கள் இவர்கள். பொதுஜன ஊழியர்கள். இவைகளைப் படமுதலாளிகள் ஒருநாளும் மறக்கக்கூடாது.

விமர்சகர்கள் தங்கள்மீது குறைகள் சொல்ல இடங்கொடுக்காமல், கலையின் நுட்பங்களை அனுபவத்தில் அறிந்து, சரியான படி விமர்சனங்கள் எழுதினர்களானல், தமிழ் சினிமாக்கலைக்கு அவர்கள் செய்யும் தொண்டு போற்றத்தக்க தாகும். அப்பொழுதுதான் அவர்களும் உண்மையான பொதுஜன ஊழியர்கள் ஆவார்கள்.

வெ. ராஜகோபால், கோவை

* * *

ஏழைக்கிரங்குங்கள்

நடிக நக்ஷத்திரங்களே! ஒரு வார்த்தை! அதோ பாருங்கள்! உங்கள் நாட்டின் கதியை!

பிடி அரிசிக்குத் துடியாகத் துடிக்கும் பிராணன்களை - நாழியரிசிக்கு வழியின்றி விழிக்கும் ஏழைகளை - கால் வயிற்றுக் கஞ்சிக்குக் கதறிக் கதறிக் கலங்கும் கண்ராவிகளை - ஒரு கவளம் அன்னத்திற்கு அலறி அலறி அழும் ஆன்மாக்களைக் கண்ணெடுத்துப் பாருங்கள்! கருணை கொள்ளுங்கள்.

கேவலம் ஆடிப்பாடி உண்டு உறங்கும் தொழிலோடு ஆனந்தங் கொள்ளாது அவர்களது பசிநோயை, கரவும் வியாதியைப் போக்குவதில் ஈடுபடுங்கள்.

நடிக சிகாமணிகளே! ஆயிரம் ஆயிரமாக லக்ஷம் லக்ஷமாக சம்பாதிக்கிறீர்கள். ஆனல் அப்பொருளைக் கேவலம் சிற்றின்ப நுகர்ச்சிக்கும், மதியிழக்கும் மதுவிற்கும், குடிகெடுக்கும் குதிரைப் பந்தயங்களுக்குமாக வீண் விரயம் செய்கிறீர்கள்!

கடவுள் உங்களுக்கு ஏராளமாகக் கொடுத்திருக்கிறார். அவைகளை நல்வழியில் தகுந்த முறையில் செலவு செய்து புகழும் புண்ணியமும் அடையத்தக்க சந்தர்ப்பத்தையும் கொடுத்திருக்கிறார். இவ்வித தருணத்தைக் கைநழுவ விடும் அவிவேகிகளாக இருக்காதீர்கள்.

"தனி யொருவனுக்கு உணவில்லை எனில் சகத்தினை அழித்திடுவோம்" என்று நம்நாட்டுப் பெரும் புலவர் பாரதியின் பொன் மொழிகளைக் கைப்பற்றுங்கள். உங்கள் ஏழைச் சகோதரர்களைப் பஞ்சத்தின் கொடிய பற்களினின்றும் காப்பாற்ற முற்படுங்கள்.

எச். விஜய குமார், கோவை

* * *

கலைத்தொண்டன்

நம் "பேசும் பட"த்திற்கு இரண்டாவதாண்டு பிறந்துவிட்ட தென்பதை அறிய மிகவும் சந்தோஷம். 'கலைத்தொண்டன்' நாளுக்கு நாள் பூரண வளர்ச்சியைப் பெற இறைவனை இறைஞ்சுகின்றேன்.

சினிமா 'விசிறி'களுக்கும், படமுதலாளிகளுக்கும், நடிகர்களுக்கும் ஒருங்கே நன்மை பயக்கும் பத்திரிகை இது ஒன்றுதான் என்று தலை நிமிர்ந்து சொல்லலாம். விமர்சனம் என்ற பெயரை வைத்துக் கொண்டு, தன் பத்திரிகைக்கு கட்டுரை எழுதும் நடிகர்களையும், தனக்குப் பிடித்த நடிகைகளையும் தூக்கிப் பேசும் சில பத்திரிகாசிரியரின் ஈனத் தொழில் நம் 'பேசும் பட'த்தில் இல்லை என்பதை எவரும் மறுக்க முடியாது.

"அன்பர்கள் அபிப்பிராயங்களும்" "தமிழ் நாட்டு நடிக மணிகளும்" மிகவும் வரவேற்கத் தகுந்த விஷயங்களாம்.

திரு. பி. எஸ். என். அவர்கள் சினிமா உலகிற்கு ஒரு மகத்தான சேவை புரிந்து வருகிறார் என்று சொல்வது மிகையாகாது. நடிகர்களுக்கும், முதலாளிகளுக்கும், தியேட்டர் முதலாளிகளுக்கும், டைரக்டர்களுக்கும் இவர் அவ்வப்போது விடும் சாட்டை உண்மையிலேயே நல்லபயனைக் கொடுக்கும் என நம்பலாம்.

டைரக்டர் ராஜா சாண்டோவின் வாழ்க்கைச் சித்திரம் எவ்வளவு நயமாக இருக்கிறது! வாழ்க்கையின் மூலை முடுக்குகளிலெல்லாம் அடிபட்ட இவர், படங்களை

நன்றாக டைரக்ட் செய்வது வியப்பாகாது.

ஆனால் ஒரு குறை. அதை என் கால்கள் சொல்லுகின்றன, ஏஜெண்டு வீட்டுக்கும் என் வீட்டுக்கும் நடந்து நடந்து என் கால்கள் காய்த்துப் போயின. 1ம் தேதி வர வேண்டிய பத்திரிகை 25ம் தேதி வந்த அதிசயம் தான் தெரியவில்லை!

அடுத்த மாதம் முதலாவது எங்களை ஏமாற்ற மாட்டீர்கள் என நம்புகிறேன்.

பி. ஆர். சுப்பையா,
திருநெல்வேலி

* * *

படமுதலாளிகளே!

பழைய புராணப் படங்களே நல்ல பணவசூலை அளிக்கும் என்று நம்பும் தமிழ்ப்பட முதலாளிகளே! தயவு செய்து வடநாட்டுப் புராணப் படங்களான 'பரதன் சந்திப்பு', 'தியானேஷ்வர்', 'ராமராஜ்யம்', 'சகுந்தலா' முதலிய படங்களைப் பார்த்தாவது புராணப் படங்களை எப்படிப் படமெடுப்பது என்று தெரிந்து கொள்ளுங்கள். காட்சி ஜோடனை, படப்பிடிப்பு, ஒளிப்பதிவு, பாத்திரங்களுக் கேற்ற நடிகர்கள், வசன நடை, இனிய சங்கீதம் முதலியவற்றி லெல்லாம் வடநாட்டார் எவ்வளவு தூரம் சிரத்தை காட்டுகிறார்கள்? எவ்வளவு முன்னிலையில் இருக்கிறார்கள் என்பதைப் பாருங்கள்! அவர்களுக்கு மேற்படி படங்கள் நல்ல வசூலைக் கொடுக்கவில்லையா? பின் நீங்கள் தயாரிக்கும் புராணப் படங்கள் தோல்வியடைவதேன்? சற்று யோசனை செய்து அதற்கான காரணங்களைக் கண்டறியுங்கள். பின் அவர்களைப் போல் நல்ல உயர் தரமான புராணப் படங்களைத் தயாரிக்க முற்படுங்கள்.

வ. கண்ணாயிரம், சென்னை

* * *

புராணப் படங்களும் அவசியமே!

வெள்ளித்திரைக்கு சமூக சரித்திர முதலிய படங்கள்தான் வேண்டும் என்று சொல்ல முடியாது. புராணப் படங்களும் அவசியமே! ஆனால் புராணப் படங்களை தயாரிப்பதில் கவனிக்க வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. புராணக் கதைகள் அதனதன் உண்மை தோற்றத்துடன் சித்தரிக்கப் பட்டால் அவைகளை பண்டிதர் முதல் பாமரர்வரை பார்த்துப் பரவசமடையலாம். ஒரு புராணக் கதையை படம்பிடிக்க வேண்டுமானால், அக்கதையை நன்றாய் ஆராய்ச்சி செய்த பிறகே படம்பிடிக்க வேண்டும். புராணம் நிகழ்ந்த காலம் எது? அக்காலத்து மக்கள் எப்படி யிருந்தனர்? அவர்களுடைய பழக்க வழக்கங்கள் எத்தகையன? அவர்களின் நாகரீகம் எந்நிலையில் இருந்தது? அவர்கள் அணிந்த ஆடைகளும் அணிகளும் யாவை? இவை போன்ற மற்ற விஷயங்களை நுணுக்கமாய் ஆராயவேண்டும். இவ் விஷயங்களுக்குத் தக்கபடி சீன்கள் ஜோடிக்கப்பட வேண்டும். இக் கதைகளுக்காக பொறுக்கப்படும் நடிகர்கள் நடிப்புக் கலையில் சிறந்தவர்களாக விளங்க வேண்டும். மேல்நாட்டில் கதாபாத்திரங்களை தேர்ந்தெடுப்பதில் அலெக்ஸாண்டர் கோர்டா (Alexander Korda) போன்ற டைரக்டர்கள் எடுத்துக்கொள்ளும் சிரத்தையிலும் சிரமத்திலும் நூற்றில் ஒருபங்காவது நாம் உண்மையாக எடுத்துக் கொண்டால் மிக மிக உன்னதமான புராணப் படங்களைப் பிடிக்கலாம். புராணக் கதைகள் நிகழும் காலம், இடம், முதலியவற்றையும் அதற்குரிய பொருள்களையும் நன்கு ஆராய்ந்து தெரிந்துகொள்ள வேண்டும். சரிவரப் பிடிக்கப் பட்டால் புராணப் படங்களின் பேரில் சிலருக்கு இருக்கும் வெறுப்பு விருப்பாக மாறிவிடும் என்பதில் சந்தேகமில்லை.

கே. கோபால கிருஷ்ணன்,
கோவை

கதைகள்

தென்னிந்தியப் பட முதலாளிகளின் செவிகளெல்லாம் வர வர செவிடாகிக் கொண்டு வருகிறதோ வென்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. ரசிகர்களின் அறை கூவலைவிட 11,000 அடிகள் போதாது என்ற அவர்களது கூச்சல்தான் தடபுடலாயிருக்கிறது. புளித்துப் போன புராணக் கந்தல்களைப் படமெடுத்துக் குவிக்கிறார்களே யொழிய கவர்ச்சிகரமான சமூக, சரித்திரப்படங்களுக்குக் கடும் பஞ்சம் வந்து விட்டது. நந்தனாரென்றும், நம்பியாண்டார் நம்பியென்றும் மக்களின் மடமையையும் மூட பக்தியையும் வளர்க்கக் கூடிய படங்களை எடுக்கிறார்களே யொழிய தற்கால நாகரீகத்திற் கேற்ற படங்கள் வருவதாகக் காணோம். அப்படி யொன்றும் நமது நாட்டில் சமுதாய வளர்ச்சிக்கான கதைகள் இல்லாமலுமில்லை. புனிதக் கடவுள் புத்த தேவனின் சரித்திரம் படமெடுக்கத்தகுந்த ஒரு உண்மைக் கதை. கருணைக் கடலாய் போதி நிழலிலமர்ந்து மோனத் தவமியற்றிய அக்குணக் குன்றின் வரலாறு திரைப் படத்திற்கு எவ்வளவு பொருத்தமான அழகிய கதை! அருந்ததி என்றும் அபயாம்பிகை யென்றும், கலைத்தொண்டர்கள் அனாவசியமாகத் தமது அருந்திறனை விரயம் செய்வதைவிட இது போன்ற அறியாமையை அகற்றக்கூடிய அழகிய கதைகளைப் படமாகப் பிடித்தால் நமது நாட்டிற்கு எத்துணை நலன் விளையு மென்று கலையுலகம் சிந்திக்காதா? முதலாளிகள் இதைக் கவனித்து அவ்வன்புக் கடவுளை நிழற்பட வுலகிற்குக் கொணர மாட்டாரா? என் போன்ற ரசிகர்கள் மகிழ்வுறும் அந்நன்னாள் எந்நாளோ?

S. N. ராமகிருஷ்ணன், ஸ்ரீரங்கம்

* * *

விளம்பர விநோதம்

ஆசை காட்டும் பட முதலாளிகளே! உங்களிடம் ஒரு சினிமாப் படம் எடுப்பதற்கான பணம் இருக்கிறதா? நடிகர்களுக்குக் கொடுப்பதற்கான பணமாவது இருக்கிறதா? தரித்திர பக்ஷம் விளம்பரம் செய்பவர்களுக்குக் கொடுப்பதற்கான பணமாவது கையில் இருக்கிறதா? இல்லையென்றால் ஏன் போலி விளம்பரம் செய்கிறீர்கள்? "இதோ வருகிறது; கூடிய சீக்கிரம் எதிர் பாருங்கள்" என்றெல்லாம் விளம்பரம் செய்கிறீர்கள். இந்த வருஷத்திய முதல்தரப் படமென்றும், லக்ஷக் கணக்கான பொருட் செலவில் தயாராகிறது என்றெல்லாம் கொட்டை எழுத்தில் பிரசுரிக்க

கோவையில் மூன்று பிரபல தியேட்டர்கள்

வெறைட்டி ஹால்

ஹிந்திப் படங்களில்
சிறந்தவை
இத்தியேட்டருக்கு
வருகின்றன

★

பாலஸ் தியேட்டர்

இத்தியேட்டரில்
ஆங்கிலப் படங்கள்
காண்பிக்கப்பட்டு
வருகின்றன

8 FEB 1944
MADRAS

★

எடிசன்ஸ் தியேட்டர்

இத்தியேட்டரில்
சிறந்த
தமிழ்ப் படங்கள்
காண்பிக்கப் படுகின்றன

★

வெறைட்டி ஹால் டாக்கீஸார் கோவை வாசிகளுக்கு
பல ஆண்டுகளாக சிறந்த பொழுதுபோக்கை
அளித்து வந்திருக்கின்றனர்

★

கூடிய சீக்கிரம் வெறைட்டி ஹாலுக்குவரும் சில ஹிந்திப் படங்கள் :

பாஞ்சோலி :

- ஜமீந்தார்
- பூன்ஜி

ஷாலிமார் :

- பிரேம் சங்கீத்

சாந்தாராம் தயாரித்த

- சகுந்தலா

ரஞ்சித் :

- பக்த சூர்தாஸ்

பிரபாத் :

- புத்தாவது மணி

வும் செய்கிறீர்கள். எல்லாம் விளம்பரத்தோடு சரி. படமோ வெளிவருவதில்லை. எப்படி வெளி வரும்? படம் பிடித்திருந்தால் தானே!

சினிமா ரஸிகர்களுக்கு இதெல்லாம் தெரிகிறதா? 'ஏன் அந்தப் படத்தை இன்னும் காணோம்? இந்தப் படம் ஏன் இன்னும் ரிலீஸ் ஆகவில்லை? இன்னும் ஷூட்டிங் முடியவில்லையா?' இப்படியெல்லாம் கேட்டுக் கொண்டே இருக்கவேண்டியது தான். அதற்குள் இன்னொரு பெரிய போலி விளம்பரம், பெரிய பெரிய நடிகர்களின் பெயருடன் காக்ஷியளிக்கும். ரஸிகர்களின் கவனம் அங்கு சென்று விடுகிறது. பிறகு இதே கதைதான்.

உதாரணமாக கோவையில் 'சதி அருந்ததி' என்றபடம் எடுக்கப் படுவதாக பல நடிகர்களின் புகைப்படங்கள் விளம்பரத்துடன் வெளிவந்தன. ஆனால் நாளது வரை அந்த அருந்ததி வெளிவரவில்லை. (வேறோர் அருந்ததி வந்தும் இரண்டு மூன்று மாதங்களாகி விட்டன.) இதே போல் இன்னொன்று பிரபாவதி. இப்படத்தின் விளம்பரத்தில் ஒரு பெரிய நடிகர் ஜாபிதா. ஜாபிதாவில் இவ்வளவுபேர்தான் என்று சொல்லமுடியாது. இரண்டு வருஷங்களாக விளம்பரம் தான் காக்ஷியளித்து வருகிறதே தவிர படம் இன்னும் வந்தபாடில்லை. மாதத்திற்கு மாதம் ஒவ்வொரு ஸ்டூடியோவாக மாறுகிறதாக விளம்பரம் சொல்கிறது.

படமுதலாளிகள் இனிமேலாகிலும் இதுமாதிரி செய்யாமல் படம் எடுப்பதற்கான அலுவல்கள் பூரணமாய் முடிந்து, படத்தின் ஷூட்டிங் ஆரம்பமான பிறகு, விளம்பரம் செய்ய ஆரம்பிக்க வேண்டும்.

வி. என். பெரியசாமி,
ராபர்ட்சன்பேட்டை

காலச்சக்கரம்

செய்திப் படங்களிலே காலச்சக்கரம் (March of Time) மாதப் பத்திரிகை போன்றது. மாதந்தோறும் சுமார் 1000 அடி வெளியிடுகிறார்கள். இது வெளிநாட்டு அரசியல் நிலை, உள்நாட்டுப் பிரச்னை, மனிதவர்க்கத்துக்குப் பொதுவான ஒரு விஷயம் ஆக மூன்று பிரிவுகள் கொண்டது உலகத்திலே சுமார் 10,700 தியேட்டர்களில் காட்டப்படும் படம் இது ஒன்றுதான்.

* * *

சாதாரணமான ஓர் அமெரிக்கப் படத்தைத் தயாரிக்க 50,000 டாலர்கள் செலவாகின்றன. ஆனால் ஸூப்பர் பிக்சர்ஸ் என்ற மிக உயர்தரப் படங்களைத் தயாரிக்க பல லட்சம் டாலர்கள் கூடச் செலவழிக்கிறார்கள்.

* * *

பேசாத படத்தை மூன்றுமணி நேரம் பார்த்துக்கொண்டு சுமார் 400 தலைப்புகளைப் படித்து அனுபவிக்கக் கூடிய ஜனங்கள் பர்மா ஒன்றில்தான் இருக்கிறார்கள்.

"The Fashion Home"
LEADS, OTHERS FOLLOW

LATEST DESIGNS
IN
SAREES, SUITINGS, COATINGS
SHIRTINGS, CHINTZ, DHOTIES
— ETC. ETC. —

PRICES MODERATE

A Trail will convince you

THE FASHION HOME
AVANASHI ROAD :: COIMBATORE

You and your family will be most happy while shopping at our place

BETTER
BLOCKS
BRING
BETTER BUSINESS

☆

KLEIN AND PEYERL
PHOTOGRAPHERS, PROCESS BLOCK-MAKERS
2/30, MOUNT ROAD, MADRAS
Phone : 8025 P. B. 348

ராஜா

ஹிந்திப் படத்தில் கிஷோர் ஸாஹு, ப்ரோதிமா தாஸ்குப்தாவின்
இருதயத்துடிப்பைக் கணக்கெடுக்கிறார்

பக்ஷிராஜா பிலிம்ஸ்
ஜகதலப்ரதாபன்
(12 மந்திரி கதை)
டைரக்ஷன்.. S.M. ஸ்ரீராமுலு நாயுடு
சின்னப்பா · ஸந்தானலக்ஷ்மி · ஸரோஜினி · ஜீவரத்தினம்
வரலக்ஷ்மி · கிருஷ்ணன் · மதுரம்

"மாமலர் சோலையிலே"

ஜகதலப்ரதாபனில் காணப்படும் பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகளில் ஒன்று

★

யாரம்மா நீ?
பர்மாக்காரியா?......
ஓஹோ! வசந்தாவா?
இப்பொழுது
தெரிகிறது

★

"இன்னொரு ஸ்திரீ
நாரதரா" என்று
கேட்கிறீர்களா?.
ஆமாம். இவர்தான்
ராஜராஜேஸ்வரியில்
நாரதராகவரும்
ஜீவரத்னம்



"வழிமேல் விழிவைத்து நிற்கும் வனிதை"

ஜகதலப்ரதாபனை எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறாள் போலிருக்கிறது

★

பம்பாய் டாக்கீஸாரின்

கிஸ்மத்தில்

மும்தாஸ் ஷாந்தி

'கடவுளை நம்பினோர்

கைவிடப்படார்'

என்பதைக்

கண்கூடாகக் காண்கிறார்

★

ஸ்நேகப்ரபா

தமிழிசை நட்சத்திரங்கள்

"பஞ்சபாணம்"

வசந்த கால மனோகரமான சாயங்கால சமயம். சிறுதூற்றல் கலைஞனுடைய கனவுபோல மென்மையாக வீசிக் கொண்டிருந்தது. அழகிய அந்தப் பங்களாவின் முன்னே அலங்காரமாக ஓங்கி வளர்ந்த பச்சை மரங்களும், மலர் வரிசைகளும், பாத்திகளில் கச்சிதமாக அமைந்திருந்த பசும்புல்லையும் இயற்கைத் தேவியே கொண்டுவந்து ஆனந்தக் காட்சியாக அமைத்தது போலிருந்தது. கவி பைரனுக்கு மழைத் துளிகளைப் பார்த்துக் கொண்டிருப்பதிலே அலாதி ஆசையாம். அந்தக் கலைஞரைப் போலவே நம்முடைய சர் ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களுக்கும் இயற்கை இன்பத்திலே எல்லையில்லா ஆசை உண்டு. தன்னை மறந்து இந்த இயற்கை கானத்திலே அவர் மூழ்கிவிடுவது வழக்கம். அப்போது அவருக்கு முன்னால் ஒரு கேள்வி எழுந்தது.

"என்னத்திற்காக தமிழிலே பாடி ஆகவேண்டும்?"

இந்தக் கேள்வியை ஒரு அருமை நண்பர் கேட்டதால் பதில் சாந்தமாக வந்தது; "நாம் தமிழர்கள்; அதனாலே தமிழில் பாடவேண்டும்."

"ஆனாலும்......"

மேலே வார்த்தை முடியவில்லை. எப்போதுமே சமூகத்தின் அசட்டுத்தனத்தைக் கண்டால் அவருக்குப் பிடிக்காது. ஆகையால் கனத்த குரலில் பேச ஆரம்பித்தார். "இருக்கட்டுமே, பரவாயில்லை, அப்படியும் இருக்கலாம், ஒருவிதத்தில்"........என்ற பதப் பிரயோகங்கள் எல்லாம் அவரிடம் சிக்கிக்கொண்டால் படாத பாடுபட்டே தீரும். வாழ்க்கையைக் கலைக்கண்களோடு பார்க்கிறவர்களிடம், உண்மையான ஞானம் பிரகாசிப்பதில் ஆச்சரியமென்ன? தாமரைத் தடாகத்திலே, அழகாக மலர்ந்த தாமரையின்மேல் காலைக் கதிர் பட்டால் எப்படியிருக்குமோ அப்படியே. நல்ல கேள்வி கேட்டால் செட்டியாரவர்களிட மிருந்து தங்கம் போன்ற பதிலும் வரும்.

அவருடைய உள்ளத்து ஆர்வத்தைப் போலவே ராஜா சர் அண்ணாமலை செட்டியார் அவர்களுடைய ஆர்வமும் இருந்தது. கலைஞானம் ததும்பியதின் பயனாக எத்தனையோ தூய காரியங்களை ராஜா அவர்கள் உலகுக்குத் தந்திருக்கிறார்கள். கடவுளுக்கே கஷ்டம் வந்தாலும் ஆதரித்து உதவக் கூடிய வள்ளன்மை பூண்டவர் ராஜா அவர்கள். இந்த அரும்பெரும் இரு தலைவர்களுடைய ஆர்வத்தின் பயனாக பூத்ததே தமிழ் இசை இயக்கம்.

இயக்கம் என்றால் அதற்குத் தனியான லட்சணங்கள் என்ன? கர்நாடக சங்கீதத்திலே 'சரளி வரிசை' புரிகிற விசித்திரத்தைப் போல என்னவாவது உண்டா என்றால் அப்படி ஒன்றும் இல்லை. தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்யவேண்டும் என்பதே அவர்கள் லட்சியம்.

தமிழிசை மகாநாடும், கச்சேரிகளும், ஆனந்தமாக பிரமானந்தமாக நடைபெற்றதுதான் உலகமறிந்த (ரேடியோவிலும் ஒலி பரப்பியதால்!) விஷயம்தான் எல்லோருக்கும் தெரியுமே! தமிழிலும் பாடமுடியும், அற்புதமாகவும் பாடமுடியும் என்பதை நிதர்சனம் பண்ணியதும் எல்லாரும் அறிந்ததே. எதிர்த்தவர்கள் கொட்டம் அடங்கிப் போனதும் பழங்கதை. இங்கே அந்த மகாநாட்டின் அற்புதத்தைப் பற்றியோ, ஆனந்தத்தைப் பற்றியோ அதிகமாக விஸ்தரிக்கவில்லை.

ஏனென்றால், எல்லோரும் திருப்பித் திருப்பிச் சொன்னதையே நானும் இங்கே சொல்லப் போவதில்லை. வீணாக காலத்தைச் செலவிட்டு எதிர்ப்பதற்கு கங்கணம் கட்டிக் கொண்டவர்கள் கட்டிக்கொண்டு போகட்டும். இங்கே என்னத்தைப் பார்ப்போம்? சில காட்சிகள்: அதோ கூட்டத்திலே ஒரே ஆரவாரிப்பும் கைதட்டலும் நடக்கிறதே; என் தெரியுமா? தியாகராஜ பாகவதர் வருகிறார். இன்னும் அதிகமாக கைதட்டலும், குதூகலமும் சபையில் ஏற்படுகிறதே ஏன் தெரியுமா? பாகவதர் பாடி நிறுத்தியதும், "ஒன்ஸ்மோர்" கூட்டத்திலிருந்து ஒரு பரம ரசிகர் கேட்டதினால்தான்.

அதோ யார் அங்கே? என்.எஸ். கிருஷ்ணனா? தலையை அப்படி ஏன் ஆட்டுகிறார். மதுரத்தைச் சூழ்ந்த ஜனங்கள், விடுவார்களா, விடமாட்டார்களா என்பதில்தான்.

இங்கே என்ன இத்தனை கும்பல்? வசந்தகோகிலத்தின் புடவை நிறத்தை, அந்த வர்ண பேதங்களை நங்கையர்கள் நன்கு கவனித்துக் கொண்டிருப்பதாலா? அல்லது ஸ்ரீமதி எஸ். பி. தனலக்ஷ்மியாரின் கூந்தலிலே உள்ள மலர் மாலை சென்னைக்குப் புதிதா? அல்லது கூந்தல் சரிதத்திலேயே புதிதா என்ற ஆராய்ச்சியா? அடேயப்பா! கட்டடமே இடிந்து விழும்படி இப்படி ஆரவாரம் செய்து ஆனந்தப்படுகிறார்களே, ஏன் இந்தக் கரகோஷம்? பட்டம்மாளுக்கு ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி மலர் மாலை சூடியதே ஒரு கலை அழகான காட்சிதான். அந்த அழகைக் கண்டு கலையுள்ளங்கள் பொங்கியதால் வியப்பென்ன?

அங்கே பாருங்கள் பெண்களும் விழுந்து விழுந்து சிரிக்கிறார்கள். சினிமா நடிகை-நடிகர் யாராவது வருகிறார்களா? அதெல்லாம் இல்லை. ராஜாஜி கூட்டத்தை விட்டு-உள் ஹாலை விட்டு வெளியே வர ஜன்னலையும், சட்டியையும் தாண்டுகிறார். இந்த வயசில் தாண்டும் தலைவரைக் கண்டு மகிழ்ச்சிப் பெருக்கில், கைகொடுப்பதையும் மறந்து கைகொட்டி மகிழ்கிறார்கள்.

அந்த இளவதனம், சிரித்த முகம். ஏன், இப்படி அங்குமிங்கும் நாற்காலியையும், தட்டி—சாமான் — புஸ்தகம் — எல்லாம் தூக்கிக் கொண்டு செல்கிறதைப் பார்த்தால் ராஜாவின் குமாரர் சிதம்பரம் செட்டியார் போலல்லவா இருக்கிறது. அடடா! ராஜாவின் மகன் - ராஜகுமாரனுக்கா இந்தத் தொந்தரவு! தொந்தரவா? அவருடைய உள்ளமும் ஆத்மாவும் அல்லவா இதில் ஈடுபட்டிருக்கிறது! இல்லாவிட்டால் சர் ஆர். கே. எஸ்ஸிடமிருந்து, "அப்பாவுக்கு மேலே பிள்ளை—குருவுக்கு மிஞ்சிய சிஷ்யன்" என்ற அரு

மைப் பட்டத்தைப் பெற இயலுமா? எல்லாம் சரி. இத்தனை சினிமா ராணிகளையும், வித்வான்களையும், அறிஞர்களையும், எல்லோரையும் சேர்த்து வைத்த அந்த மண்டபம்—சென்ட் மேரீஸ் ஹால்—மட்டும் ஆனந்தப் பெருகைக் காட்டாது அப்படியே நிற்கிறதே! ஏன்? மகிழ்ச்சியில் ஒரு பிடி உயர்ந்ததோ உயரவில்லையோ எனக்குத் தெரியாது. ஆனால், எதிர்க்கும் சிலர் மாத்திரம் கல்லுப்போல் அசையாது, மண்டபம்போல் மௌனமாகநிற்கிறார்கள். இந்தக் கட்டுரையின் ஆரம்பத்திலே "பஞ்சபாணம்" எழுதியது என்று போட்ட ரகஸ்யத்தை, பகிரங்க ரகஸ்யத்தைச் சொல்லுகிறேன். பஞ்ச பாணங்கள்—அதாவது மதனன் மலர்ப்பாணங்களால் மனம் மயங்கும் என்று சொல்கிறார்களே, எதற்கு மயங்காவிட்டாலும், தமிழ்ப் பாட்டிற்கு மயங்கா விட்டாலும், இந்தப் பாணங்களாவது அவர்கள் உள்ளத்தில்—மென்மையாக பூப்போல தைத்து, மயக்காதா? அட, கடவுளே! நீதான் பதில் சொல்ல வேண்டும்!

அசந்தர்ப்பப் பாடல்கள்

நாடகமேடையில் தமிழ் நாடகமாகிய 'வள்ளித்திருமணம்' நடக்கின்றது. அந்நாடகத்தில் வரும் எல்லா வசனங்களும் பாட்டுகளும் தமிழ் மொழியிலேயே இருக்கவேண்டியிருக்க, இடையிடையே அன்னிய மொழிப்பாட்டுகள் வருகின்றன. சுப்பிரமணியராக நடிப்போன் 'ஜெயகோகுலபாலா' என்னும் பாடலை ஏன் பாடவேண்டும்? அவன் அந்தப் பாட்டைப் பாடுவது அசந்தர்ப்பம் என்னுங்குற்றமாகும். அக்குற்றம் ஒருபுறமிருக்கட்டும். அந்த இடத்தில் பாட்டைப் பாடவேண்டுமென்றிருந்தால் வேறுதமிழ்ப் பாட்டு இல்லாமற்போயிற்றா? நிற்க, மற்றொரு தாரணமாவது:—மேடையில் அரிச்சந்திரன் கதை நடக்கிறது. மயானகாண்டம் — சந்திரமதி தன் மடிந்துபோன மகனைத் தேடிக்கொண்டு வருகிறாள். அச்சந்தர்ப்பத்தில் மேடையில் நுழையும் போது 'ஹை மௌலா குத்ரதே' என்னும் பிறமொழிப் பாடலைப் பாடிக்கொண்டு வருவதை நான் கேட்டிருக்கிறேன். இப் பிறமொழிப் பாடலை ஏன் பாடவேண்டும்? இப்பாட்டின் பொருள் யாருக்கேனும் தெரியுமா? (இவ்வாறு கேட்பதற்கு என்னை மன்னிக்கவும்) இதைவிட ஆபாசம் என்ன இருக்கிறது? இத்தகைய ஆபாசங்கள் நாடக மேடையில் மட்டுமல்ல; பேசும் படக்காட்சிகளிலும் தற்காலம் இருக்கின்றன. தமிழிசையானது வளர்ந்தோங்க வேண்டுமென்றால் தமிழ் நாடகங்களிலும், திரைப் படங்களிலும் தமிழ்ப் பாட்டுகளைத் தவிர பிறமொழிப் பாடல்களுக்கு இடங்கொடுக்கவே கூடாது என்பது எனது உறுதியான அபிப்பிராயமாகும்.

ராவ்பகதூர்
ப. சம்பந்த முதலியார்.

சாந்தாராமின் 'சகுந்தலை'யில் வரும் மிருகங்களெல்லாம் ராஜ்கமல் கலாமந்தரில், அவற்றிற்கென பிரத்தியேகமாகக் கட்டப்பட்ட கூண்டுகளிலேயே இன்னும் வைக்கப்பட்டிருக்கின்றன. அம் மிருகங்களைப் பழக்கினவரையும் தங்கள் கூட்டத்தினரோடு சேர்த்துக்கொண்டு விட்டாராம் சாந்தாராம்.

துல்லியமான துணிகளை
தூய்மையான
வெள்ளையாக்குவது

காவேரி சோப்

பார்கள் — கேக்குகள் — கார்பாலிக் முதலியன

சோல் டிஸ்ட்ரிப்யூடர்ஸ்:

ஸ்ரீ காவேரி சோப் சேல்ஸ் டிபோ,
113, ராஜவீதி :: கோயமுத்தூர்

பொதுமக்களின் ரஸனை

"தமிழ்ப்படங்கள் முன்னேறவேண்டுமானால் அவற்றை கண்டுகளிக்கும் பொதுமக்களின் ரஸனை உணர்ச்சியை உயர்த்த முயற்சி செய்யுங்கள்" என்கிறார்

ஸ்ரீ டி. பி. கைலாஸம்

கன்னட இலக்கியக் கொடியில் அரும்பிய ஹாஸ்ய முல்லை ஸ்ரீ டி. பி. கைலாஸம். சென்னை சர்வ கலாசாலையில் பி. ஏ. பட்டம் பெற்றவர். சுமார் ஆறு வருடங்கள் இங்கிலாந்தில் இருந்து மேனாட்டுக் கல்வியும், பட்டங்களும் பெற்றவர். பின்னர் மைசூர் அரசாங்கத்தில் கொஞ்சகாலம் உத்தியோகம் பார்த்தவர். ஆனால் கலையின்பொருட்டு தன் உயர்ந்த பதவியை தியாகம் செய்துவிட்டு கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக உழைத்து வருபவர். இருபது நாடகங்கள் வரை எழுதி, நடித்துப் புகழ்பெற்றவர். அவருடைய ஓரங்க நாடகங்கள் வெகு பிரபலமானவை. தமிழருக்கும் அவர் அன்னியரல்ல; தஞ்சாவூர் அசல் தமிழர் அவர்! 'சுகுண சரஸா' என்ற தமிழ்ப் படத்தில் விடனாக நடித்தும், உதவி டைரெக்டராக இருந்தும் அவர் தமிழ்த் திரைக்குச் செய்த சேவை நேயர்கள் நினைவிலிருக்கும் என்றாலும் 'சௌண்டு சிடி' காலத்திலிருந்தே அவருக்கு தமிழ்ப் பட உலகில் சம்பந்தமுண்டு என்று அறிய என்னைப்போலவே நேயர்களுக்கும் ஆச்சரியமாக விருக்கும். அனுபவமும், ஆற்றலும், தொண்டில் அளவற்ற தாகமும் ஒருங்கே கொண்ட அவரைக் கண்டு. "நம் திரைக்கு விமோசனம் கிடைக்க ஏதேனும் வழி இருக்குமா?" என்று அறிந்து வரப் புறப்பட்டேன். அவரும் இன்முகத்துடன் வரவேற்கவே, மெதுவாக, "தமிழ்ப் படங்கள் வெற்றியடைய தாங்கள் ஒரு மார்க்கம் கூறக்கூடாதா?" என்று பேச்சை துவக்கினேன். அவ்வளவுதான்! ஆரம்பித்துவிட்டாரய்யா அவர் ஆவேசத்துடன்! "தமிழ்ப் படங்கள் மோசமாக இருக்கின்றனவென்று நீங்கள்—அதாவது ஒரு சில கலையுணர்ச்சி நிறைந்த விமர்சகர்கள்—முதலாளிகளையும், டைரக்டர் நடிகர்களையும் தாக்குகிறீர்கள். அது சரியல்ல. பொது ஜனங்கள் எம்மாதிரி காட்சிகளுக்கு அதிக ஆதரவு காட்டுகிறார்களோ, அவற்றைத்தான் முதலாளிகள் படமெடுத்து வருகிறார்கள். அவர்கள் வியாபாரிகள்; லாபத்தைத்தானே கருதுவார்கள்? உதாரணமாக ஒரு புத்தகக் கடைக்காரன், நானா விதப் புத்தகங்களை வைத்திருக்கிறான். ஒருவன் கீதையை வாங்கிக் கொண்டு போகிறான். இன்னொருவன் அழகிய பாரிஸ் நகர மாதர்களின் படங்கள் நிறைந்த மானிடத் தேக சாஸ்திர புத்தகத்தை வாங்கிக்கொண்டு போகிறான். நாளடைவில் பின்னால் கூறிய புத்தகங்களே அதிகம் செலவானால் கடைக்காரனின் அலமாரிகளில் அதே புத்தகங்கள்தான் நிரம்பிக் கிடக்கும். இதற்குக் கடைக்காரனை குறை கூறலாமா? வாசகர்களின் ருசியை அல்லவா கவனிக்கவேண்டும்? அதை யல்லவா திருத்திச் சரிப்படுத்த வேண்டும்? அந்தக் கடைக்காரனை ஒத்தவர்களே பட முதலாளிகள். சுமார் எண்பத்தைந்தாயிரம் ரூபாய் செலவில் ஒரு படத்தை பிடித்து, லட்ச ரூபாய் வரையில் அதன் விளம்பரத்துக்கு வாரி யிறைத்து, இறுதியில் ஜனங்களிடமிருந்து மூன்று, நான்கு லட்ச ரூபாய் திரட்டிக் கொண்டு விடும் முதலாளிகளை, நாம் அவர்கள் சாமர்த்தியத்திற்காகவும், மனோதர்ம சாஸ்திரத்தில் அவர்களுக்குள்ள ஞானத்திற்காகவும் பாராட்டவல்லவா வேண்டும்! தமிழ்ப் பொதுமக்கள் பெரும்பாலும் தொழிலாளிகள்; ஏழைகள்; படிப்பில்லாதவர்கள்; கலை உணர்ச்சி மங்கியவர்கள்; பொழுது போக்குக்காக படம் பார்க்க வருபவர்கள்; கீழ்த்தரமான ஹாஸ்யக் காட்சிகளைக் கண்டு கிளர்ச்சிகொண்டு கைகொட்டி ஆர்ப்பரிப்பவர்கள். இத்தகைய காரணங்களால்தான் படுமோசமான, வெகு ஆபாஸமான படங்களுக்குங்கூட பிரமாதமான வசூலாகி விடுகிறது. லாபத்தில் ருசிகண்ட முதலாளிகளும் கலையை கைவிட்டு ஜனங்களின் ருசிக்கேற்றபடி படம் சமைத்து வருகின்றனர். ஏதோ ஒரு சில படித்த, கலையுணர்ச்சி பெற்ற யுவர்கள் மட்டும் 'கலை! கலை!' என்று கத்திப் பயனில்லை. பொது ஜனங்களின் ரஸனை உணர்ச்சியை உயர்த்த முயற்சி செய்யுங்கள். அவர்கள் ஆபாஸமான படங்களுக்குப் போவது நின்றால் போதும்; முதலாளிகள் தானே வழிக்கு வந்து விடுவார்கள்; ஜனங்களிடையே கலையுணர்ச்சியை பரப்புங்கள்; கலைப் படங்கள் தானே வெளிவரும்" என்று தன் சொற்பொழிவை இங்கு நிறுத்தினார். நான் ஸ்தம்பித்துக் கிடந்தேன். "ஆமாம் ஐயா! இது ஒன்றேதான் எனக்குத் தோன்றும் வழி" என்று அவர் மீண்டும் அழுத்திச் சொல்லவே, "தாங்கள் சொல்வது நியாயந்தான், ஆனால் தற்போது நமது சமூகத்துக்கு அவசியமானவை சமூகப் படங்களா, புராணப் படங்களா?" என்று இன்னொரு கேள்வியைப் போட்டேன்.

"எந்தக் கதையானாலென்ன? அழகாக எடுப்பதானால் எதுவானாலும் சரிதான். அன்பு, கொடுமை, வீரம், துரோகம் ஆகிய பல வேறு உணர்ச்சிகளைப் பொருத்தமாகச் சித்தரிக்க புராணங்களில் வரும் ராஜாக்கள், தேவர்களாயிருந்தாலென்ன? நம்மிடையே வாழும் சாதாரண மனிதர்களா யிருந்தாலென்ன? புராணப் படங்களோ, சமூகப் படங்களோ சரியானபடி எடுக்க வேண்டுமென்பதே முக்கியமான விஷயம்" என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டார்.

நான்: தமிழ்ப் படங்களில் புகுத்தப்படும் 'காமிக்' காட்சிகளைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?"

அவர்: ஹாஸ்யம் ஓர் அற்புதச் சுவை. உண்மையான ஹாஸ்யத்தில் அன்பும், இரக்கமும், பச்சாத்தாபமும் நிறைந்திருக்கும். ஒரு குறிப்பிட்ட வியக்தியையோ, வருக்கத்தையோ பழித்துக் கேலி செய்வது ஹாஸ்யமாகாது. ஹாஸ்

யம் ஒருகாலும் பிறரை புண்படுத்தாது. உயர்ந்த குலத்தில் பிறந்த எசமான் ஒருவன், தன் வீட்டிற்குப் புல் கொண்டுவரும் புலைப் பெண்ணுடன் காதல் நாடகமாடுவதுதான் 'காமிக்' என்று சாதிப்பது அருவருக்கத் தக்கது.

நான்: சங்கீதம் சம்பந்தமாக தங்கள் அபிப்பிராயம் என்னவோ?

அவர்: சங்கீதம் என்றதும் தமிழ் இசை இயக்கம் கவனத்துக்கு வருகிறது. தமிழிசையின் பால் தமிழர்கள் காட்டிவரும் ஆர்வம் பாராட்டப்பட வேண்டியதே. ஆனல் கச்சேரிகளில் தெலுங்கு பாட்டு பாடக்கூடாது என்று தடுத்து வரும் தமிழர்கள், தமிழ்ப் படங்களில் ஹிந்துஸ்தானி வர்ண மெட்டுக்களில் அமைக்கப்பட்டிருக்கும் பாடல்களை ஆவலோடு கேட்டு ஆனந்தித்து வருவதுதான் ஆச்சரியமாகவிருக்கிறது. சுத்த கர்நாடக மெட்டுக்களில் பாட்டுக்களை அமைப்பது சுலபமல்ல; பணமும் செலவாகும்; ஜனங்களும் ரஸிப்பார்களா என்பது சந்தேகம். ஏதாகிலும் ஒரு ஹிந்தி 'ரிகார்டை' வைத்துவிட்டு அது பாடப் பாட, தமிழிலும் அதே மாதிரி ஒரு பாட்டு எழுதி விடுவது லகுவான காரியமல்லவா? படம் பார்த்தவர்களும் "ராதே உனக்குக் கோபம் ஆகாதடி........." என்று குஷியாகப் பாடிக் கொண்டே வீடு திரும்பலாம். இசைக்கலை வளர படக்கலை எவ்வளவோ உபயோகமாக இருக்கும். நல்ல கர்நாடக ராகங்களில் தமிழ்ப் பாடல்களை அமைக்கச் சொல்லி கிளர்ச்சி செய்யுங்கள். ஹிந்தி மெட்டுக்களிலேயே பாட்டுகள் அமைந்திருந்தால் அப்படத்தைப் பார்க்க மறுத்துவிடுங்கள்.

நான்: படங்களில் நடனங்களை சேர்ப்பது நல்லதா?

அவர்: ஆஹா! பேஷாகச் சேர்க்கலாம். ஆனல் பொருத்தமாக இருத்தல் வெகு அவசியம். உதாரணமாக கீசகனுக்கு நாட்டியத்தில் நல்ல ருசியும் திறனும் உண்டு. அவனைப் பற்றிய கதையாயிருந்தால் நாட்டியத்தை எதேஷ்டமாகக் கையாளலாம்.

நான்: படங்களின் நீளம் எவ்வளவிருக்கலாம்?

அவர்: இப்போது அமெரிக்கப் படங்களில்கூட அதிக நீளம் உள்ளவை அனேகம் வருகின்றன. பதினோராயிரம் அடிக்குள் நல்ல முழுப்படங்கள் எடுப்பதும் கடினமல்ல. விஷயம் அழகாகவும் கண்ணியமாகவும் இருக்க வேண்டும். அதுதானே முக்கியம்.

—பி. எஸ். என்.

ராஜாபண்டிட் என்ற ஹிந்தி நடிகர் (சாந்தாராம் சகுந்தலையில் விதூஷகனை நடித்திருப்பவர்) பதினன்கு வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமிகளைக் கொண்டு மராத்தி பாஷையில் ஒரு படம் தயாரித்திருக்கிறாராம்.

போட்டோ

எடுக்க வேண்டுமா?

நேர்த்தியான வேலைப்பாடு
உடனுக்குடன் கொடுப்பது
நியாயமான விலை விகிதம்

இவைகளுக்கு

பிரின்ஸ் ஸ்டுடியோ
அவனசி ரோட் :: கோயமுத்தூர்

PRINCE STUDIO
Avanashi Road :: COIMBATORE

NEELA STORES
General Merchants,
ST. MICHAEL'S BUILDINGS,
Big Bazaar Street :: COIMBATORE

எங்களிடம் சகலவிதமான
ஷாப்பு சாமான்கள்
ஸ்டேஷனரிகள்
இந்தியன், இங்கிலீஷ் வாசனை திரவியங்கள்
கூந்தல் தைலங்கள்
சோப்பு வகைகள்
எம்ராய்டரி சாமான்கள்
இனமல் பிளேட்டுகள்
கண்ணுடி சாமான்கள்
ஒஸ்ரம் எலக்டிரிக் பல்புகள்
டாடா சோப்புகள், தைலங்கள்
மைசூர் சந்தன பவுடர்
முதலியன மலிவான விலைக்குக் கிடைக்கும்

"நீலா ஸ்டோர்ஸ்"

நக்ஷத்திரங்களுக்கு ★

★ ஒரு உணவுத் திட்டம்

"ரஜனி"

நமது நக்ஷத்திரங்களில் பலர் வெகு வேகமாக குறுக்கே வளர்ந்துகொண்டு வருகிறார்கள். இந்த வேகம் நம் நக்ஷத்திரங்களை வெகு சீக்கிரம் மாஜி நக்ஷத்திரங்களின் ஜாபிதாவில் சேர்த்துவிடக்கூடுமாதலால் நடிக, நடிகைகள் இது விஷயத்தில் தகுந்த சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டும். தேகத்தின் எடையைக் குறைத்துக் கொள்வதும், கட்டுமஸ்தான உடம்புடன் இருக்கத்தக்க ஏற்பாடுகள் செய்து கொள்வதும் நக்ஷத்திரங்கள் மேற்கொண்டு சில காலமாவது வெள்ளித் திரையில் சுடர் வீசிப் பிரகாசிக்க பெரிதும் உதவி செய்யும். இதை நம் நக்ஷத்திரங்கள் உணர வேண்டும்.

பூதாகாரமான சரீரம் படைத்த ஒருவர் எவ்வளவுதான் இனிய சாரீரம் உடையவராயிருந்தாலும், அவர் எவ்வளவுதான் அற்புதமாக நடிக்க வல்லவரானாலும் அவரது இனிய சாரீரமும், அரிய நடிப்புத் திறமையும் அந்தப் பூதாகாரமான சரீரத்தால் சோபிக்காமல் போய் விடும். பொது ஜனங்களின் ஆதரவும் அவர்களுக்குக் குறைந்து நாளடைவில் சினிமா உலகிலிருந்தே அவர்கள் மறைந்துவிட நேரிடும். இதிலிருந்து நக்ஷத்திரங்கள் தங்கள் தேக எடையைக் குறைத்துக் கொள்வதும், கட்டுமஸ்தான தேகத்துடனிருப்பதும் எவ்வளவு அத்தியாவசியமானவைகள் என்பது தெளிவாகியிருக்கும்.

தமிழ் நாட்டு நக்ஷத்திரங்கள் வஞ்சனையின்றி குறுக்கே வளருவதற்கு அவர்கள் வாங்கும் ஏராளமான சம்பளம் ஒரு முக்கிய காரணம். இதனால் அவர்கள் தாராளமாய்ச் செலவு செய்து விரும்பியதை விரும்பியபடி சாப்பிட நல்ல வசதியிருக்கிறது; விரும்பியதை சாப்பிட்டும் வருகிறார்கள். ஆனால் இச்சாப்பாட்டின் காரணமாகவே அவர்கள் சினிமா உலகிலிருந்து 'ரிடையர்' ஆக வேண்டி வரும் போது 'அடடா, ஆகார விஷயத்தில் தகுந்த கவனம் எடுத்துக் கொள்ளாமல் இப்படி உரல் போல் வளர்ந்து விட்டோமே' என்று பெரிதும் வருந்த வேண்டியிருக்கிறது.

இந்தியாவில் இப்படியிருக்க மேல் நாட்டு நக்ஷத்திரங்கள் தங்கள் எடையைக் குறைப்பதற்கும், கட்டுமஸ்தான தேகத்துடன் இருப்பதற்கும், திரையுலகில் மேற்கொண்டு புகழுடன் விளங்குவதற்கும் அடிக்கடி டாக்டர்களைக் கலந்து ஆலோசித்து அவர்கள் கூறும் யோசனைகளையும், உணவுத் திட்டங்களையும் அமுலுக்குக் கொண்டு வந்து அதனால் நல்ல பலனும் பெறுகிறார்கள்.

மேல் நாட்டாரிடமிருந்து வெகு சுலபமாகத் தீய பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்ளும் நம் நக்ஷத்திரங்கள், நல்ல பழக்க வழக்கங்களை ஏனோ கற்றுக்கொள்ள முயலுவதில்லை. ஒரு வேளை 'பட முதலாளிகளின் அன்பும் ஆதரவும் நமக்கு இருந்தால் போதும், எப்படியும் நமக்கு நடிக்க சான்ஸ் கிடைக்கும்' என்பது அவர்கள் அந்தரங்க எண்ணமாயிருக்கலாம். அதனால் அவர்கள் மேனாட்டு நக்ஷத்திரங்கள் அனுஷ்டிக்கும் முறைகளைப் பற்றி அவ்வளவாகக் கவலைப் படாமலிருக்கலாம். ஆனால் இந்த மனப்பான்மை காரணமாக அவர்கள் சினிமா உலகிலிருந்தே புறக்கணிக்கப்படுவார்கள் என்பதை ஒவ்வொரு நக்ஷத்திரமும் ஞாபகம் வைத்துக் கொள்ளவேண்டும்.

தேகத்தின் எடையைக் குறைத்துக்கொள்ளவும், கட்டுமஸ்தான தேகத்துடனிருக்கவும் மேல் நாட்டினர் எந்தெந்த முறைகளைக் கையாளுகிறார்கள் என்பதை உணர்ந்து அதில் சாத்தியமானவற்றை இயன்ற அளவு பயன்படுத்திக் கொள்வது நம் நக்ஷத்திரங்கள் மேற்கொண்டு சிலகாலமாவது தங்கள் புகழையும் பெருமையையும் சினிமா வானில் நிலைநாட்டிக் கொள்ள பெரிதும் துணைபுரியும்.

டாக்டர் லிபெல் (Dr. Lebell) என்பவர் தமது உணவுத்திட்ட முறையால் 158 ராத்தல் எடையிருந்த செரி மே (Cherie May) என்னும் ஒரு பிரபல 'ஸ்டண்ட்' நடிகையின் எடையை 118 ராத்தல்களாகக் குறைத்துவிட்டார். பிற்பாடு அவரது பழைய எடை அவரிடம் திரும்பிவரவே யில்லையாம். இத்தகைய முறையைப் பின்பற்றி ஹாலிவுட்டிலுள்ள எத்தனையோ நடிக நடிகைகள் தங்கள் விருப்பத்தின்படி மிதமான எடையுள்ளவர்களாகி பெயரும் புகழும் பெற்றிருக்கிறார்கள்.

டாக்டர் லிபெல்லின் உணவுத் திட்டத்தில் கொழுப்புப் பதார்த்தங்களும், சர்க்கரைப் பதார்த்தங்களும் அறவே நீக்கப்பட்டிருக்கின்றன. அதை ஈடுகட்ட அன்னாசி, திராட்சை, தக்காளி, ஆரஞ்சு போன்ற பழங்களின் ரசங்கள் சேர்க்கப்படுகின்றன. பீட் ரூட், கேரட், டர்னிப் போன்ற கிழங்குகளில் இருக்கும் சத்தைவிட தானிய வகைகளில் அதிகமான சத்து இருப்பதால் அதையும் அதிகமாய்ச் சேர்த்துக் கொள்ளலாம் என்கிறது மேற்படி உணவுத் திட்டம்.

தென்னிந்தியாவில் தக்காளிப் பழம் பெருவாரியாகக் கிடைக்கும். ஆரஞ்சு, அன்னாசி, திராட்சை போன்ற பழவகைகள் கிடைப்பதும் அவ்வளவு கடினமல்ல. தானிய வகைகளுக்குக் களஞ்சியம் தென்னிந்தியா தான். ஆகவே டாக்டர் லிபெல்லின் திட்டத்தை நம் நக்ஷத்திரங்கள் அமுலுக்குக் கொண்டுவருவதில் அவ்வளவாகக் கஷ்டமில்லை. மிளகாயும் புளியும் தின்று உரமேறிப்போன நாவுக்கு ஆரம்பத்தில் இந்த முறை அசாத்தியமான

சேலத்தில் இரண்டு தினங்கள்

ஆசிரியர் ராமநாத்

சென்றமாதக் கடைசியில் சேலத்தில் இரண்டு தினங்கள் தங்கியிருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. சேலத்தில் படப்பிடிப்புக் கம்பெனிகள் சிலவும், ஸ்டூடியோ ஒன்றும் இருக்கின்றன. அங்குள்ள மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டூடியோ சென்ற ஏழு வருஷங்களாக வேலைசெய்து கொண்டு வந்திருக்கின்றது. முப்பது படங்களுக்கு மேலாக இந்த ஸ்டூடியோவிலிருந்து வெளிப்பட்டிருக்கின்றன. ஸ்டூடியோவின் காரியாலயம் நகரிலும், ஸ்டூடியோ அங்கிருந்து நான்கு மைல் தூரத்திலும் அமைந்திருக்கின்றன.

முதல்நாள் நான் காரியாலயத்திற்கு சென்றிருந்த பொழுது மாடர்ன் தியேட்டரின் நிர்வாகியும், பிலிம் டைரக்டருமான ஸ்ரீ டி. ஆர். சுந்தரம் ஸ்டூடியோவிற்குச் சென்றுவிட்டார். அங்குள்ள மற்றொரு பிலிம் டைரக்டர் ஸ்ரீ எம். எல். டான்டன். அவருக்கு சற்று உடம்பு சௌகரியமில்லாம லிருந்ததால் அன்று ஸ்டூடியோவிற்குப் போகவில்லை. காரியாலயத்திற்கு அருகாமையிலுள்ள அவரது வீட்டிற்குச் சென்று அவரைச் சந்தித்தேன். சற்று சிரமத்துடன் வெளியே வந்து என்னை வரவேற்றார்.

ஹாலிவுட்டில் சிலகாலம் தங்கியிருந்து சினிமா டைரக்ஷன் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு இந்தியா திரும்பிவந்தவர் டான்டன். ஹிந்திப் படங்கள் சிலவற்றை டைரக்ட் செய்திருக்கிறார். பின்பு தமிழ்நாட்டுப் பட முதலாளிகள் சிலர் அவரைத் தமிழ்ப்படம் டைரக்ட் செய்யும்படி தூண்டினர். கல்கத்தாவிலும், பம்பாயிலும், தமிழ்ப் படங்கள் பிடிக்கப்பட்டுவந்த காலத்தில் **பாமா விஜயம், மணிமேகலை, சுந்தராம்பாள் நந்தனார்** போன்ற பல வெற்றிகரமான படங்களை டான்டன் டைரக்ட் செய்தார்.

ஒரு வருஷத்திற்கு முன்பு டைரக்டர் டான்டனை சென்னையில் 'வுட்லண்ட்ஸ்' ஹோட்டலில் கண்டு பேசினேன். அப்பொழுது அவர் எந்தப் படத்திற்காகவும் வேலைசெய்து கொண்டிருக்கவில்லை. குறித்த வேளையில் சாப்பிடுவது, அங்குமிங்கும் சுற்றுவது, வருவோர் போவோருடன் சாவகாசமாகவும் அன்புடனும் பேசிப் பழகுவது இவைகள்தான் அவருடைய வேலைகளாக இருந்தன.

இச்சமயத்தில்தான் சுந்தரம் டான்டனை சேலத்திற்கு அழைத்துச் சென்றார். பதினோராயிரம் அடிகளுள் இரண்டு படங்கள் தயாரித்த பெருமை சேலம் மாடர்ன் தியேட்டர்ஸைத்தான் சேரும். பட நீளத்தைக் குறித்த விவாதம் முற்றிக்கொண்டு, பத்திரிகைகளில் பத்தி பத்தியாக பலர் எழுதிக்கொண்டு வந்த போது அந்தக் கவலை சற்றேனுமின்றி சர்க்காரிட்ட சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்து மற்ற பட முதலாளிகளுக்கு வழிகாட்ட வேண்டும் என்ற எண்ணம் சுந்தரத்திற்கு ஏற்பட்டிருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இதை யொட்டித்தான் வடநாட்டிலும் மேல்நாட்டிலும் அனுபவம் பெற்ற டான்டனை சுந்தரம் தமது சகாவாக ஏற்றுக் கொண்டிருக்க வேண்டும்.

டைரக்டர் டான்டன் சேலத்தில் காலெடுத்து வைத்தபின்னர் எவ்வித காரியத்துக்காகவும் வேறொரு ஊருக்கும் போகவில்லை என்றால் அது உங்களுக்கு ஆச்சரியமாக இருக்கும். ஒருவேளை புதை மண்ணில் காலை விட்டுக் கொண்டு வெளியே எடுக்கமுடியாமல் தத்தளிக்கிறாரோ என்று அவருக்கே தோன்றுகிறது. புதைமணல் என்னவென்று நினைக்கிறீர்கள்? சுந்தரம் டான்டன் பேரில் கொண்டுள்ள அன்புதான் அது. அருந்ததி ஆனவுடன் ராஜராஜேஸ்வரி. இது முடிந்தால் வேறொன்று காத்துக் கொண்டிருக்கும். வேகமே தனது லட்சியமாகக் கொண்டு முன்னேறிவரும் மாடர்ன் தியேட்டர்ஸில் ஒரு டைரக்டர் இருந்தால் போதுமா? இந்தக் குறையைத் தீர்ப்பதற்குத்தான் டான்டன் வந்து சேர்ந்தார். அவர் சேலத்தை விட்டுச் சென்றுவிட்டால் மறுபடியும் இக்குறை ஏற்படாதா? ஆகையால் டைரக்டர் டான்டனும் சேலம் வாசியாக மாறிவிட்டார்.

டான்டன் பிரம்மச்சாரி. ஒருவிதமான பந்தமும் கிடையாது. அவரது கவலை யெல்லாம் படம் நன்றாய் எடுக்க வேண்டுமே, முதலாளிக்கு அது லட்சக்கணக்

நக்ஷத்திரங்களுக்கு ஒரு உணவுத் திட்டம்
(முன் பக்கத் தொடர்ச்சி)

தாய்த் தோன்றினாலும் படிப்படியாய் சாத்தியமாகி நாளடைவில் சரிப்பட்டுவிடும்.

டாக்டர் லிபெல் தமது உணவுத் திட்டத்தை மட்டும் அமுலுக்குக் கொண்டுவந்து விடுவதில் பூரண பலனும் பெறமுடியாது என்றும், நக்ஷத்திரங்கள் தினசரி காலையிலோ அல்லது மாலையிலோ சிற்சில தேகப்பயிற்சிகள் செய்து வர வேண்டும் என்றும், அப்போதுதான் தமது திட்டம் பூரண பலனளிக்கும் என்றும் குறிப்பிடுகிறார்.

நம் தமிழ்நாட்டு நக்ஷத்திரங்களில் நமக்குத் தெரிந்தவரையில் ஸ்ரீமதி டி. ஏ. மதுரம் ஒருவர் தான் தினசரி தேகாப்பியாசம் (தேங்காப் பாயாசமல்ல) செய்து வருவதாகத் தெரிகிறது. அவரைப் பின்பற்றி இதர நக்ஷத்திரங்களும் தினசரி தேகாப்பியாசம் செய்து வரலாம்.

தண்டால், பஸ்கி எடுத்தல், 'பார்' ஆடுதல், கர்லாக்கட்டை சுழற்றல், ஓடுதல், நீந்துதல் இவையெல்லாம் நல்ல தேகப்பயிற்சிகள்.

முன் கூறிய உணவுத் திட்டத்தைச் சரியானபடி கையாளுவதுடன், தினசரி தேகப் பயிற்சிகளிலும் ஈடுபட்டு வந்தால் நம் நக்ஷத்திரங்கள் பலருக்கிருக்கும் பூதாகாரமான தேகமும், விகாரமான தோற்றமும் மறைந்து நாளடைவில் நல்ல தேகக் கட்டுடையவர்களாகி விடுவார்கள். சினிமாவானிலும் சுடர் வீசும் நக்ஷத்திரமாக ஜொலிக்க முடியும்.

கில் சில்லறை சேர்த்துக்கொடுக்க வேண்டுமே என்பன போன்றவைதான். அனுவசியமாக பிலிமை உதவாக்கரை யாக்குவதில் அவருக்கு நம்பிக்கை கிடையாது. பதினோராயிரம் அடி அருந்ததிக்காக 35,000 அடி படமே செலவிட் டிருக்கிறார். அதுவும் ஒரு நடியைவிட்டு மற்றொருவரை இப்படத்திற்கு அமைத்ததில் 8000 அடி படம் வீணாக்கப்பட்டது.

நான் சேலத்திலிருந்த முதல் நாளன்று டைரக்டர் சுந்தரத்தைப் பார்க்கமுடியவில்லை யாதலாலும் மறுதினம் இருந்து ஸ்டூடியோ பார்த்துச் செல்லலாம் என்று டான்டன் வற்புறுத்தியதாலும் மறுதினமும் காரியாலயத்திற்குச் சென்றேன். டைரக்டர் சுந்தரம் இன்முகத்துடன் என்னை வரவேற்றார். ஸ்டூடியோவில் இரண்டு மணிக்கு படப்பிடிப்பு ஆரம்பமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'ராஜ ராஜேஸ்வரி' வெகு மும்முரமாக சுருணைகளுக்குள் அடைபட்டு வந்து கொண்டிருந்தாள். இப்படத்தை டைரக்ட் செய்பவர் டான்டன்தான். அன்றும் அவர் தேக அசௌகரியமாக இருக்கவே டைரக்டர் சுந்தரமே அவரது அன்றைய வேலையைச் செய்து முடிக்க ஒப்புக்கொண்டார்.

குறிப்பிட்ட நேரத்திற்குச் சற்று முன்பாகவே நானும் கலை நுணுக்கக்காரர்கள் சிலரும் ஸ்டூடியோக் காரில் ஏறிக்கொண்டு ஸ்டூடியோவிற்குச் சென்றோம். ஸ்டூடியோ நகருக்கு நான்கு மைல் வெளிப் புறத்தில் அழகிய இயற்கைக் காட்சிகளின் மத்தியில் அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கிருந்து பார்த்தால் பச்சைப் பசேலென்ற குன்றுகள் கண்களுக்கு குளிமை தரும். ஸ்டூடியோவிலிருந்து அடிவாரம் ஒரு மைல் தானிருக்கிறது. நல்ல குளிர்ச்சியான காற்றுஎப்பொழுதும் வீசிக்கொண்டேயிருக்கிறது. ஸ்டூடியோ அமைப்போ ஒரு சிறு கிராமம் போல் தோன்றுகிறது. 'மனோன்மணி' படத்திற்காக கட்டப்பட்ட சில நிஜ வீடுகளும் இதில் சேர்ந்துள்ளன. ஜன நெருக்கமில்லாத இடத்தில் நகர சப்தங்களின் இறைச்சல் கேட்காத வெகு தொலைவில் ஒரு ஆச்ரமம் போல் தோற்றமளிக்கிறது ஸ்டூடியோ. நமது கலைவாணர்கள் பலர் தங்களது மனோதர்மம் பூராவையும் வெளிப்படுத்த தனிமையை நாடினர். அதுபோலவே தன் தொழிலுக்கும் சாந்தியான முன்னேற்றத்தைக் கொடுக்க டைரக்டர் சுந்தரம் இந்த இடத்தைத் தேர்ந்து எடுத்தார் போலும்.

ஸ்டூடியோவில் இரண்டு ஸ்டேஜுகள் உள்ளன. வேலையாட்கள் தங்கள் தங்கள் வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர். குறிப்பாகக் கூறும் பொழுது கலை நுணுக்கக்காரர்களின் ஒத்துழைப்பு பிரமாதம் என்றுதான் கூற வேண்டும். டைரக்டர் சுந்தரத்திற்குக் கிடைத்துள்ள வெற்றிக்கு முக்கியமான காரணம் இதுதான் என்று நம்புகிறேன். சுந்தரமும் அவர்களுடன் சிநேக பாவத்துடன் பழகுகிறார். டைரக்டர் என்ற பெருமையோ, இறுமாப்போ சற்றேனும் கிடையாது. ஒத்துழைப்பின் காரணத்தினால் ஸ்டூடியோ வேலைகள் வெகு கிரமமாய் துரிதமாய் நடக்கின்றன. இல்லாவிடில் ஒரு ஜில்லா தலை நகரிலுள்ள

சுதேசி சாமான்களை வாங்கி
சுதந்திரத்தை நாடுங்கள்

கோயமுத்தூர்
சுதேசீஸ் லிமிடெட்
ராஜவீதி :: கோயமுத்தூர்

எங்கள் கடையில் விற்கப்படும்
ஒவ்வொரு சாமானும் சுத்த
சுதேசி என உறுதி கூறுகிறோம்

கைத்தறி
ஜவுளி ரகங்கள்
மொத்தத்திலும்
சில்லறையிலும்
கிடைக்கும்

ஸ்டுடியோவிலிருந்து இத்தனை படங்கள் வெகு வேகத்தில் வெளி வந்திருக்குமா?

அன்று ஏற்கனவே ஒலிப்பதிவு செய்யப்பட்ட ஒரு பாட்டிற்குப் பொருத்த படமெடுக்க வேண்டியிருந்தது. பார்வதி தேவி பரமசிவனுக்குப் பாத பூஜை செய்து கொண்டே கல்யாணி ராகத்தில் ஒரு பாட்டை நீட்டுகிறாள். பார்வதி வேஷத்தில் சந்தான லக்ஷ்மியும், பரமசிவன் வேஷத்தில் சகஸ்ர நாமமும் நடிக்கிறார்கள். படப்பிடிப்பு ஆரம்பமாகும் வரை எல்லோரும் உட்கார்ந்து கொண்டு தமாஷாகப் பேசிக் கொண்டிருந்தனர். பார்வதி தேவியின் குரல் மட்டும் சற்று உயர்ந்த தொனியில் வெளி வந்து கொண்டிருந்தது. வார்த்தைகள் மள மள வென்று வாயிலிருந்து கொட்டிக் கொண்டிருந்தன. நடிக நடிகையர் முகத்தில் தூளை அப்பிக்கொண்டு டாம்பீக ஆடைகளை அணிந்து நெடு நேரம் காத்துக் கொண்டிருக்கும் போது காலம் போக்க வேறு வழிதான் என்ன!

ஒத்திகை ஆரம்பமாயிற்று. பார்வதி தேவி வேஷத்திலிருந்த சந்தானலக்ஷ்மி கையில் தேவியின் கிரீடத்தைக் கொடுத்தான் ஒரு பையன். கிரீடம் தாங்கித் தாங்கிசலித்துபோன பார்வதிக்கு சங்கடம் ஏற்பட்டது. படப்பிடிப்பின் போது அதை வைத்துக்கொள்கிறேன் என்று கேட்டார். டைரக்டர் சுந்தரமும் சம்மதித்தார். உடனே கிரீடத்தின் பேரில் தனக்கு ஏற்பட்டு விட்ட வெறுப்பை சந்தான லக்ஷ்மி தெரிவித்தார். "இனிமேல் கிரீடம் போட்டுக் கொண்டு ஒரு படத்திலும் நடிக்க மாட்டேன்" என்று. அவள் கூறிய போது டைரக்டர் சுந்தரத்துக்கு அது போன்ற மற்றொரு சபதமும் ஞாபகத்துக்கு வந்தது. அது என்ன என்று நினைக்கிறீர்கள்? செருகளத்தூர் சாமா இனிமேல் தாடி வைத்துக் கொண்டு நடிக்கப்போவதில்லையாம்.

ஒத்திகைகள் முடிந்த பின்னர் படப்பிடிப்பு மூன்று கோணங்களிலிருந்து தனித் தனியாக எடுக்கப்பட்டு முடிவடைந்தது. சில மணி நேரத்திற்குள் வேலையை முடித்து விட்டார் சுந்தரம். நடு நடுவே ஓய்ந்த நேரங்களில் என்னுடனும் அன்று ஸ்டுடியோ பார்க்க வந்திருந்த ஏனையோர்களுடனும் பேசிக் கொண்டிருந்தார்.

ஸ்டுடியோவை விட்டுத் திரும்பி நகருக்கு வந்து கொண்டிருந்த பொழுது சாந்தி நிறைந்த ஸ்டுடியோவின் அமைப்பைப் பற்றியே நினைத்துக் கொண்டு வந்தேன். சேலத்திலிருந்து வெளி வரும் சினிமாப் படங்களுக்கு இந்த சாந்தி வெற்றியையும் வசூலையும் அளிக்கிறது என்றால் அது மிகையாகாது.

பம்பாய் டாக்கீஸின் பிரபல நக்ஷத்திரமான தேவிகாராணி, பாஷன் சம்பந்தமான பத்திரிகைகளைத் தவராது வாசித்து வருபவராம்!

* * *

ரமோலா என்ற ஹிந்திப் பட நடி 'ஸ்திரீகள் உதவிப் படை'யில் சேர்ந்தார். ஆனால் அதற்காக தினசரி காலையில் இரண்டு மைல் தூரம் நடக்கவேண்டியிருந்ததால் பழையபடி திரை உலகிற்கே திரும்பிவிட்டாராம்!

ராஜா தியேட்டர்

★

கோவையில்

நகரமக்களின் கண்குளிர செவிகுளிர மனம்குளிர
இன்பமளித்துவரும் தலைசிறந்த தியேட்டர்கள்

தென்னிந்தியக் கலைச்சித்திரங்கள் பூர்ணப்பொலிவுடன்
பிரகாசிக்கும் உன்னத வெள்ளித் திரைகள்

★

டைமண்ட்

டாக்கீஸ்



நடிகர் உலகம்

"மழுகி"

நிரம்பவும் சிறியது; எனினும் முழுதும் காணமுடியவில்லை; நெருங்கினல் ஓடுகிறது; ஓடச் சொன்னல் நிற்கிறது; சிலசமயம் இன்பம் தருகிறது; சில சமயம் எரிச்சல் தருகிறது; சொன்னலும் கேட்காது; தனக்காகவும் தெரியாது; தெரிந்தாலும் முடியாது—இப்படிப்பட்ட ஒரு 'தனி' உலகந்தான் 'நான் கண்ட தமிழ்ப்பட நடிகருலகம்!'

சொர்க்க மத்திய பாதாளமென்ற மூன்று லோகங்களையும் விட, விசேஷம் பல நிரம்பிய இந் நடிகருலகத்தில் சிறிது தாராளமாய்ப் பிரயாணம் செய்வோம். பாரதியின் "மனே ரதமும்" வெல்ஸின் "டைம் - மெஷினும்" கிடைத்திருக்குமானல் அவற்றிலமர்ந்து இந்நடிக உலகின் எதிர்காலத்தையுங்கூடநாம்காணலாம். ஆனல் இரண்டி லொன்ருவது கிடைக்காத குறை, இப்பொழுது நிகழ்கால நடிகருலகத்தை மட்டும் காண வேண்டி யிருக்கிறது!

அதோ! பிரம்மாண்டமான மலைப் பிராந்தியம். 'சல சல' வென்று ஜீவநாதம் தெறிக்கும் சிற்ருேடைகள். இதய வசீகர வெண் அருவிகள். பச்சைப் பசேலென்ற கதிர்க்கற்றைகள்—இன்னும் என்னென்னவோ அணிந்திருக்கும் இந் நடிகருலகின் மூலை முடுக்கெல்லாம் சென்று நாம் காண்பதென்பது அசாத்தியம். ஆனல் மனித உணர்ச்சிக்கும், இயற்கை அழைப்பிற்கும் பொருத்தமான அதன் முக்கிய பிரதேசங்களை மட்டும் கண்டு வருவோம்!

என்ன விசித்ரம்! நடிகருலகின் முற்பகுதியிலே ஒரு பிரிவினருளர். மற்ருெரு பகுதியில் மற்ருெருசாரார். பிறிதொருசாரார். பிறிதொரு வகுப்பினர். ஆம்! நமது சௌகரியத்திற்கு இவ்வுலகை மூன்று பிரிவாகச்செய்து அந்த ஒவ்வொரு பிரிவையும் தனித்தனி சிறு உலகங்களாகச் சிருஷ்டிப்போம்! இதோ! இருக்கின்றன அந்தக் "குட்டி உலகங்கள்!" பாருங்கள்! ஒன்று செல்லப்பா உலகம்; இரண்டு சின்னப்பா உலகம்; மூன்று, மீனலோசனி உலகம்.

இத் 'திரிலோக' வாசிகளையும் தனித்தனி பிரிவினராகப் பிரித்தெடுக்க நமக்குப் பெரிதும் உதவியவை அவரவர்களின் குணம்! பேச்சு! செயல்! இவற்றை ஆராய்வோமானல், அப்பப்ப! எத்தனையோ கொள்கை வேறுபாடுகள்; நடைமுறை வித்தியாசங்கள்; அனந்த கோடி மாறுபட்ட மனேபாவங்கள். அவற்றையெல்லாம் எடுத்துப் பேச, நிஜமாக, இந்த மலரே, இடங் கொள்ளாது! ஆனல் இத்திரிலோகங்களுக்கும் பொதுவானதும், தமிழ்ப்பட வளர்ச்சிக்கு மிக முக்கியமானதுமான "பிற பாஷைப்பட" விஷயம் இம் மூவுலகினரிடம் எவ்வெவ்வாறு கருதப்படுகிறதென்பதை மட்டும் கவனிப்போம்!

செல்லப்பா உலகம்

சினிமா உலகம் தமிழகத்தில் தன் கடைக்கண் வீச்சைப் பாய்ச்சாத காலத்தில், நாடக உலகிலே மிக்கப் புகழ் படைத்தும், தமிழரின் அன்பிற்கு வெகுவாகப் பாத்திரப் பட்டும், நாடக உலகின் நடிப்பு உப்பரிகையிலே லாவண்ய ஜெயக் கொடி நாட்டி வந்த பழைய நடிகர்களும், பழைய முறையை விரும்பும் சினிமா நடிகர்களும் இதிலே வசிக்கின்றனர். இவர்களுக்கு பழமையில் வற்ருத காதல். புதுமை பிடிக்காது. நாடகத் தமிழின் பண்பட்ட பழம் சிறப்புகள் நாகரீகமென்று சொல்லும் இன்றைய தமிழுலகிற்கு அரசனுக வேண்டுமென்று விரும்புவார்கள். தாங்கள் கொண்ட இந்த உயரிய கொள்கை மிகச் சரி யென்ற திடநம்பிக்கையோடு, அவற்றைக் காரியத்தில் செய்துகாட்ட பின் வாங்காதவர்கள். பலதரம் பட உலகில்தோல்வி யடைந்தும் இன்னும் அக் கொள்கையையே பற்றிக் கொண்டிருப்பவர்கள், எப்படியும் வெற்றியடைய வழி பிறக்குமென்ற மன உறுதியோடு. தாங்கள்தான் மற்றைய 'உலகத்தாரை' விட பழையமுறைகளினல் முதல் ரகத்தை எட்டிப் பிடித்தவர்கள் என்பது இவ்வுலகினரின் அசையாத நம்பிக்கை.

தமிழகத்தில் நாகரீக வெள்ளம் என்னதான் மோதினலும், தங்களது பழஞ்சிறப்பை அசைக்க முடியாது என்று எண்ணுகின்றனர். 'பாகவதர்' என்ற பட்டங்களும் இவ்வுலகின் சிறு பான்மையருக்கு உண்டு. 'பாட்டினலே இவ்வையத்தைப் பாலித்திடலாம்' என்று செயலளவில் காட்டுபவர்கள்.

இவர்களின் சூற்றுப்புற, குணநலன்களுக்கேற்ப 'புராணப் படங்களை'யே விரும்புவர். சினிமாவில் ஒரே புராண பாத்திரத்தை எத்தனை தடவை நடிக்கச் சொன்னலும் சலிப்பென்பது இவர்கள் எதிரே வர பயப்படும். பலாத்காரமாக இவர்களை சமூகப் படத்திலே நாம் தள்ளினலும், இவர்களின் இதய ஆழத்திலே கோயில் கொண்டிருக்கும் அந்தத் தடுக்க முடியாத 'பழம் பிரேமை' ஆவி இவர்களுக்கு வெற்றியை நல்காது. புதுப்புது முகங்கள் பட உலகில் ஜொலிப்பது பிடிக்காது. பழைய நடிகர்களே தமிழ்ப்பட முன்னேற்றத்திற்குப்போதும் என்று கூறுபவர்கள். இவர்களிடம் 'பிற பாஷை பட' விஷயம் எப்படி அமைந்திருக்கிறதென் றறிய எவருக்கும் ஆவலாய்த்தானிருக்கும்.

ஒரு சந்தர்ப்பத்தில் திரு. செல்லப்பாவும், நானும் பல விஷயங்களைப் பற்றி சம்பாஷித்துக் கொண்டிருந்தோம். அதிலே வந்து சிக்கியது இந்த "பிற பாஷைப்பட" விஷயம். "ஹிந்தி-ஆங்கிலப் படங்களில் முன்னேற்றம் நிறைந்த பல அம்சங்களிருக்கின்றன. அவற்றில் சிறந்தவற்றை எடுத்து நமது படங்களில் நிரப்புவோமானல் எளிதில் தமிழ்ப் படங்கள் முன்னேறுமே!" என்றேன் நான்.

"கூடாது! நாம் பிறபாஷைப் படங்களைப் பின்பற்றக் கூடாது. ஏனெனில் ஒரு வட இந்தியனே அல்லது ஒரு ஆங்கிலேயனே தமிழர்களைப் பொருட்படுத்தி நமது படங்களைப் பார்க்க மறுக்கும்போது நாம் மட்டும் அவர்களுடைய படங்களை ஏன் பார்க்க வேண்டும்?" என்ருர் செல்லப்பா! இவர் மட்டுமல்ல, தமிழ்

நாட்டின் 'பழைய கொள்கை'களை விரும்பும் நடிகர் பலரும் இதே மாதிரிதான் கூறுகின்றனர். காரணம், தங்களது பழம் வாழ்க்கைப் பெருமையில் "பிறபாஷைப்படங்"களின் புத்தெழுச்சிகள் எங்கு வந்து கலந்து விடுகின்றனவோ என்ற அஞ்சிக்கை இவர்களை அப்படங்களைப் பார்ப்பதினின்றும் தடுக்கிறது. பிறனொருவன் நம்மைக் கவனிக்கவில்லையென்பதற்காக நாம் பிறரின் கலைச் சுவையை ஒதுக்குவது அழகல்ல. ஷேக்ஸ்பியரின் காவியங்களையும், கம்பனின் காவியங்களையும் கண்டெடுத்தும் பாரேன் என ஒருவர் கூறுவாரானால், அது யாருக்கு நஷ்டம்? தன் குறையுணர்ந்து அதனை நீக்கி நமது படங்கள் உயர்நிலை அடையுமானால் வட-மேனாடல்ல, உலகம் முழுதும் தானாகவே வந்து அடிபணியுமென்பதை 'செல்லப்பா உலக' வாசிகள் அவசியம் உணர்ந்து கொள்வாராயின் நமது படக்கலை விரைவில் வெற்றியடையும்!

சின்னப்பா உலகம்

இது நம் இளைஞர்களுக்கு ஒரு விசித்திர உலகமாகத் தென்படும். உண்மையில் 'விசித்திர' மொன்றும் இவ்வுலகிலில்லை. ஏதாவது இருப்பது போல் தோன்றினால், அது இவ்வுலக வாசிகளின் ஸ்திரமற்ற மனப் பண்பாடு தான்! நாடக உலகில் சேவை செய்தவர்களும், கம்பெனிக் கலப்பற்ற பட நடிகர்களும், மிக உயர்ந்த நிலை அடைய நினைவு கொண்டிருக்கும் ஆரம்ப நடிகர்களும் இவ்வுலகிலே வசிகின்றனர். நிமிஷத்திற்கு நிமிஷம் தாங்கள் பெயரடையும் வழி என்ன? என்றே ஆராய்ந்து கொண்டிருப்பர். அதற்காக எந்த வழியையும் கைக்கொள்ள பின் வாங்க மாட்டார்கள். தாங்கள் செல்லும் வழி நியாயத்திற்கும், கலைக்கும், வளர்ச்சிக்கும் பொருத்தமானதா? என்று சிந்திக்கக்கூட இவர்களின் இருதயத் துடிப்பு இடந்தராது. பழமையும் வேண்டும்; புதுமையும் வேண்டும் இவர்களுக்கு. தம்மிடமுள்ள குறைகளை வெளி உலகம் கண்டு கொள்ள விரும்பாதவர்கள். தமது நடிப்பிலுள்ள குறைகளைப் பிறர் சுட்டிக் காட்டினால் பொறுமையுடனிருக்கத் தெரியாது. நடிப்புக் கலை தம்மை அணுகும்போது, முழுவதையும் ஸ்வகரித்து விட்டோமென்று அவசரப்படுவதால் பொறுமையுடனிருக்கத் தெரியாது. இவர்களில் பலரிடம் இருக்கும் அஞ்ஞான மூடிகளை உடைத்துப் பார்ப்போமானால் உண்மைக் கலா ஆர்வம் மெதுவாய் ஊறிக் கொண்டிருக்கும். பத்திரிகைகளில் எழுத நிரம்ப ஆசை! தமது கற்பனைகளைத் தமிழர் புகழ வேண்டுமென்ற வற்றாத ஆவலும்கூட! தமிழ்ப் பட "புது மலர்ச்சிக்கு" இவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் நாம். ஸ்திரமான கொள்கை ஒன்றும் இவர்களுக்குக் கிடையாது. இல்லையே என்ற கவலை கூட இல்லை. ஜனவசியம்; பணப் பெருக்கு — இவையே கண்! இவற்றையடைய புராணம், சமூகம், சரித்திரம் ஆகிய எதையும் எப்பொழுதும் கைக்கொள்வர்!

"பிற பாஷைப் படங்களைப் பாருங்கள்! அவற்றிலே உணர்ச்சி பாவங்களையும், நடிப்புக்கலையையும் என்ன அழகாய்க் காட்டுகிறார்கள்! அவர்களைப்போல நீங்களும் நமது படத்தில் நன்கு நடியுங்கள்" என்று இவர்களிடம் கூறினால், "உங்களுக்குச் சொந்த வஸ்துக்களின் மேல் அன்பு கிடையாது. பிறநாட்டு—பிறபாஷை மோகம்! அதனால்தான் எங்கள் உலகோரைக்குறை கூறி, அன்னியப் படங்களை உயர்த்துகிறீர்கள்," என்று நம்மேல் பாய்வார்கள். இவர்கள் தங்களது நடிப்பின் மீது பரிபூர்ண திருப்தி கொண்டிருப்பதாலும், தமது நடிப்பின் மீதேற்பட்ட அதீத அன்பினாலும், உண்மையில் தாங்கள் பின்னாலிருப்பதை அறிவதில்லை. தமிழ்ப் படம் உயர்வதற்காகத்தான் "பிற படங்களை"ப் பார்க்கச் சொல்லுகின்றனர் என்ற விஷயத்தை இவ்வுலகோர் உணர வேண்டும். "பிற படங்கள்" உயர்ந்தனவாகக் கருதப்படுவதற்கு, அப்படி அவற்றில் என்ன இருக்கிறது? என்று தாமாகவே ஆராய வேண்டும். அல்லது ஆராய்ந்து சொல்பவர்களின் கூற்றையாகிலும் செவி மடுக்க வேண்டும். இரண்டிலொன்றை இவ்வுலக வாசிகள் செய்வார்களாயின் அது நமது தமிழ்ப் படக்கலைக்கு மிகத் தொண்டு செய்ததாகும்!

மீனலோசனி உலகம்

இதிலிருப்பவர்களெல்லோரும் நட்சத்திர நடிகைகள். மீனலோசனங்களிலே இன்ப ஒளி வீச, மேனியிலே பொற் பொடிகள் மின்ன, திரும்பு மிடமெல்லாம் அழகொளி பரப்பும் கலா சேவகியரைக் கலைக்கண்களுடன் காண எந்தக் கலை அன்பர்தான் விரும்பார்? இவ்வுலகினின்றும் மறைந்தும், மறுபடியும் வருகிறோமென்று 'பயமுறுத்தும்' இரண்டே நடிகையரை (?) மட்டும் ஒதுக்கி விட்டுப் பார்த்தால், இம்மண்டலத்தில் இருப்போர் யாவரும் நல்ல யுவதியர் என்பது தெரியும்! இதுபோன்ற ஒருநிலை உலகின் எந்தப் படத் தொழிலுக்கும் இன்று இல்லை. அத்தோடு நல்ல 'முகவெட்டும்' இதில் பெரும்பாலருக்கு இருக்கிறது என்பது நம் அதிர்ஷ்டமே! மேலும் நடிகர்களைவிட நடிகையரின் எண்ணிக்கையே நம்மிடம் அதிகம். ஆனால் நம்மைப்பற்றிய துரதிர்ஷ்டம், இவர்களை நன்முறையில் உபயோகிக்கும் டைரக்டர் நம்மிடம் ஒருவர்கூட இல்லாததுதான். விமர்சகர்களின் யோசனையை அவர்கள் கூறும்—குறையை—அமைதியாய் ஒத்துக்கொள்கின்றனர். ஆனால் அதை நிவர்த்தித்துக் கொள்ள சக்தியற்றிருக்கின்றனர். படவுலகின் மறைவுத் திரையிலே இவர்கள் படும் கஷ்டம் வெகு அதிகம். சில்லறை நடிகையரைப் பற்றி கேட்கவே முடியாத பரிதாபம். தாகத்தால் தவித்தாலும் ஒரு பொட்டு தண்ணீரும் தராது தமிழ்ப்பட உலகம். இவ்வுலகில் அடியெடுத்து வைக்கும் போதே, "எங்களுக்குக் கதி, ரசிகர்கள், விமர்சகர்கள், பத்திரிகைகள் ஆகிய தாங்கள்தான்" என்று கண்ணீரும் கம்பலையுமாய் இவர்கள் நம்மைச் சூழ்ந்து கொள்ளும் காட்சி இதயத்தைக் கீறும். இவர்களில் சிலரிடம் முன்னேற்றத்திற்கான எண்ணங்கள் இயற்கையிலமைந்திருக்கின்றன. ஆனால் செவி கொடுப்பவர் யார்? உள்ளத்திலே தோன்றி உள்ளத்திலேயே மடியும் இவர்களின் உணர்ச்சி அலைக்கலைகள்.

நடிகை உலகிற்கு மீனலோசனியை முதலில் வைக்க சில காரணங்களுண்டு. சமூகப் படம் சமூகப்படம் என்று கதறிய காலத்தில் ஒரு சமூகப் படத்தில் கதா நாயகியாகத் திறமையுடன் நடித்து, தமிழிலும் சமூகப் படத்தை வெற்றியுற எடுக்க முடியுமென்று ரூபித்த பெருமை உடையவர். வாமனாவதாரம், ராஜா கோபிசந்த், குபேர குசேலா இவற்றிலே படுதோல்வியடைந்து, என் மனைவி ஒன்றில் மட்டும் பிரமாதப் பெயரெடுத்தார். நடித்து வெளி வந்தவை நாலு. ஆனால் அதற்குள்ளாக ர்சிகரின் அன்பை அடைவதென்பது ஆச்சர்யமானதுதான்! பதினெட்டு வயதிற்குள்ளாகவே மதிக்கலாம். மகா மாயாவில் மனோரமா என்ற ஒரு கோபாவேச பாத்திரமாக நடிக்கிறார். இவ்வாறு யுவநடிகைகளின் கோஷ்டியிலே மளமளவென்று முன்னேறி வரும் ஒரு இளம் நடியை முன்னணியில் நாம் நிறுத்தியது பொருந்தும். சில நாட்களுக்கு முன் 'மகா மாயா' ஷூட்டிங் முடிந்து இளைப்பாறிக் கொண்டிருக்கும்போது, இவரை நான் சந்திக்க நேர்ந்தது. படத்தொழிலின் பலதிறப்பட்ட கிளைகளைப் பற்றி பேசிக் கொண்டிருக்கும் போது "பிறபாஷைப்பட" விஷயமாக நடிகையுலகம் என்ன மனப்பான்மை கொண்டிருக்கிறதென்று அறிய, "தாங்கள் அன்னியப் படங்களைப் பார்க்கிறீர்களா? அவற்றில் வரும் நடிகையரைப் போல் நடிக்க முயற்சிப்பதுண்டா?" என்று வினவினேன். அதற்கவர் தந்த பதில் ஆச்சர்யத்தை அள்ளிக் கொட்டியது! "சென்னையில் நான் பெரும்பாலும் ஹிந்தி—ஆங்கிலப் படம்தான் பார்ப்பேன்! அதிலே வரும் நடிகையைப்போல் நடிக்க எனக்குக் கொள்ளை ஆசை! ஆனால் இதை எப்படி நான் வெளியில் சொல்ல முடியும்" என்றார். இவரின் இந்த பதில் மேற்சொன்ன இரு உலகோருக்கும் பிடிக்காமலிருக்கலாம்! ஆனால் உண்மையில் பிற பாஷைப் படங்களிலுள்ள சிறந்த கலா அம்சங்களை எடுத்துக் கொள்வதில் யாதொரு தப்புமில்லை!

அறிவு யாவருக்கும் பொது. ஒருவருக்கொருவர் ப்ரிமாறிக் கொள்ளவே கடவுள் அதை ஈந்திருக்கிறார். அது வடக்கிருந்தோ, மேற்கிருந்தோ வந்தாலும் அதனை எடுத்துக் கொள்ளக் கூசக்கூடாது. ஆனால் கூச வேண்டியது, அன்னிய நாகரீகத்தினிடம்தான். நாம் இரவல் வாங்கும் "பிற பாஷை கலா அம்சங்கள்" களை எடுக்கப்பட்டு, இந்திய மயமாகப் பண்படுத்தப்பட்ட பின்னரே நமது தமிழ்ப் படத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்பதை மறந்துவிடக் கூடாது.

இந்தியராகிய நம்மிடமிருந்து அன்னிய நாடுகள் பல, பல விஷயங்களை 'இரவல்' வாங்கியிருக்கின்றன. இதை மேற்படி 'திரிலோக' வாசிகளும் உணர்வார்களாயின் அன்றே நமது படக்கலை, லட்சிய சிம்மாசனத் திலமரும்.

சின்னப்பா . . . கண்ணாம்பா
கிருஷ்ணன் . . . மதுரம் நடித்தது

1944 ஜனவரி 14உ . . . . .
பொங்கல் தினத்தன்று
சென்னையிலும் மற்றும்
பல முக்ய நகரங்களிலும் ஆரம்பம்

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸாரின் . . . .

ஹரிச்சந்திரா

ஜெமினி
ரிலீஸ்

எதிர்பாருங்கள்!

தயாரிப்பிலிருக்கின்றன

பக்த மேத்தா

நடிகர்கள்-

M.K. தியாகராஜ பாகவதர்
S.D. சுப்புலக்ஷ்மி
T.R. ராஜகுமாரி
M.U.A.C. தயாரிப்பு

கிருதனுர்

நடிகர்கள்-

N.S. கிருஷ்ணன்
T.A. மதுரம் முதலியோர்
M.U.A.C. தயாரிப்பு

நம்பி ஆண்டார் நம்பி

உங்கள் அன்புக்-
குரிய பெயர்பெற்ற
நக்ஷத்திரங்கள்
நடிக்கிறார்கள்
சிவகாமி பிக்சர்ஸ் தயாரிப்பு

இம் 3 படங்களுக்கும் டைரக்ஷன்: K. சுப்பிரமணியம் B.A.B.L.,

சதீ சியாமளா

நடிகர்கள்
V. நாகய்யா — P. கண்ணாம்பா
N.S. கிருஷ்ணன் — T.A. மதுரம்
ரேணுகா பிலிம்ஸ் தயாரிப்பு
டைரக்ஷன் R.S. மணி

S.I.P. வெளியீடுகள்

G.H. RAO.

S.I. PUBLICITIES

நாடகமும் சங்கீதமும்

— ராவ்பகதூர் ப. சம்பந்த முதலியார்

ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு மாது சிரோன்மணியின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றுக்கொண்டிருந்தது. பாதிக் கச்சேரியின் போது நானும் ஒரு ஆங்கிலேய நண்பரும் போய்ச் சேர்ந்தோம். அப்போது பாடகி அற்புதமாகக் காம்போதி ராக ஆலாபனை செய்துகொண்டிருந்தார். நானும் எனது ஆங்கிலேய நண்பரும் அதை சந்தோஷமாக கேட்டுக் கொண்டிருந்தபோது, அந்த அம்மையார் திடீரென்று "டிங்கிள் டிங்கிள் லிட்டிள் ஸ்டார்" என்று பாட ஆரம்பித்தார். இதென்ன "டிங்கிள் டிங்கிள்" என்று நாங்கள் வியப்படைந்தோம். அப்புறம் கவனித்துக் கேட்கும்போது, "ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்" என்ற பாட்டை அவர் 'கொலை' செய்து கொண்டிருக்கிறார் என்று தெரிந்தது. சாதாரணமாக இந்தப் பாட்டை யாரும் இசையுடன் பாடுவதில்லை. இசையுடன் பாடுவதற்கு எத்தனையோ நல்ல ஆங்கிலப் பாட்டுகள் இருக்கின்றன. அவை எல்லாம் இந்த அம்மையாருக்குத் தெரியாது போலும். அவருக்குத் தெரிந்ததெல்லாம் இந்த ஒரு பாட்டுத்தான். தம்முடைய கச்சேரியைக் கேட்கவந்த ஆங்கிலேயரை மகிழ்விப்பதற்காகவே அவர் அந்தப் பாட்டைப் பாடினார். ஆனால் மற்றெல்லோரைக் காட்டிலும் அந்தப் பாட்டினால் அதிகமான வேதனை அடைந்தது அந்த ஆங்கிலேயர்தான். ஏனெனில் மற்றையோரைவிட அவர்தான் அந்தப் பாட்டின் சித்திரவதையை அதிகமாக உணர்ந்தவர்.

ஆகவே தமிழ்ப் பாட்டுகளை உணர்ச்சியுடன் பாட விரும்பும் தமிழ்ப் பாடகர்கள், தாங்கள் பாடும் பாட்டுகளின் பொருளை உணர்ந்து கொள்ளும் அளவிற்காவது தமிழறிவு பெற்றிருத்தல் மிகவும் அத்யாவசியம். தமிழ்ப் பாட்டுகளின் விஷயமே இப்படியிருக்கும்போது, கேட்போருக்கேனும் பாடுவோருக்கேனும் சிறிதும் பொருள் விளங்காத தெலுங்கு முதலிய பிறபாஷைப் பாடல்களைப்பற்றி நான் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. அத்தகைய பாட்டுகளினால், பாடுவோருடைய சாரீர நயத்தினாலும் சங்கீத சாமர்த்தியத்தாலும் சிறிது செவிக்கினிமை ஏற்பட்டாலும், இசையின் பயனாகிய உள்ளக்கிளர்ச்சி ஒரு சிறிதும் ஏற்படாது. உள்ளத்திற்கு இனிமை வேண்டுமானால், அதைப் பொருள் விளங்கும் தமிழ்ப் பாட்டுகளின் மூலமாகவே பெற முடியும். பிறமொழிப் பாடல்கள் மூலம் சிறிதும் பெறமுடியாது.

நாடகத்தில் சங்கீதம்

இனி, அடுத்தபடியாக நாடக மேடையில் சங்கீதம் எப்படியிருக்கிறது, எப்படியிருக்க வேண்டும் என்பதைக் கவனிப்போம். கடந்த 52 வருஷங்களாக நாடகக் கலைக்கு நான் தொண்டாற்றி வருகிறேன். நாடகத்தில் முக்கிய அம்ஸமாக இருக்க வேண்டுவது நடிப்பேயெனினும் அதில் பாட்டும் கலந்திருப்பதை நான் விரும்புகிறேன். ஆனால் அந்தப்பாட்டு நன்கு ஒழுங்குபடுத்தப்பட்டிருக்க வேண்டும் என்றே நான் கூறுகிறேன்.

தமிழ் நாடகங்களில் பாடுவதாயிருந்தால் தமிழ்ப் பாட்டுகளையே பாடவேண்டும். தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய பிறமொழிப் பாட்டுகளைப் பாடுதல்கூடாது. அவைகளைப் பாடுவதில் அர்த்தமில்லை. தமிழ் பாஷை பேசும் கதா பாத்திரங்களின் வேஷங்களைத் தாங்கி நடிக்கும்போது, நடிகர்கள் தெலுங்குப் பாட்டுப் பாடக்கூடாது. கர்ணனும் அர்ஜுனனும் பிரகலாதனும் தமிழிலேயே பேசிக்கொண்டிருந்துவிட்டுத் திடீரென்று தெலுங்கில் பாட ஆரம்பித்தால் விரஸமாயிருக்கும். எனவே நாடக மேடைகளில் பேசும் பாஷையிலேயே பாட்டுகளும் அமைந்திருக்க வேண்டுவது அவசியம். அப்படிப் பார்க்கும்போது, தமிழ் நாடகமேடைகளில் தமிழிசைதான் பாடப்பட வேண்டும் என்பதாகிறது.

இனி, நாடகமேடைகளில் பிரவேசப்பாட்டு என்று ஒன்றுண்டு. பிரவேசப் பாட்டுப் பாடும் பழக்கம் அமெச்சூர் நடிகர்களைவிட நாடகத் தொழிலாளர்களிடையேதான் அதிகமாகக் காணப்படுகிறது. நாடகம் என்ன கதையாயிருந்தாலும் அவர்கள் இந்தப் பிரவேசப் பாட்டைப் பாடாமலிருப்பதில்லை. அப்படி பாடுகிற பாட்டும், அநேகமாய், கதையின் சந்தர்ப்பத்துக்கும், சிறிதும் பொருத்தமற்றதாய் இருக்கும். உதாரணமாக வள்ளி திருமண நாடகம் ஒன்று நடந்து கொண்டிருக்கும்போது, மயில் வாகன முருகன் வேடம் தாங்கி ஒரு நடிகர் "ஜய ஜயகோகுல பால" என்ற தெலுங்குக் கீர்த்தனையைத் தமது பிரவேசப் பாட்டாகப் பாட ஆரம்பித்துவிட்டார். இதில் முதலாவதாக, தமிழ் நாடகத்தில் தெலுங்குப் பாட்டுப் பாடிய குற்றம் ஒருபுறமிருக்க, முருகன் வேஷம் தாங்கியவர் கோகுலபாலனை ஸ்துதி செய்து கொண்டுவந்து காட்சியளிப்பது சிறிதும் பொருத்தமற்றதாயிருக்கிறது.

இதே மாதிரி, ஒரு சமயம் ஹரிச்சந்திரா நாடகம் நடந்து கொண்டிருக்கும்போது, பிள்ளை புதைக்கும் கட்டத்தில் சந்திரமதி வேஷம் போட்டவர் ஹிந்துஸ்தானியில் பாட ஆரம்பிததுவிடுகிறார்.

அர்த்தமற்ற ஆசை

நம் நடிகர்களிடையே காணப்படும் இன்னொரு குற்றம் என்னவென்றால், அவர்கள் ஒவ்வொரு

வரும் ஏதாவது ஒரு பாட்டேனும் பாட வேண்டுமென்று ஆசைப்படுவதுதான். இது ஓர் அர்த்தமற்ற ஆசை. ஒவ்வொருவரும் தமது பாகத்தை நன்கு நடிக்க வேண்டும் என்று ஆசைப்படுவதை விடுத்து, ஏதாவது பாடித்தீர வேண்டும் என்று ஆசைப்படுவது சரியல்ல. நடிகர் பாடுவதன் மூலம் நாடகத்தைச் சோபிக்கச் செய்யும் சந்தர்ப்பங்கள் பல இருக்கின்றன. அத்தகைய சந்தர்ப்பங்களில் பொருத்தமான பாட்டுகள் பாடுவதை யாரும் ஆட்சேபிப்பதற்கில்லை. ஆனால் பொருத்தமற்ற சந்தர்ப்பங்களில் பாடக்கூடாத நடிகர்கள் பாட விரும்பும்போது அதை நாம் ஆட்சேபிக்க வேண்டியதிருக்கிறது.

ஒரு நாடகத்தில் கதாநாயகனாக வேஷம் தரித்தவருக்குப் பாட வேண்டுமென்ற ஆசை வந்து விட்டது. ஆனால் அவர் நடித்த கதையின் சந்தர்ப்பம் பாடுவதற்குப் பொருத்தமானதல்ல. எனவே கதைக்கு சந்தர்ப்பமில்லாமல் தனியாக ஒரு பாட்டு பாடினால் நாடகத்தின் விறுவிறுப்புக் கெட்டு விடுமென்று கூறி நான் ஆட்சேபித்தேன். அவ்வளவுதான்! அந்த நடிகர் நாடக மேடையில் 'வேலைக்காரன் எங்கே போனான்?' என்று சாதாரணமாக வசனத்தில் கேட்க வேண்டிய ஒரு இடத்தில், "வேலைக்காரன் எங்கே போனான்" என்பதையே ஒரு பல்லவியாக எடுத்துக் கொண்டு பிரமாதமாக நிரவல் செய்து ஸ்வரம் பாடக் கிளம்பி விட்டார்!

ராக ஆலாபனை

ராக ஆலாபனம் செய்வதைக் கேட்பதில் எனக்கு மிகுந்த பிரியமுண்டு என ஏற்கனவே கூறியுள்ளேன். ஆனால் நாடகங்களில் ராக ஆலாபனம் செய்வது கூடாது என நான் அபிப்பிராயப்படுகிறேன். சுபத்ரா கல்யாணம் நடந்து கொண்டிருக்கிறது. அப்போது தர்ம புத்திரரிடத்தில் அர்ஜுனன் தீர்த்த யாத்திரை செய்வதற்காக விடைபெற்றுக் கொள்கிற சமயம். அர்ஜுனன் ஒரு விருத்தம் பாடுகிறான்.

"அண்ணா அ......அ...அதரும நந்தனா அஅ......தோம் தர நந்நா அ..........." "அண்ணா தரும நந்தனா" எல்லாம் சரிதான். இந்த "தோம் தர நந்நா"வுக்கு என்ன அர்த்தம்! இப்படி அர்த்தமற்ற சொற்களும், ஆலாபனையும் நாடக மேடையில் வரக்கூடாது. மேலும் ராகம் பாடிக் கொண்டிருப்பதற்கு அது சந்தர்ப்பமுமல்ல. அர்ஜுனன் தீர்த்த யாத்திரை செய்து முடிந்து திரும்பி வந்த பிறகு தர்ம புத்திரர் அவனை நோக்கி "தம்பி அர்ஜுனா, உன் தீர்த்த யாத்திரை காலத்தில் நீ ஏதோ சங்கீத அப்பியாசமும் செய்து வந்தாயாமே? எங்கே கொஞ்சம் பாடு, பார்ப்போம்" என்று கேட்டால் அப்போது அர்ஜுனன் மணிக் கணக்கில் வேண்டுமானாலும் உட்கார்ந்து கச்சேரி செய்யலாம். அப்படிக்கில்லாமல் யாத்திரை செய்ய உருக்கமாக விடை பெற்றுக் கொள்ளும் போது "தோம் தர நந்நா" போடக்கூடாது.

இந்த "தோம்தரனா"வைப் பற்றி இன்னொரு வார்த்தை. நாடகத்தில் ஒவ்வொரு வார்த்தைக்கும் நடிகர்கள், அதற்குரிய பாவத்தோடு நடிக்க வேண்டும். "தோம்தரனா" என்ன பாவத்தைக் குறிக்கிறது! அதற்குள்ள அபிநயம்தானென்ன? சில நடிகர்கள் ஸ்வரம் பாடுகிறார்கள் என்று முன்பு சொன்னேனல்லவா? அந்த ஸ்வரங்களுக்கெல்லாம் பாவமென்ன? அவற்றிற்கு அபிநயம் என்ன? இப்படி அர்த்தமற்ற ராக ஆலாபனையும் ஸ்வரம் பாடுதலும் நாடகமேடைகளில் காட்டவே கூடாது.

நடிகர்கள் ஒவ்வொருவரும் பாட விரும்புவதைப் போன்ற தவறு வேறொன்றுமில்லை. அமெரிக்க நண்பர் ஒருவரும் நானும் அரிச்சந்திர நாடகம் ஒன்றைப் பார்க்கச் சென்றோம். அந்த நாடகத்தில் பாட்டுப் பாடாத நடிகர் ஒருவர் கூடக் கிடையாது என்று சொல்லலாம். எல்லோரும் பாடினார்கள். எடுத்ததற்கெல்லாம் பாட்டுத்தான், நாடகம் முடிந்து வெளி வந்ததும் அமெரிக்க நண்பரை "நாடகம் எப்படி யிருக்கிறது?" என்று கேட்டேன். அவர் அதற்கு, "ஆமாம், மிஸ்டர் சம்பந்த முதலியார், இந்த நாடகத்தில் எல்லோரும் பாடினார்களே, லோகிதாஸனைக் கடிக்க வந்த பாம்பு மட்டும் ஏன் பாடவில்லை?" என்று என்னைத் திருப்பிக் கேட்டார்!

நாடகமேடையில் பாடும்போது அந்தந்தக் காலத்துக்குத் தக்க உசிதமான ராகங்களில் பாட்டுகள் பாட வேண்டும். ஒரு சமயம் பாதுகா பட்டாபிஷேகம் நடந்து கொண்டிருந்தது. தசரத சக்ரவர்த்தி மூர்ச்சையாகிக் கிடக்கிறார். மந்திரி சுமந்திரர் அவரை எழுப்பி வருகிறார். அந்தக் காலத்தில் அரசர்களை இசைபாடியே எழுப்புவது வழக்கம். அப்போது பாடுவதற்கேற்றவை பூபாளம், மலய மாருதம் முதலிய சாந்தமான ராகங்களேயாம். நான் குறிப்பிடுகிற சந்தர்ப்பத்தில் வரும் மந்திரி வேஷக்காரருக்கு இந்த நுட்பம் தெரியாததால் அவர் அடாணாராகத்தில் பாடி தசரதனை எழுப்பினார்! ஆகவே நடிகர்கள் எந்தெந்த வேளையில் என்னென்ன ராகங்கள் பாட வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டுவது மிக அவசியமாகும்.

['செட்டிநாடு' தமிழிசை மலரிலிருந்து]

நியூ தியேட்டர்ஸின் பிரபல நடிகரான நவாப், யகூதி-கி-லட்கி என்ற படத்தில் ஒரு கிழவனாகத் தோன்ற வேண்டியிருந்ததன் காரணமாக தமது நிஜப் பற்களையெல்லாம் அகற்றிவிட்டார். தற்போது அவர் வைத்துக்கொண்டிருப்பது பொய்ப் பற்களாம்!

* * *

சண்டை, கொலை சம்பந்தமான காட்சிகளின்போது ரத்தத்தைக் காண்பிக்க சாக்லெட் சிரப் (Chocolate Syrup) என்ற திராவகத்தை ஸ்டூடியோக்களில் உபயோகிக்கின்றனர்.

* * *

மேரி ட்ரெஸ்லர் என்ற ஆங்கில நடி, தான் முதன்முதலில் நடித்த படத்தின்போது அணிந்திருந்த மேல் ஜோடுகளை, தன் வெற்றியின் ஞாபகமாகப் பத்திரப் படுத்தி வைத்திருக்கிறாராம்!

யுத்தமும் படத்தொழிலும்

— கே. ஏ. ராவ்

"ஏன் ஸார்! இந்த சண்டை எப்போது நிற்கும்? விலைவாசிகளெல்லாம் குறையுமா? இந்தியா தேசத்திற்கு ஏதாகிலும் கதிமோக்ஷம் உண்டா?" என்று நம்மில் சிலரைக் கேட்டால், சண்டை எப்போது நிற்கும் என்பதைப்பற்றி மாறுபட்ட அபிப்பிராயம் சொன்னாலும், "விலைவாசிகள் இன்னும் பத்து, பதினைந்து வருஷங்களுக்கு இப்படியேதான் இருக்கும். இந்தியாவின் கதியும் இதே கதிதான்" என்று பளிச்சென்று பதில் சொல்வது சகஜமாகி வருகிறது. இதே எண்ணத்தில், எந்த மாஜி தலைவர் என்ன அலறியபோதிலும் பொதுமக்கள் தங்கள் பாட்டிற்கு தங்கள் 'ரேஷன்' கார்டுகளை பந்தோபஸ்து படுத்துவதில் முனைந்திருப்பதைக் காண்கிறோம். நம் கையில் ஒருவித சக்தியுமில்லாமல் இருக்கும் வரையில் 'ராமன் ஆண்டாலென்ன? ராவணன் ஆண்டாலென்ன?' என்ற மனப்பான்மையில் இருந்துவிடுகிறோம்.

ஆனால் பிரிட்டிஷ், அமெரிக்கப் பொதுமக்களின் சார்பாக உழைக்கும் தலைவர்களோ, யுத்தம் எப்பொழுது முடிந்தாலென்ன? எப்படி முடிந்தாலென்ன? என்னும் கொள்கையின் பேரில் தத்தம் தேச மக்களுக்கு சாசுவதமான அனுகூலத்தைக் கொடுக்கும் திட்டங்களையும் உலக க்ஷேமத்திற்காக (இந்தியாவைத் தவிர்த்து) புனர் நிர்மாண ஏற்பாடுகளையும் தயாரித்திருப்பதை நேயர்கள் அறிவார்கள்.

கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக, யுத்த ஏற்பாட்டின் நிமித்தம், இந்தியாவில் ஏதோ சில தொழில்கள்—இரும்பு, துணிமணி, காகிதம், —போன்றவைகள் அதிக லாபமடைந்து வருவதையும் அந்த லாபத்தில் பெரும்பாலும் அமிதலாப வரியின்மூலம் சர்க்காரைச் சேர்வதையும் அறிவோம். யுத்தம் முடிந்தபிறகு மேற்கூறிய தொழில்களில் எத்தனை நிலைத்துநின்று இதே லாபத்தை அடையுமென்பது ஊகத்திற்குரிய விஷயமேயன்றி திடமாய் கூறுவதற்கில்லை.

மேற்கூறிய புனர்நிர்மாணத் திட்டங்களுள் இந்தியப் படத்தொழிலும் முக்கிய ஸ்தானம் வகிக்க வேண்டுமென்பதை இத்தொழிலிலீடுபட்டவர்கள் இப்பொழுதுதான் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். படத்தொழில் சம்பந்தமாக சமீபத்தில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகளையும், சர்க்கார் கட்டுப்பாடுகளையும் பார்த்தால் யுத்தத்தின் முடிவில் இந்தியப் படத்தொழில் எந்த நிலையிலிருக்கும்? இத்தொழிலைப் பாதுகாக்க எவ்விதத் திட்டங்கள் வகுக்க வேண்டும்? என்னும் விஷயங்களைத் தீவிரமாக ஆலோசிக்க வேண்டியது அவசியமென்பது விளங்கும். இது சம்பந்தமாக பம்பாயில் இந்திய சலனப்பட சங்கத் தலைவர் ஸர் ரஹீம்துல்லா ஷினாய் கூறியுள்ள சில புள்ளி விவரங்கள் நேயர்கள் கவனிக்கத் தக்கது.

இந்தியப் படங்களின் வருமானம் 1941-ல் சுமார் 4 கோடி ரூபாய்கள் என்றும், 1942—43-ல் 6 கோடி என்றும் மதிப்பிட்டிருக்கிறார். ஆனால் சென்ற வருஷத்தைவிட இவ்வருஷம், வெத்து பிலிம் போன்ற சில முக்கியமான சினிமா சம்பந்தப்பட்ட சரக்குகளும், யந்திர சாதனங்களும் இறக்குமதியில்லாததும், சர்க்கார் கட்டுப்பாடும் சேர்ந்து, முதலாளிகள் ஆரம்பத்தில் போட்ட திட்டப்படி படங்களை வெளிக்கொண்டுவர முடியவில்லை என்றும் அதிக லாபம் என்று மற்ற தொழில்களைப்போலல்லாது படத்தொழிலில் நிகர லாபம் குறைவு என்றும், அதுவும் யுத்தத்திற்கு முன்னால் வந்த லாபத்தைவிட சுமார் 12 சதவிகிதம்தான் படத் தொழிலாளர்களுக்குச் சேருகிறது என்றும், மொத்த லாபத்தில் சுமார் 80 சதவிகிதத்திற்குமேல் வரி முதலியன மூலம் சர்க்காரைச் சேருகிறது என்றும், 1940 வருஷம்வரை அதி விரைவாக முன்னேறிவந்த படத்தொழில் திடீரென்று பாதிக்கப்பட்டு நெருக்கடியில் அடிபட்டு விட்டதென்றும் அறிகிறோம். மேலும் தகுந்த வசதிகள் ஏற்பட்டு கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டால் இந்தியப்படங்களின் வருமானம் சில வருஷங்களில் 25 முதல் 30 கோடி ரூபாய்கள்வரை ஆகும் என்றும், அமெரிக்காவைப் போல் இந்தியாவிலும் இத்தொழில் பிரபலமடையும் என்றும் ஏற்படுகிறது.

படத்தொழில் புனர் நிர்மாணத் திட்டங்களைக் காரியத்தில் சாதிக்க வேண்டுமென்றால், தேச முழுதும் உள்ள, பட முதலாளிகளும், தொழிலாளர்களும் தத்தம் ஸ்தாபனங்களின் மூலம், பலமான ஒரு மத்ய ஸ்தாபனத்துடன் சேர்ந்து தங்கள் குறைகளை ஒருமுகமாக வெளியிட வேண்டுமென்று ஸர் ரஹீம்துல்லா வற்புறுத்துகிறார். இதற்காக இப்பொழுது முதல் படங்களின் மூலம் வரும் லாபத்தில் ஒரு பாகத்தை ஒதுக்கி வைத்து, "இந்தியப்படத் தொழில் புனர்நிர்மாண நிதி" ஒன்றை ஏற்படுத்தினால் சில வருஷங்களில் சுமார் ஒரு கோடி ரூபாய் ஆகும் என்றும் இதை படத்தொழிலுக்குத் தேவையான, சில சில்லறை யந்திர பாகங்கள் தயாரிப்பதற்கும் புதிய திட்டங்கள் வகுப்பதற்கும் உபயோகிக்கலாம் என்றும் குறிப்பிட்டிருக்கிறார். அப்படியின்றி தற்போது வரும் லாபத்தை நம்பி முதலாளிகள் தங்கள் சுய நலத்தை மாத்திரம் கருதி ஒரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளா விட்டால், யுத்த முடிவில் படத் தொழில் மிகவும் பாதிக்கப்படுவதுமல்லாமல் மற்ற தொழில்களைப் போல்

இதுவும் இந்தியர்களின் கைகளிலிருந்து நழுவிவிடக்கூடும்.

ஸர் ரஹிம்துல்லா மேலே கண்ட விஷயங்களை வட நாட்டு முதலாளிகளை உத்தேசித்துக் கூறியிருக்கிறார். மற்றும் வடநாட்டிலுள்ள சில விநியோகஸ்தர்கள், தொழிலாளர்கள், இவர்களின் தனிப்பட்ட ஸ்தாபனங்களையும் ஒன்று சேர்க்க முயன்றிருக்கிறார்.

இவ்விஷயங்களைக் குறித்து தமிழ் நாட்டிலும் தீவிரமாகப் படத்தொழில் சம்பந்தப்பட்ட அனைவரும் ஒன்றுபட்டு ஆலோசனை செய்து தகுந்த திட்டங்கள் வகுக்க முற்பட வேண்டும். ஆனால் தற்போது பெரும்பான்மையான தமிழ்ப்பட முதலாளிகள் ஒருவருக்கொருவர் சம்பந்தமின்றி தமக்குத் தோன்றியபடி தனித்தனியே ஒருவிதத் திட்டமுமில்லாது, தேச முன்னேற்றத்திற்கும், பொதுஜன நன்மைக்கும் உதவாத படங்களைத் தயாரிப்பதைக் காண்கிறோம். மேலும் பெரிய முதலாளிகள், சில்லறை முதலாளிகள், விநியோகஸ்தர்கள், மற்ற தொழிலாளர்கள் இவர்களிடையே பரஸ்பர ஒத்துழைப்பும் குறைவாகக் காணப்படுகிறது. யுத்தத்திற்குப் பின் இத்தொழிலின் நீண்ட கால நன்மையைக் கருதினால் தற்போது காணப்படும் சில குறைகள் நீக்கப்பட வேண்டிய தவசியமென்பது புலப்படும்.

மேலும் தமிழ்நாட்டுப் படங்களும் வடநாட்டுப் படங்களும் ஒரேதரமாக இருக்க வேண்டுமென்றால் முக்கியமாக தமிழ்ப் படங்களின் கதையமைப்பு, சம்பவங்கள், விறுவிறுப்பு இவைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்பொழுதுதான் தமிழ்ப் படங்களின் மதிப்பு உயர்ந்து, தமிழ்நாட்டு ஸ்தாபனங்களும்வட நாட்டு ஸ்தாபனங்களும் ஒன்று சேர்ந்து, யுத்த முடிவில் இத் தொழிலின் ஆதிக்கத்தைப் பூரணமாக இந்தியர்களின் வசம் வைத்துக்கொள்ளவும், தகுதியான திட்டங்களை வகுத்து படத் தொழிலை அபிவிருத்தி செய்யவும் முடியும்.

இந்திய மக்களின் பொது நன்மைக்காகவென்று, ஒரு 'பெவரிட்ஜ் ப்ளானோ,' அல்லது தேச சுதந்திரத்திற்கென்று ஒரு 'அட்லாண்டிக் சார்ட'ரோ நம்மால் அடைய முடியாவிட்டாலும், இன்னும் சில வருஷங்களில் கிட்டத்தட்ட 20 கோடி மக்களைக் கவரும் இந்திய படத்தொழிலை யுத்தேசித்தாவது இத்தொழிலில் சம்பந்தப்பட்டவர்கள் தகுந்த நடிவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

ஜிம்மி டோரன்டி என்ற ஆங்கில நடிகர், தன் வாழ்நாளில் பள்ளிக்கூடமே போனதில்லையாம்!

* * *

ஜயஸ்ரீயின் தாய்பாஷை கொங்கணியாம். ஆனால் இதை அவர் ஒப்புக்கொள்வதில்லையாம்.

கைத்தறி ஜவுளிகள்

நீடித்த நாள் உழைக்கின்றன
இந்தியப் பொருளாதார நிலைமையை சீர்திருத்துகின்றன
மில் ஜவுளிகள்போன்று நூதன டிசைன்களில் உள்ளன

★

மொத்தத்திலும் சில்லறையிலும்
மலிவான விலைக்கு உறுதியான
சரக்குகள் ஏராளமாகக்
கிடைக்குமிடம்

ராஜாஜி
வேர் ஹவுஸ்,
ராஜவீதி, கோயமுத்தூர்

For HANDLOOM TEXTILES in wholesale and retail quantities:

RAJAJI WARE HOUSE

RAJA STREET :: COIMBATORE

ராமபிரம்மம் தயாரித்த பந்துலம்மா

ஒரு உபாத்தியாயினியின் வாழ்க்கைச் சித்திரம்
லக்ஷ்மிராஜ்யம் உபாத்தியாயினி பாத்திரத்தில் தோன்றுகிறார்



லீலா சிட்னிஸ்

பம்பாய் டாக்கீஸாரின் 'ஹமாரி பாத்'

என்ற ஹிந்தி படத்தில்
ஜெயராஜும்
தேவிகா ராணியும்

கதாநாயகனும்
கதாநாயகியாகவும்
நடிக்கின்றனர்



ஹமாரி பாத்தில்
தோன்றும் இரு அழகிய முகங்கள்
இடதுபக்கமிருப்பது
பிரபா
வலதுபக்கம்
சூரய்யா

★

★

★

விசித்திரம்

ஆர். ஷண்முகசுந்தரம்

ஏழு எட்டு வருஷத்துக்கு முன்பு நானும் சில நண்பர்களும் ஒரு மாந்தோப்புக்குப் போயிருந்தோம். நண்பர்கள் மாமரத்தின் கிளைகளிலே ஏறி விளையாடிக் கொண்டிருந்தார்கள். நான் மாமரத்தின் கீழே ஒரு புத்தகத்தை வைத்து உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தேன். தளிரும், கொத்தும், காயும், அடிக்கடி என்மேல் அபிஷேகத்திற்காக வீசப்பட்டன. எல்லாம் பொறுத்துப் படித்துக் கொண்டிருந்தேன். அப்போது கலகலப்பான சப்தம் வந்தது. மரமே முறிந்து விழும்படி கதம்ப ஓசை கேட்டது. "என்னடா இது" என்று திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன்.

ஒருவன் ஓடி வந்தான். மற்றவர்களும் கீழே இறங்கிவந்து, "பார்த்தாயா, பார்த்தாயா?" என்றார்கள். "என்ன, கூத்தா ஆடுகிறது?" என்றேன். "இல்லே, கூத்தில் ஆடுகிறவர் வருகிறார்!" என்றார்கள். எனக்கு விஷயம் விளங்கிற்று. அப்போது ஒரு சினிமா நடிகர்-நல்ல புகழ் பெற்றவர்தான்-பேசாத படங்களிலே நடித்துப் பிரக்யாதி பெற்ற அவர்—வந்துகொண்டிருந்தார். சில நண்பர்களுக்கு அவர் ரொம்பத் தெரிந்தவர். வேடிக்கையாக வெகு நேரம் பேசிக்கொண்டிருந்தோம். என் கையில் வைத்திருந்த புத்தகமும் சினிமா சம்பந்தப்பட்டதுதான். அந்த சினிமா நண்பர் அதைப் பார்த்துவிட்டு, பேசாமல் என்னிடம் கொடுத்தார். படங்களைக் கூட திருப்பிப் பார்க்கவில்லை. எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால் பிறகு சங்கதி தெரிந்தது. அவர் அந்தப் புத்தகத்தை மாத்திரம் அல்ல; எல்லாப் புத்தகங்களையும் கையில் தொடமாட்டாராம். அவர் என்ன அப்படி மேதாவியோ என்றால், பாவம், அப் பாவி மனிதனுக்கு படிக்கத் தெரியாது!

எனக்கு அப்போது அது ஆச்சரியமாயிருந்தது. ஆனால் பிற்பாடு அந்த ஆச்சரியமெல்லாம் மறைந்துவிட்டது. நான் கண்ட நடிகர்கள் சுத்தத் தற்குறிகளாக இருந்தார்கள். புகழ் பெற்ற நடிகைகளுக்குக் கையெழுத்தே சரியாகப் போடத் தெரிவதில்லை. படிக்கத்தெரியாதவர்களுக்கு நடிக்கத் தெரியுமா என்பது வேறு விஷயம். கிராமியப் பண்பாட்டை, நகரப் புறத்திலே காண முடியாவிட்டால், ஆங்கிலப் பட்டண வாசியிடம் காணாத அரிய பண்பாட்டை கிராமத்தான் ஒருவனிடம் கண்டால், நாம் வரும் முடிவு வேறு. இந்த விஷயத்தில் நாம் வருகிற முடிவு வேறு. ஒரு அமெரிக்க கவி சொன்னார். "நமக்கு எவ்வளவோ செல்வம் இருக்கிறது. பொருள் சேர்க்கிறோம். ஆனால் ஆங்கிலப் பிரபுக்கள் சிலரிடம் உள்ள பண்பாடு நமக்கு வருவதில்லையே!" இப்படியாக வருந்தினார்.

நம்முடைய நட்சத்திரங்களுக்கு இலக்கியத்தில் என்று ஞானம் வருமோ, என்றைக்கு இலக்கியத்தில் அபார ஆசை அவர்களுக்குத் தோன்றுமோ, அன்று 'சினிமா சரிதத்'திலே ஒரு நன்னாள் என்பதில் சந்தேகமில்லை. உள்ளம் விரிவடையும் போதுதான், உணர்ச்சியும் அதற்கேற்ப பாவமயமான நடிப்பும் விரிவடையும். இப்போது கலை அன்பர் என். எஸ். கிருஷ்ணன் போன்றவர்களிடம் தோன்றியிருக்கும் இலக்கியருசி மற்ற அந்தத் துறையில் ஈடுபட்டுள்ள எல்லோருக்கும் உண்டாகவேண்டும். அப்போது அங்கே ஆபாசத்திற்கோ, அபத்தத்திற்கோ இடமிருக்காது. களவுக்குப் பதில் கற்பும், சோர்வுக்குப் பதில் விழிப்பும் தோன்றும். இப்போதுள்ள விசித்திரம் நீங்க இலக்கிய ஆர்வம் ஒன்றே சரியான 'டானிக்'!

அருந்ததியில் ஸ்வாகாவாகத் தோன்றிய சந்தானலக்ஷ்மி இப்போது ராஜராஜேஸ்வரியில் நடித்துக் கொண்டிருக்கிறார்

வி. என். பெரியசாமி, ஊர்காம்

டி. கே. சகோதரர்கள் தற்பொழுது சினிமாக்களில் தோன்ருமல் நாடகங்களிலேயே நடித்து வருவதின் காரணம் என்ன ?

சினிமாத் திரையில் நிழலாகத் தோன்றி புகழ் பெறுவதைவிட, மேடையில் நேரிடையாகத் தோன்றி புகழ் பெறுவது மேல் என்று கருதியிருக்கலாம்.

கே. முத்துவேலுசாமி, எட்டையாபுரம்

வங்க ஆசிரியர்களில் சிங்கமெனப் பெயர்பெற்ற பங்கிம் பாபுவின் துர்கேஸநந்தினியைத் தக்க நடிகர்களைக்கொண்டு தயாரித்தால் கைகண்ட லாபம் பெறலாம் என்பது இந்த அன்பனின் அளவு கடந்த அபிலாஷை......

சிங்கங்கள் எழுதிய கதைகளைப் படம் பிடிக்க நம்மவர்களுக்கு தைரியம் போதாது, சாமி.

ஆர். கனக ஆதிமூலம், தூத்துக்குடி

சினிமாவுக்கேற்ற முகவெட்டும், பாடும் திறமையுமுள்ள நடிகைகள் பலரிருந்தும் அவர்களுக்குப் படங்களில் நடிக்க சந்தர்ப்பம் கிடைப்பதில்லையே, ஏன் ?

தற்போதைய நக்ஷத்திரங்களின் பிரகாசம் பட முதலாளிகளின் கண்களை ஓரளவு குருடாக்கிவிட்டது. இந்த நக்ஷத்திரங்களின் பிரகாசம் குறைந்தால் அல்லது மறைந்தால், நீர் குறிப்பிடும் நடிகைகளுக்கும் தப்பித் தவறி சந்தர்ப்பம் கிடைக்கலாம்.

என். எஸ். சுப்பிரமணியம், கோவிலூர்

எம். எஸ். சுப்புலக்ஷ்மி நடிக்கும் 'மீராபாய்' எப்பொழுது வெளிவரும் ?

யுத்த காலத்தில் நல்ல சரக்கு வெளிவர கொஞ்சம் காலதாமதம் ஆகத்தானே ஆகும்!

வி. ரகோத்தமன், எலத்தூர் .

ஸ்ரீமதி டி. ஆர். ராஜகுமாரிக்கு திருமணம் ஆகிவிட்டதா ? ஆகியிருந்தால் யாரை மணந்துள்ளார் ?

இதோ பதில்!

இருமனம் ஒருமனமான பின்னல்லவா திருமணம் நடக்கவேண்டும் ?

இ. எம். திருஞானம், எட்டையாபுரம்

எஸ். எஸ். கொக்கோ இப்போது எந்தப் படத்தில் நடிக்கிருர் ? விலாசமென்ன ?

இப்போது அவர் எந்தப் படத்தில் நடிக்கிருரென்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. விலாசம் எஸ். எஸ். கொக்கோ, மோக்ஷலோகம், ஆகாயமார்க்கம்.

என். ஆர். ராமசாமி, கோவை

'சிவகவி' முப்பது வாரங்களுக்குமேல் ஓடிக்கொண்டிருப்பதற்கும், பல அம்ஸங்களிலும் சிறந்த வாஹினியின் 'பக்த போதன' நான்கைந்து வாரங்களுக்கு மேல் ஓடாததற்கும் காரணம் என்னவாக இருக்கக்கூடும்?

பாகவதர், கிருஷ்ணன், மதுரம் முதலியோர் நடித்த தமிழ்ப்படம் 'சிவகவி.' போதன ரஸிகர்களே பெரிதும் விரும்பும் தெலுங்குப்படம். இப்பொழுது காரணம் புலப்பட்டதா ?

வி. ராஜகோபால், காட்டூர்

சினிமா கலையா? அல்லது தொழிலா ?

கலை என்று நினைப்பவர்களுக்குக் கலை. தொழில் என்று நினைப்பவர்களுக்குத் தொழில்.

சினிமா டைரக்டர்கள் எப்பொழுது நடிகைகளுடன் சகோதர பாவத்தில் நடந்துகொள்வார்கள் ?

நடிகைகள் டைரக்டர்களுடன் சகோதர பாவத்தில் நடந்து கொள்ளும்போது.

ஸி. பி. தேவசகாயம், போத்தனூர்

தமிழ்ப்பட நடிக நடிகைகளில் திரண்ட ஆஸ்தி யுடையவர் யார்?

வருமான வரி ஆபீஸில் கேட்டால் தன்னுல் தெரிகிறது.

ஆர். நாராயணன், வத்தலக்குண்டு

இதுவரை சுமார் எத்தனை தமிழ்ப் படங்கள் வெளிவந்துள்ளன ?. அவற்றில் எத்தனை சதவீதம் உருப்பட்டவை ?

இதுவரை பல தமிழ்ப் படங்கள் வெளிவந்துள்ளன. எல்லாம் உருப்பட்ட பின்புதான் திரைப்பட்டன.

கே. கே. ராஜூ, சங்ககிரிதுர்க்கம்

பி. யு. சின்னப்பாவுக்குக் கலியாணம் ஆகிவிட்டதா ?

இதைவிட, அவருக்குக் குழந்தைகள் ஏதாவதுண்டா என்று கேட்டிருக்கலாம்.

எஸ். ஆர். சுப்பிரமணியம், வத்தலக்குண்டு

நந்தனராக நடித்த தேசிகர் ஏன் இன்னும் வேறு படத்தில் நடிக்கவில்லை ?

தமிழ் இசை வளர்ச்சியில் தேசிகர் கொண்டுள்ள அபார ஆர்வத்திலிருந்து அவரைத் துளிகூட அசைக்க முடியாது என்று பலர் முடிவு கட்டியிருக்கும்போது, அவர் வேறு படங்களில் எப்படி நடிக்க முடியும் ?

கே. ஸி. ஜி. ராஜன். திண்டுக்கல்

பாட்டுகள் எழுதுவதில் சிவன், உடுமலை நாராயணகவி, வேல்சாமிக்கவி இவர்களில் யார் சிறந்தவர் ?

சிவகவி (சிவன் + கவி) போடுகிற போட்டைப் பார்த்தால் மற்ற கவிகள் அருகே செல்லக்கூடத் துணிய மாட்டார்களே !

பொ. ஜெயபால், சிலோன்

ஸ்ரீ தியாகராஜ பாகவதர், ஸ்ரீமதி சுப்புலக்ஷ்மி போன்ற நக்ஷத்திரங்கள் சங்கீத நடன அபிமானிகள் மட்டும் தானு? அல்லது தேசாபிமானிகளுமா ?

சங்கீத நடன அபிமானிகள்; தேசாபிமானிகள் ; இன்னும் தேகாபிமானிகளும்கூட.

Telephone No. 230 Telegrams : "ROYAL"

When You Visit
COIMBATORE
STAY AT
THE ROYAL HINDU RESTAURANT
(OPPOSITE RAILWAY STATION)

★ EXCELLENT FOOD
★ IDEAL SERVICE
★ AIRY ROOMS

With all modern conveniences

★

கோயமுத்தூரில் தங்குவதற்கு
நவீன வசதிகளும்
நல்ல காற்றோட்டமும் உள்ள
அறைகள் கொண்டது

தி ராயல்
இந்து ரெஸ்டாரண்ட்
(ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரில்)

☆ உயர்ந்த சாப்பாடு
☆ நல்ல சிற்றுண்டி

சிறந்த முறையில் எப்போதும்
சப்ளை செய்து வருகிறோம்

M. A. G. சாமி,
புரொப்ரைட்டர்

எங்கள் பொங்கல்
வாழ்த்துக்கள்!

☆

பண்டிகை காலங்களிலும்
கலியாண காலங்களிலும்
மங்கையர் - மணவர் விரும்பும்
இன்றைய நாகரீகத்தில்
கியாரண்டியுள்ள

பொன்
வெள்ளி
கல்
நகைகள்

திறமையான வேலையாட்களைக்கொண்டு
தயார்செய்துவைக்கப்பட்டிருக்கின்றன.

தேவையான புது மாடல்கள்
துரித்த காலத்தில் தங்கள்
திருப்திக்குத் தகுந்தவாறு
செய்து கொடுக்கப்படும்.

ஒரு முறை இன்றே
குடும்பத்துடன்
விஜயம் செய்யுங்கள்

☆

தங்கள் அன்புக்குப் பாத்திரமான
S. R. P. முத்துசாமி செட்டியார்
நகை வியாபாரம்
ஈஸ்வரன் கோவில் வீதி :: திருப்பூர்

Tel : JEWELLER தந்தி : ஜுவலர்

எம். ஐ. ஏ. வடுட், நுகேகோடை

டி. ஆர். ராஜகுமாரி 'ஹரிதாஸி'ல் எவ்விதம் நடித்திருக்கிறார் என்பதைத் தயவுசெய்து தெரிவிக்கவும்......

'ஞானக்கண்' ஒன்று இருந்திடில் இதற்குப் பதில் சொல்லக் கூடும்; அது இல்லையே, தேவுடா!

எம். ஏ. ஸ்ரீனிவாசன், தஞ்சாவூர்

'மங்கம்மா சபத'த்தை ஸ்ரீ வாசன் எத்தனையோமுறை திரும்பத் திரும்பப் பார்த்ததாக புள்ளி விபரங்கள்கூட வெளியாகி யிருந்தனவே, அப்படிப் பார்த்தபிறகு கூடவா படத்தில் அத்தகைய அசம்பாவிதங்களும், ஆபாசங்களும் இருந்தன?

தன் கோணல் தனக்குத் தெரியாது என்று ஒரு பழமொழி சொல்லுவார்கள்.

பெங்களூரில்

'பழிக்கும் பறவைகள்'

பிரபல கன்னட நாடகாசிரியரும் நடிகருமான ஸ்ரீ டி. பி. கைலாஸம் அவர்களின் ஆதரவில் நிறுவப்பட்ட 'ஹங்சோ பக்ஷிகள்' (Mumming Birds) என்ற நாடக சங்கத்தின் ஆரம்ப வைபவம் சென்ற அக்டோபர் மாதம் இரண்டாவது வாரம் ஆசார்ய பாடசாலையில் ஸ்ரீ மாஸ்தி வெங்கடேச அய்யங்கார் அவர்களின் தலைமையில் சிறப்பாக நடந்தேறியது. நாடகக் கலையில் ருசியும் திறனும் அமைக்க இளைஞர் பலரும் ஒன்று சேர்ந்து, பொழுது போக்குக்கான சுவாரஸ்யமும், உத்தம வாழ்க்கைக்கான லட்சியங்களும் கலந்த புராண சமூக நாடகங்களை நடித்துக் காட்டுவதே சங்கத்தின் நோக்கம். நம் தமிழ்நாட்டு நாடகாசிரியர்களும், இளைஞர்களும் இந்த சங்கத்தைக் கண்டு வெகுவாக ஊக்கமும் உற்சாகமும் கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம். ஸ்ரீ கைலாஸம் கண்காணிப்பில் வளரும் 'பழிக்கும் பறவை'களுக்கு நமது மனப்பூர்வமான வாழ்த்துக்கள். (ந. நி.)

"மேக்கப்"

டி. இ. சாமையா

'மேக்கப்' என்பது ஒரு அபூர்வமானகலை. இக்கலையின் உதவியால் சாதாரண அழகு உள்ளவள்கூட அழகுராணியாகவும், சுமாராக அழகுள்ளவர் நல்ல அழகராகவும் சினிமாவில் காட்சியளிக்க முடியும். ஒரு குறிப்பிட்ட நடிகரை அடையாளமே தெரியாத புது மனிதராக மாற்றி விடக்கூடிய சக்தியும் இந்த மேக்கப் கலைக்கு உண்டு.

ஒரு படத்தில் நடிக்க விருக்கும் பாத்திரத்திற் கேற்ப முகம், மீசை, தாடி, முதலியவற்றை மாற்றியமைத்து பொருத்தமான தோற்றத்தை அளிக்கவல்லவர்கள் மேக்கப் நிபுணர்கள்தான். சில காலத்திற்கு முன்பு வெளிவந்த படங்களில் 'மேக்கப்' விஷயம் அவ்வளவாகக் கவனிக்கப்படவில்லையென்றாலும் தற்போது வெளிவரும் படங்களில் இது விஷயத்தில் நல்லகவனம் செலுத்தப்பட்டுவருகிறது.

சமூகப் படங்களைவிட புராணப் படங்களில் மேக்கப் விஷயத்தில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும். புராணக்கதை நடந்த காலத்திற்கும், அக்காலத்திய நாகரீகத்திற்கும் ஏற்ற ஆடையாபரணங்கள் அமைக்கப் படவேண்டும். அப்போதுதான் வேஷப் பொருத்தம் நன்கு அமையும். சமூகப்படங்களில் வேஷப் பொருத்தத்தைப் பற்றி இவ்வளவு சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. நடிகர்கள் சாதாரணமாக வாழ்க்கையில் இருப்பது போலவே படங்களிலும் தோன்றிவிடலாம். இதனால் வேஷப் பொருத்தம் சம்பந்தமாக அவ்வளவாகக் குறைகள் காணப்படுவதில்லை.

கிருஷ்ணனும், நாரதரும் தோன்றும் எத்தனையோ தமிழ்ப் படங்கள் வெளிவந்திருக்கின்றன. பலர் வேஷப் பொருத்தமின்றி நடிக்கவும் செய்திருக்கின்றனர். உதாரணமாக ஸ்ரீமதி கே. பி. சுந்தராம்பாள் நடித்த பக்த நந்தனரை எடுத்துக் கொள்வோம். இதில் சுந்தராம்பாளுக்கு வேஷப் பொருத்தம் இல்லவே இல்லை என்று சொல்லிவிடலாம். சுந்தராம்பாள் கூடிய வரையில் சிரமப்பட்டு நடித்திருக்கிறாரென்றாலும், வேஷப் பொருத்தம் இல்லாத குறையால் அவர் நடிப்பு சோபிக்கவில்லை.

மேல்நாட்டுப்படங்களில் இத்தகைய அபத்தங்கள் காணப் படுவதில்லை. உதாரணமாக போரிஸ் கார்லாப் நடித்த 'பிராங்கன்ஸ்டீ'னில் வந்த பூதத்தையும், 'பேசாமடந்தை' என்ற படத்தில் உயிர் பெற்றெழுந்த பிணத்தையும் பார்த்திருந்தால் அவற்றின் மேக்கப்பிற்காகவும், வேஷப் பொருத்தத்திற்காகவும் அவர்கள் எவ்வளவு சிரமப்பட்டிருப்பார்கள் என்பதையும் மேக்கப் விஷயத்தில் அவர்கள் எவ்வளவு சிரத்தை செலுத்துகிறார்கள் என்பதையும் தெரிந்துகொண்டிருக்கலாம். மேனாட்டுப் படங்களில் ஆடையாபரணங்களின் விஷயத்திலும் நல்ல கவனம் செலுத்தப்படுகிறது என்பதற்கு "அலிபாபாவும் 40 திருடர்களும்" என்னும் படம் ஒரு உதாரணம். இப்படத்தில் நடித்திருக்கும் நடிகர்கள் அனைவரும் மேல்நாட்டினர் தான். ஆனால் படத்தில் அவ்வளவுபேரும் கீழ் நாட்டினர் போல்தான் காக்ஷியளித்தார்கள். இவர்களது நடை, உடை, பாவனை, ஆபரணங்கள் எல்லாம் முழுக்க முழுக்க கீழ்த்தேசத்தவர்களைப் போலவே இருந்தன. அதற்காக அவர்கள் ஆயிரக்கணக்காய் பணம் செலவழிந்தாலும் அதைப் பொருட்படுத்துவதில்லை.

சினிமா தினேதினே முன்னேறி வருகிறது. நம் தென்னிந்தியப் படங்களும் முன்னேற வேண்டியது அத்தியாவசியம். அவை முன்னேற இதர அம்சங்களைப் போலவே மேக்கப்பும் ஒரு அத்தியாவசியமான அம்சம் என்று கருதப்படவேண்டும். அத்துடன் அது விஷயத்தில் நல்ல கவனமும், சிரத்தையும் செலுத்தி வந்தால் தென்னாடும் மேக்கப் விஷயத்தில் வெகுசீக்கிரம் முன்னணிக்கு வந்து விடும்.

டெலிபோன் : 100

தந்தி : "தாஸ்கௌட்"

N. தாசே கவுண்டர் & கோ.

அவனுசி ரோட் :: கோயமுத்தூர்

ஏஜெண்டுகள் :

அண்டர்வுட் டைப்ரைட்டர்கள் ;
பேவர்லூபா, மெரிடினு, ஓமேகா,
டிஸ்ஸாட் வாட்சுகளுக்கும், மற்ற
வகை கடியாரங்களுக்கும்

உங்களுக்குத் தேவையான சகலவித

மருந்து வகைகள்
வைத்திய கருவிகள்
பேன்சி சாமான்கள்
கண்ணாடிகள், சோப்,
பவுடர், கூந்தல்
தைலம் முதலிய
வாசனை திரவியங்கள்
சோடா கலர் தினுசுகள்
பௌண்டன் பேனுக்கள்

மற்றும் குடும்பத்திற்குத் தேவையான இதர சாமான்களுக்கு

சிறந்த இடம்

N. DASAI GOWNDER & CO.

CHEMISTS & DRUGGISTS

AVANASHI ROAD :: COIMBATORE

புதிய பாதை

கி. ஸ்ரீ. வே.

தமிழ்ப் படங்கள் வெளிவர ஆரம்பித்து இப்பொழுது பல வருஷங்களாகின்றன. இதுவரை எவ்வளவோ படங்கள் வெளிவந்திருக்கின்றன. அவைகளில் நாமும் பல படங்களைப் பார்த்திருப்போம். அப்படிப் பார்த்தவைகளுள் எவ்வளவு படங்கள் நமது நினைவைவிட்டு இன்னம் அகலாமலிருக்கின்றன? உங்களால் சொல்ல முடியுமா? ஆரம்ப காலத்தில் வெளிவந்த பாடும், பேசும் படங்களை விட்டுவிடுங்கள். சென்ற மூன்று நான்கு வருஷங்களில் வெளிவந்த தமிழ்ப் படங்களைத்தான் கணக்கெடுக்கலாமே. எவ்வளவு படங்கள் உங்கள் நினைவுக்கு வருகின்றன?

“நினைவுக்கு வருகின்றன” என்று கூறும்போது, தமிழ் படங்களில் சாதாரணமாகக் காணும் ஆபாசக் காட்சிகளும் சமீபத்தில் வெளிவந்த பெண்மையைக் கேவலப்படுத்தும் காட்சிகளும் நிறைந்த தமிழ்ப் படங்களை நான் குறிப்பிடவில்லை. மனித உணர்ச்சி ததும்பும் கட்டங்கள், நிறைந்த கதைப்போக்குள்ள, உயர்ந்த நடிப்புள்ள, டெக்னிக் விஷயங்கள் நிறைந்த, அழகான படப்பிடிப்பமைந்த தமிழ்ப் படங்கள் - நமது நினைவில் வட்டமிடும் படங்கள் - எத்தனை இருக்கின்றன என்று கேட்கிறேன். இந்த லக்ஷியத்துடன் பார்த்தால் ஒரு படம்கூடத் தேருது என்றே சொல்லிவிடலாம்.

ஹிந்தி, ஆங்கிலப் படங்களை சற்று கவனித்துப் பாருங்கள். அவைகளில் எத்தனை நமது நினைவுக்கு வருகின்றன? எதிர்பாராதது, ஸிகந்தர், புகார்; மற்றவை கிடக்கட்டும். உதாரணத்துக்கு இந்த மூன்றை மட்டுமே எடுத்துக் கொள்வோம். எதிர்பாராததின் கதை எவ்வளவு உணர்ச்சி பொருந்தியதாயிருந்தது! அதில் நடித்த நடிகர்களின் நடிப்புத்தான் என்ன! அந்தக் கிழவனையும் அவனது பலவீனத்தைக் குறித்த கடியாரத்தையும் டைரக்டர் சாந்தாராம் உருவகம் செய்த காட்சியை நம்மால் மறக்க முடியுமா? ஸிகந்தர் படத்தில் நாம் கண்ட பிரம்மாண்டமான ஜோடனைகள் இன்னும் நம் நினைவிலிருக்கிறதே! நடிப்பும் உயர்ந்ததாய், உணர்ச்சி பொருந்தியதாய் இருந்தது. புகாரில் நாம் கண்ட உயர்ந்த படப்பிடிப்பும், உயிருள்ள நடிப்பும் அநேக நாட்களுக்கு நம் நினைவிலிருக்கும்.

ஆங்கிலத்தில் சமீபத்தில் வெளிவந்த ‘காற்றோடு போயிற்று’ (Gone with the wind) ‘பள்ளத் தாக்கின் பசுமை’ (How green was my valley) ‘நகரத்தான் கேன்’ (Citizen Kane) போன்ற படங்களை நாம் பறக்க முடியுமா? கலை நுணுக்க விஷயத்தில் இம்மூன்றும் சிறந்து விளங்குகின்றன. ஆனால் கதை விஷயத்தில் மூன்றும் முதல் ஸ்தானத்திற்குப் போட்டியிடுகின்றன. மூன்று படங்களின் கதைகளும் மனித வாழ்க்கையை வெவ்வேறு கோணத்திலிருந்து படம் பிடித்துக் காட்டுகின்றன. முதலாவது கதை அமெரிக்க உள்நாட்டு யுத்த காலத்தில் நடந்தது; இரண்டாவது கரிச் சுரங்கத்தில் வேலை செய்யும் குடும்பமொன்றின் வாழ்க்கையைச் சித்தரிப்பது; கடைசியாக குறிப்பிட்டது ஒரு ஏழைப் பையன் பெரியவனானதும் பெரிய கோடீசுவரனாக மாறுவதையும் ஆனால் கடைசியில் தன்னந் தனியனாய் ஆதரிப்பாரற்று, அன்பு செலுத்துவாரற்று இறப்பதையும் உணர்ச்சி ததும்ப விவரிக்கிறது.

முக்கியமாக “நகரத்தான் கேன்” உணர்ச்சி ததும்பும் கதைக்காகவே, அது படம் பிடிக்கப்பட்டுள்ள மாதிரிக்காகவே, அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் பிரமாதமாக மெச்சப்பட்டது. இந்தக் களேபரம் மிகுந்த யுத்த காலத்திலும் உலகத்தின் கவனத்தை இந்தப் படம் கவர்ந்து விட்டது. இந்தப் படத்தைப் பார்த்துவிட்டு நாம் வெளி வரும்போது நமக்கு ஏற்படும் உணர்ச்சி அசாத்தியமானது. நமக்கு அந்த “மாஜி-ஏழை” கதா நாயகனிடம் பச்சாத்தாபமே ஏற்படுகிறது. இத்தகைய உணர்ச்சி நமக்கு தமிழ் கதா நாயகர்கள் எவ்வளவு பேரிடம் ஏற்படுகிறது? சந்தேகம்தான். அப்படி ஏதாவது பச்சாத்தாப உணர்ச்சி ஏற்பட்டாலும் அது அந்தப் படம் பிடித்த முதலாளிகளைப்பற்றி, அவைகளில் வந்து பல்லை இளித்துவிட்டு, பாட்டு என்று பேர் சொல்லிக் கொண்டு ராகம் இழுத்து, நடிப்பு என்று சொல்லிக் கொண்டு குதித்து விட்டுப் போகும் பிரகிருதிகளைப் பற்றித்தான்! கதையைப் பற்றித்தான் சொல்ல வேண்டியதில்லையே! எல்லாம் புராணமயந்தான். சமூகக் கதை என்றால் துப்பாக்கி வேட்டு, தாசி வீடு, ஒரு ரயில் வண்டி, குதிரை ஓட்டம் இவ்வளவுதானே இப்போது தமிழ்ப் பட முதலாளிகளுக்குக் கிடைத்திருப்பது!

இந்த மோசமான நிலைக்குக் காரணம் என்ன? தமிழ் சினிமா முன்னேறும் வழிதான் என்ன? வாழ்க்கைக்கு உகந்த கதைகள் எழுதுபவர்கள் தமிழ் நாட்டில் இல்லையா? இல்லை, அப்படி எழுதிக்கொடுத்தாலும், நமது லட்ச ரூபாய் நட்சத்திரங்கள் அவைகளில் நடிக்க மறுக்கிறார்களா? அதெல்லாம் ஒன்றுமில்லை. எல்லாம் நமது தமிழ்ப்பட முதலாளிகளின் தயவுதான் இந்த விஷயத்தில் திரும்பவில்லை. அவர்கள் இன்னும் பழைய ஆகாசக் கோட்டைகளிலேயே வசித்து வருகிறார்கள். எந்தக் கதையானால் என்ன, ஏதாவது ஒரு பழைய புராணக் கதையை எடுத்து அதில் தாராளமாகப் பாட்டையும் காமிக் காட்சிகளையும் புகுத்தி விட்டால் போட்ட பணம் குட்டி போட்டுக் கொண்டு திரும்புகிறது என்ற நினைப்பு அவர்களுக்கு. இது வரையிலும் அது உண்மையாகவும் அவர்களுக்கு வாய்த்தது. ஆனால் சமீப காலமாக தமிழ் மக்கள் விழித்துக் கொண்டு விட்டார்கள். தங்களது வாழ்க்கை நோக்கை அவர்கள் மாற்றி அமைத்துக் கொண்டு வருகிறார்கள். பழைய சேற்றிலிருந்து அவர்கள் வெளியேறி விட்டார்கள். புதிய பாதையில் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்ப்பட முதலாளிகளும் இதற்குத் தகுந்தாற் போல் தங்

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

★ விமர்சனம் ★

"கர்மயோகி"

விமர்சனம் ஒரு கலை மட்டுமல்ல; ஒரு கருவியுங்கூட. அக்கருவியை சிறந்த முறையில் உபயோகிக்கவேண்டும்.

இலக்கிய வளர்ச்சிக்கு விமர்சனங்கள் உரம் போன்றவை. அன்பினால், ஆர்வத்தால், உணர்ச்சியால், ஆங்காங்கு பேசுபவர்களால் தான் இலக்கியச் சுவை பெருகி வளருகின்றது.

நண்பர்கள் ஒருவரோடொருவர் சமீபத்தில் படித்த, கேட்ட, விஷயங்களைப் பற்றி உரையாடி பொழுது போக்குவது போன்ற இன்பம் வேறெதுவுமில்லை. பேசும் போது ஏற்படும் ஒரு தீர்க்கமான, ஒப்பமுடிந்த முடிவே விமர்சனமாகும். நாம் பேசிக்கொண்டிருக்கும் போதே இலக்கியத்தில் நம்மை ரஸிக்கச் செய்பவனே உண்மையான விமர்சகன். இத்தகைய விமர்சகர்களால் தான் இலக்கியம் முன்னேற்ற மடைகிறது என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

'விமர்சனம்' என்றால் இலக்கிய ஆசிரியனுக்கோ, அல்லது கர்த்தாவுக்கோ, நன்மதிப்பாக, அதாவது சாதகமாகவே எழுத வேண்டும் என்ற பழக்கம் தமிழ் நாட்டில் நிலையாகிவிட்டது வருந்தத்தக்கது.

உதாரணமாக ஒரு நூலை எடுத்துக்கொண்டால் அந் நூலின் பெருமை, சிறுமை ஆகிய இரண்டையும் தீர்க்கமாக யோசனை செய்து விமர்சனம் செய்ய வேண்டும். இத்தகைய விமர்னங்களே இலக்கியத்திற்குத் தொண்டு புரிவன. நூலின் உயர்வை மாத்திரம் சால விவரித்துக் கொண்டே போனால் முதலில் ரசிகர்கள் ஏமாறுகிறார்கள். இரண்டாவதாக அந் நூலாசிரியனின் கர்வம் அதிகரித்து இலக்கியத் துறையில் அவனது உண்மையான வளர்ச்சி தடைப் படுகிறது.

இவ்வாறு நீக்க முடியாத இரண்டு கொடிய பாவங்களுக்கு விமர்சகன் ஆளாவது மட்டுமல்லாமல், கலாதேவிக்கும் அவன் துரோகம் செய்தவனாகிறான்.

அஃதே போன்று புத்தகம், நாடகம், படக்காக்ஷி, சித்திரம், முதலிய எந்தத்துறையில் ஆவலுள்ள விமர்சகனும் நன்மை, தீமைகளைப் பகுத்துக் கூறும் உண்மைத்திறனைப் பெற்றிருத்தல் மிகமிக இன்றியமையாததாகும்.

நண்பர்கள் என்ற முறையிலாவது, பணத்திற்காகவாவது, புத்தகங்கள், சினிமாக்கள் முதலியவைகளைப் பற்றி (உண்மையில் சீர்கேடானவைகளாக இருந்தும்) பிரமாதமாகப் புகழ்ந்து எழுதுபவர்கள் சமூகத்திற்கே பெரிய துரோகம் செய்தவர்களாவார்கள்.

அத்தகைய விமர்சகனைப் பார்த்துக் கூறுகிறேன்: "வேண்டாம். விட்டு விடுங்கள் அந்த நாச வேலையை. பின்வரும் காரணங்களைக் கொண்டாவது உங்கள் நாச வேலைக்கு முற்றுப் புள்ளியிடுங்கள்."

"அது தான் எங்களுக்கு உணவளிக்கிறது. அதை விட்டால் எங்கள் ஜீவனத்திற்கு வழி என்ன" என்கிறீர்களா?

"பட்டினி கிடந்து உயிர்விடுங்கள். ரொம்ப சந்தோஷம்."

ஒரு பிரசித்திபெற்ற கதாசிரியன், தனது ஆரம்பகால அநுபவங்களைப் பற்றி எழுதியிருக்கின்றான். "என்னுடைய கையெழுத்துப் பிரதிகளை என் நண்பர்களிடம் முதலில் காட்டுவேன். சிலர் 'ஜோர் 'ரொம்பஜோர்' என்று சொல்லிவிட்டுப் போய் விடுவது வழக்கம். இத்தகைய நண்பர்களிடம் நாளடைவில் படித்துக் காட்ட எனக்கு அலுப்புத் தட்டிவிட்டது. அது இயற்கைதானே? இதில் ஆச்சரியம் இல்லையே" என்று எழுதியிருக்கிறான்.

இலக்கியச் சுவையறிவும், பண்பட்ட ரஸிக உள்ளமும் மிகச் சிலருக்குத்தான் உண்டு. தாம் அறிந்தவைகளைப் பற்றி அபிப்பிராயம் கூறுதல் என்பது ஒரு சாதாரணமான விஷயமல்ல. இந்த ஆற்றல் படைத்தவர்கள் மிக மிகச்சிலரே.

அதிகமாக வாயைத் திறந்தால் முத்து உதிர்ந்துவிடும் என்ற மனப்பான்மையுடன் 'ரைட்' என்றோ 'நன்றாயில்லை' என்றோ அபிப்பிராயங் கூறிவிடுவோரும் உண்டு. இந்தக் கூட்டத்தின் மத்தியிலுள்ள இலக்கிய ரஸிகன் எப்போது கதாசிரியனாக முடியும்.

விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கு ஏராளமான சகிப்புத் தன்மை ஒவ்வொரு புது ஆசிரியனுக்கும் இருக்கவேண்டும். இனியேல் உலகமே விமர்சன உலகம் தான். திறமையை யெல்லாம் தராசில் வைத்து நிறுப்பதுபோல அபிப்பிராயங் கூறுபவர்கள் எல்லாத்துறையிலும் ஏற்பட்டுக் கொண்டுதானிருக்கிறார்கள்.

தொட்டாற் சுருங்கி போன்ற ஆசிரியர்கள் உயிருடன் இருந்து பயனில்லை. அவர்களுக்கு இந்த இருபதாம் நூற்றாண்டுக் கலையுலகில் வேலையே யில்லை. கண்டனங்களையும், எதிர்ப்புக்களையும், தன் குற்றத்தையும் ஏற்றுக்கொள்ளத்துணிவு உள்ளவர்களுக்கே வேலையுண்டு. அடிக்கடி விமர்சனங்களைப் பற்றிப் படித்துக் கொண்டிருந்தால் தான் அத்தகைய தன்மை ஏற்படும். விமர்

(முன் பக்கத் தொடர்ச்சி)

களைத் திருத்தியமைத்துக் கொண்டு உயர்ந்த ஆசிரியர்களைக் கொண்டு வாழ்க்கையைப் படம் பிடிக்கக்கூடிய உணர்ச்சி ததும்பும் கதைகளை எழுதச் செய்து அவைகளை படம் பிடிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களது முதலீடு நல்ல லாபமளிக்கும். தமிழ் சினிமாவும் முன்னேற வழியுண்டு. சிறந்த ஸ்டுடியோக்களையும், திறமை வாய்ந்த கலை நுணுக்கக்காரர்களையும் படைத்த நமது மாகாணத்தில் இப்புதிய பாதையைப் பற்ற நமது மாகாண பட முதலாளிகள் மட்டும் தயங்குகிறார்கள். இத்தயக்கம் எத்தனை நாட்கள் நீடிக்குமோ? உலகத்தில் எல்லா பாகங்களிலும் புதிய புதிய இயக்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு மக்கள் புதிய முறைகளை வெற்றிகரமாகக் கைப்பற்றும்போது, நமது பட முதலாளிகள் மட்டும் புதிய பாதையில் செல்லத் தயங்குவானேன்?

சனங்களைப்படிப்பதில் 'போதும்' என்ற எண்ணமோ கோபமோ இருக்கவே கூடாது.

ஆனால் பண்டை நாளில் இலக்கிய உலகில் காதை அறுத்தவர்களும், குட்டியவர்களும், இரண்டொன்றாய் முடிந்து தலையை வெட்டியவர்களும் இருந்தார்கள் என்றால் அவர்கள் மடையர்களல்ல, குரூபிகளல்ல; இலக்கியச் சுவை கொலை செய்யப் படுகின்றதே என்ற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்பட்டதுதான் காரணம்.

இம்மாதிரி கொடும் தண்டனை கொடுக்க யாரும் முன்வரமாட்டார்கள், இப்போதுள்ள இலக்கிய உலகிலே. ஆனால் விமர்சனம் எழுதுவோர் இளம் எழுத்தாளர்களின் மனம் புண்படாமல் எழுத வேண்டியதும் விமர்சகர்கள் கடமை.

மேல்நாட்டு இலக்கியக் கர்த்தாக்களில் கீட்ஸ்என்பவர்ஒருவர். அவர் அகால மரணமடைந்ததற்குக்காரணம் ஒரு விமர்சனம் தான் என்று சொல்லப்படுகிறது. அவன் 'சூர்யாஸ்தமனம்' என்ற ஒரு அழகான கவிதையை இயற்-றினான். அந்த அழகிய கவிதையைப் பற்றி யாரோ ஒருவன் மிகவும் உதாசீனமாக விமர்சனம் எழுதிவிட்டான்.

அந்த விமர்சனம் கீட்ஸின் மனதைப் பிளந்து விட்டதாம். அந்தக் கவிஞரின் ஆவியும் 'சூரிய அஸ்தமன'த்தைப் போன்று அஸ்தமித்தே போய் விட்டது.

"இதிலிருந்து உலகம், குறிப்பாக, விமர்சகர் உலகம் ஒரு பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்" என்று பைரன் தனது டான்ஜுவானில் கூறியிருக்கிறார். அதிகப் பிரசங்கித்தனமாகவோ, விளையாட்டாகவோ, அசிரத்தையாகவோ விமர்சனம் என்ற ஆயுதத்தை பிரயோகிக்கக் கூடாது. வளரும் இளம் எழுத்தாளர்களுக்கும், ஆசிரியர்களுக்கும், கலைக்கும், விமர்சனம் எழுதும் போது முன்னேறவேண்டும் என்ற எண்ணத்தோடும், அநுதாபத்தோடும், ஆதரவோடும், விமர்சனம் எழுதி அவர்களுக்கு மேலும் உற்சாக மூட்டி இலக்கியத்துறைக்கு சேவை செய்ய வேண்டும் என்பதே எமது பேரவா.

என்ன ஆச்சரியம்!

செய்திப்படங்கள் வெறும் படங்கள் அல்ல. இவைகள் விஷயங்களை விளக்குகின்றன. அறிவையூட்டுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக சரித்திரத்தை 'ரிகார்டு' செய்கின்றன.

* * *

குதிரைப்பந்தயம் சம்பந்தமான படங்களில் வியாக்யானம் கூறுவதிலே பிரபலமானவர் கிளாம் மெக்கர்த்தி என்பவர். குதிரைகள் எவ்வளவு வேகமாக ஓடுகின்றதோ அவ்வளவு வேகமாக இவர் பேசுவார். ஒவ்வொரு வார்த்தையும் சுத்தமாக இருக்கும். இவர் ஒரு கம்பெனியில் வாரமொன்றுக்கு இரண்டுமணி நேரந்தான் பேசுகிறார். இவருடைய சம்பளம் மணி ஒன்றுக்கு ஐநூற்று ஐம்பது ரூபாய்!

* * *

இந்திய சினிமாத் தொழிலில் ஏழு கோடி ரூபாய்க்குமேல் முதலிடப் பட்டிருக்கிறதாம்!

ஆரியன் சோப் கம்பெனி, கோயமுத்தூர்
Proprietors: S. V. சங்கமேஸ்வர செட்டியார் அண்டு பிரதர்ஸ்

மாலதி

எண்ணக் குவியல் எல்லாம்—திரண்டு
எழுந்த பொன்னுருவோ?

84273

நடிகர் டைரக்டர் ராஜா

பதினுன்காம் அத்தியாயம்

வம்பும் வழக்கும்

தனக்குப் பதிலாக நியமிக்கப் பட்ட வஸ்தாது, முழங்கால் சிப்பிகளைப் பெயர்த்துக்கொண்டு சிலநாள் படுக்கையில் படுத்திருந்து ஹோமி மாஸ்டரும், நாராயண் டேவாரியும் கொடுத்த தொகையைப் பெற்றுக் கொண்டு சென்ற பிறகு, அவன் நடிக்கத் திணறிய பாகங்களை யெல்லாம் அனுயாசமாக நடித்து முடித்தார் ராஜா. "வீர் பத்மினி" முடிவடைந்தது. 'வீர்பத்மினி' கோஹினூர் பிலிம் கம்பெனியின் சார்பில் ராஜா நடித்த கடைசிப் படம். அடுத்த படியாக ராஜா தான் ஏற்கனவே ஒப்புக் கொண்டிருந்த படி ஜெகதீஷ் பிலிம் கம்பெனிக்குப் போக வேண்டியிருந்ததால் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானர்.

'வீர்பத்மினி' யில் எக்பால் கதாநாயகியாக நடித்துக் கொண்டிருந்தாள். அவள் பாகமும் தீர்ந்து விட்டது என்ருலும் அவள் இன்னும் சிலகாலம் கோலாப்பூரிலேயே தங்கி, கோஹினூர் பிலிம் கம்பெனியாரின் மற்ருேர் படமான "சதி வீராங்கன" என்ற படத்தில் நடிக்கவேண்டியிருந்தது. அதிலும் எக்பால்தான் கதாநாயகி.

கோலாப்பூரில் நடிக நடிகைகள் தங்குவதற்காக இரண்டு மூன்று மாடிவீடுகள் அமர்த்தப் பட்டிருந்தன. ஒரு வீட்டில் நாராயண் டேவாரியும், ஹோமி மாஸ்டரும் தங்கி யிருந்தனர். மற்ருெரு வீட்டின் மேல்மாடியில் எக்பாலும், கீழே ராஜாவும் தங்கியிருந்தனர். மற்ருேர் வீட்டில் இதர நடிக நடிகைகள் இருந்து வந்தனர். பிரயாணத்திற்கான ஏற்பாடுகளை ஓரளவு செய்து முடித்த ராஜா, சகா நடிகையான எக்பாலிடம் இது பற்றித் தெரிவித்துச் செல்வோம் என்று ஒருநாள் காலை எக்பாலிடம் சென்று ஏதேதோ விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். கடைசியாக மறுநாள் தான் பம்பாய்க்குப் புறப்படுவதாகவும், அடுத்தபடியாக தான் ஜெகதீஷ் பிலிம் கம்பெனியின் படங்களில் நடிக்க வேண்டியிருப்பதாகவும் தெரிவித்தார்.

எக்பால், தான் குழந்தைகளைப் பார்த்து வெகுநாட்களாகி விட்டது என்றும் பம்பாய் சென்று சிலநாட்கள் தங்கியிருந்த பின் மீண்டும் அங்கு (கோலப்பூருக்கு) திரும்பிவர வேண்டும் என்றும் சொல்லி தன்னையும் அவர் பம்பாய்க்கு அழைத்துச் சென்ருல் நல்லது என்றும், தக்க துணையாயிற்று என்றும் தெரிவித்தாள்.

ராஜா அவள் வருவதிலோ, அல்லது தாம் அவளைக் கூட்டிச் செல்வதிலோ எத்தகைய ஆக்ஷேபணையும் கிடையாது என்றும், அவள் வருவதானல் அழைத்துச் செல்லத் தயாரென்றும் தெரிவித்துவிட்டுப் போய்விட்டார்.

அன்றுமாலை ஹோமி மாஸ்டரும் ராஜாவும் சந்தித்தனர். இருவருக்கும் வாக்குவாதம் உண்டாகிவிட்டது.

ஹோமி : என்ன ராஜா! இது நல்லா இருக்கா? நீ எதுக்காக எக்பாலைக் கூட்டிக்கொண்டு போகிருய்?

ராஜா : ஹோம்லா, (ராஜா ஹோமிமாஸ்டரை இப்படித் தான் கூப்பிடுவது வழக்கம்)நான் எக்பாலைக் கூப்பிடவே யில்லை. நான் பம்பாய் போவதாக அவளிடம் தெரிவித்தேன். தானும் என்னுடன் வருவதாகவும், குழந்தைகளைப் பார்த்துவிட்டு சில நாட்களில் இங்கு திரும்பி விடுவதாகவும் தெரிவித்து தன்னையும் என்னுடன் அழைத்துச் செல்லும்படி கேட்டுக் கொண்டாள். அவள் வருவதில் எனக்கு ஒன்றும் ஆக்ஷேபமில்லை என்று தெரிவித்தேன். அவ்வளவுதான்.

ஹோமி : இல்லை, இல்லை. நீதான் அவளைத் தூண்டியிருக்க வேண்டும். இத்தனை நாட்களாகச் சும்மா இருந்தவள் இப்பொழுது மட்டும் குழந்தைகளைப் பார்க்க வேண்டிய காரணம் என்ன? நீதான் அவள் மனதைக் குழப்பி உன்னுடன்வர ஏற்பாடு செய்திருக்க வேண்டும். ஜெகதீஷ் பிலிம் கம்பெனிக்குப் போவதானல் நீ மட்டும் போவதுதானே? அவளையும் ஏன் கூப்பிடுகிருய்? அவள் எங்கள் 'சதி வீராங்கன' வில் கதாநாயகியாக நடிப்பது தான் உனக்குத் தெரியுமே! இந்தக் கெட்ட எண்ணம் உனக்குக் கூடாது ராஜா.

ராஜா : இல்லை, ஹோம்லா. நான் எக்பாலைக் கூப்பிடவேயில்லை. அவளேதான் என்னுடன் வருவதாகவும், தன்னை அழைத்துச்செல்ல வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டாள். அதற்குச் சம்மதித்தேன். அவ்வளவுதான். அவள் என்னுடன் வரவேண்டும் என்று நான் அவளைக் கேட்டுக் கொள்ளவில்லை. அவளைக் கூப்பிடவுமில்லை. அவள் உங்கள் கம்பெனியிலிருந்து விலகிவிட வேண்டும் என்பதும் என் நோக்கமல்ல. குழந்தைகளைப் பார்க்க வேண்டும் என்ற ஆவலால்தான் அவள் பம்பாய்க்குப் புறப்படுகிருள். மற்றபடி என் நிர்ப்பந்தத்தாலோ அல்லது தூண்டுதலாலோ அவள் புறப்படுவதில்லை. இது உண்மை. இதுபற்றி அவளிடமே நீ கேட்டுக் கொள்ளலாம்!

ஹோமி : அவளிடம் கேட்பதென்ன? அவள்தான் நாளைக்கே புறப்பட வேண்டுமென்கிருளே! அந்தப் பிடிவாதம் உன்னைத்தவிர வேருெருவரால் ஏற்பட்டிருக்க முடியாது.

ராஜா: இல்லே ஹோம்லா. நீ தவருக நினைத்துவிட்டாய்.........

ஹோமி: இல்லையாவது இருக்கிறதாவது. எங்கள் கம்பெனிக்கு நஷ்டமுண்டாக்குவதுதான் உன் அந்தரங்க எண்ணம் போலிருக்கிறது. சரி, செய். நானும் ஒரு கை பார்க்கிறேன். நீ மட்டும் நாளைக்கு அந்த எக்பாலைக் கூட்டிக்கொண்டு போனுயானல் நீதான் ஆண் பிள்ளை. உன் சாமர்த்தியத்தைப் பார்த்துவிடுகிறேன்.

ராஜா: ஹோம்லா, என் இந்த வீருப்பெல்லாம். நான்தான் அவளைக் கூப்பிடவே இல்லை என்கிறேன். பின்னும் ஏன் இந்த ஆர்ப்பாட்டம்?

ஹோமி; ஆர்ப்பாட்டமா? நீ மட்டும் நாளைக்கு எக்பாலைக் கூட்டிக் கொண்டு போய் விடு. அப்பொழுதுதான் நீ ஒரு மதராஸி. இல்லாவிட்டால் நீ ஒரு கோழை.

ராஜாவுக்கு கோழை என்றதும் கொஞ்சம் கோபம் வந்துவிட்டது. "ஹோம்லா, நான் உண்மையைச் சொன்னேன். நீ நம்பவில்லை. சரி. உன் சபதத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நாளைய தினம் நான் எக்பாலை என்னுடன் அழைத்துச் செல்லாவிட்டால் நான் ஒரு மதராஸி அல்ல. நீங்கள் எல்லோரும் என்னைக் 'கோழை' என்று தாராளமாய்க் கூப்பிடலாம். சரி, நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு தம் இருப்பிடத்திற்குக் கிளம்பினர் ராஜா.

"மதராஸியா? பார்க்கிறேன் ஒரு கை" என்று பொருமிய வண்ணமே ஹோமி மாஸ்டரும் தன் இருப்பிடம் சென்ருர்.

வீடு திரும்பிய ராஜா தட தடவென்று மாடிப் படிகளில் ஏறி எக்பாலின் அறைக்குச் சென்ருர். எக்பால் கட்டிலில் படுத்தபடி ஏதோ வாசித்துக் கொண்டிருந்தாள். ராஜாவின் காலடிச் சத்தம் கேட்டு வாயிற்படியின் மேல் தன் பார்வையைச் செலுத்தினள். வருவது ராஜா என்று தெரிந்ததும் எழுந்து உட்கார்ந்தாள்.

"அனுமதியில்லாமல் நுழைவது பற்றி மன்னிக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டே எக்பாலின் அறைக்குள் நுழைந்தார் ராஜா. ராஜாவின் பதட்டத்தையும், தோற்றத்தையும் கண்டு எக்பால் முதலில் திகைத்து விட்டாளென்ருலும் பின்னல் சமாளித்துக் கொண்டு "வாருங்கள் மிஸ்டர் ராஜா. என் இவ்வளவு பதட்டம்? நிதானமாக இப்படி இந்த நாற்காலியில் உட்காருங்கள்" என்ருள் எக்பால். ராஜா எக்பாலின் கட்டிலருகில் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்தார்.

ராஜா: எக்பால், நான் காலையில் உன்னிடம் என்ன சொன்னேன்?

எக்பால்: காலையிலா? உங்கள் வேலை முடிந்து விட்டதாகவும், பம்பாய் சென்று ஜெகதீஷ் பிலிம் கம்பெனிப் படங்களில் நடிக்கப் போவதாகவும் சொன்னீர்கள். ஏன்?............

ராஜா; சரி. உன்னையும் பம்பாய்க்கு வரும்படி நான் அழைத்தேனு?

எக்பால்: இல்லையே. அப்படி யார் சொன்னர்கள்?

ராஜா விஷயத்தை யெல்லாம் நிதானமாகச் சொன்னர். எக்பாலுக்கு கோஹினூர் பிலிம் கம்பெனியின் முதலாளிகளின் மீது கோபம் வந்தது.

"மிஸ்டர் ராஜா, என்ன ஆனுலும் சரி. நான் உங்களுடன் வருகிறேன். அவர்கள் என்ன செய்வார்களோ பார்க்கலாம்" என்ருள் எக்பால்.

"சரி. நான் நாராயண் டேவாரியிடம் போய், என் கணக்கைப் பைசல் செய்து விடும்படி சொல்லப் போகிறேன். நாளை மாலை 6-45 மணி மெயிலுக்குப் புறப்படலாம்" என்று சொல்லி விட்டு நாராயண் டேவாரியிடம் புறப்பட்டார் ராஜா.

நாராயண் டேவாரியும், ஹோமி மாஸ்டரும் ராஜாவைப் பற்றி ஏதோ உரத்த குரலாய்ப் பேசிக்கொண்டிருந்த சமயத்தில் ராஜா அங்கு சென்ருர். எதிர்பாராதபடி ராஜா அங்கு வந்ததால் இருவரும் திடுக்கிட்டு தங்கள் பேச்சை அப்படியே நிறுத்திக்கொண்டார்கள்.

"நமஸ்காரம் மிஸ்டர் டேவாரி" என்ருர் ராஜா, டேவாரியைப் பார்த்தபடி.

"நமஸ்காரம்" என்ற வார்த்தை டேவாரியின் வாயிலிருந்து வேண்டா வெறுப்பாய் வெளி வந்தது.

"நாளைக்கு 6-45 மெயிலுக்குப் புறப்பட வேண்டியிருக்கிறது. என் கணக்கைப் பைசல் செய்துவிட்டால் நல்லது."

"கணக்கை இப்பொழுது பைசல் செய்ய முடியாது. பம்பாயில் உள்ள ஹெட் ஆபீசிற்குச் சென்று உமது கணக்கைப் பைசல் செய்து கொள்ளும். நாளைய தினம் மெயிலுக்கு டிக்கெட் வாங்கியனுப்புகிறேன்."

"செலவுக்குக்கூட என்னிடம் பணமில்லையே."

"அதற்கு நான் என்ன செய்யட்டும்?"

மேற்கொண்டு அங்கு நிற்பதில் பயனில்லை என்று உணர்ந்த ராஜா, வந்த வழியே திரும்பினர்.

ராஜாவைத் திண்டாட வைத்துவிட்டோம் என்ற ஆனந்தம் டேவாரி, ஹோமி மாஸ்டர் ஆகிய இருவர் உள்ளங்களிலும் பொங்கியெழுந்தது. அந்த ஆனந்தத்தின் விளைவாக சற்று நேரத்தில் நோட்டீஸ் பலகையில் ஒரு நோட்டீஸ் ஒட்டப்பட்டது. அதன் சாராம்சம் ராஜாவை வழியனுப்ப நடிகர்கள் ஒருவரும் ஸ்டேஷனுக்குப்போகக் கூடாது என்பதுதான்.

பதினைந்தாம் அத்தியாயம்

புறப்பாடு

மறு நாள் பொழுது புலர்ந்தது. ராஜா காலைக்கடன்களை முடித்துக்கொண்டு பெட்டி, படுக்கை முதலானவற்றை பிரயாணத்திற்கு ஒழுங்கு படுத்த ஆரம்பித்தார்.

எக்பாலும் தன் பெட்டி படுக்கை சாமான்களைக் கட்டி தயாராக வைத்து விட்டு, செலவுக்குப் பணம் வாங்கிக் கொண்டு வர நாராயண் டேவாரியிடம் சென்ருள்.

எக்பால் சென்ற சமயத்தில் நாராயண் டேவாரி ஏதோ காரியமாக வெளியே சென்றிருந்தாராதலின் எக்பால் வெறுங் கையோடு திரும்ப வேண்டியதாயிற்று. பிற்பகலில் மறுமுறை சென்று பணம் கேட்டபோது கையில் பணம் இல்லையென்றும் மறு நாள் பாங்கிலிருந்து தான் வாங்க வேண்டியிருக்கிற தென்றும் கையை விரித்து விட்டார் டேவாரி. அவருடைய நோக்கம் செலவுக்குப் பணம் கொடுக்காவிட்டால் எப்படியும் எக்பால் அங்கு தங்கி விடுவாள் என்பதும், பிற்பாடு வேண்டுமானல் ஒன்றிரண்டு நாள் கழித்து போகச் சொல்லலாம் என்பதும் தான். இதைப் பற்றி எக்பாலிடமே நேரில் தெரிவித்தார் டேவாரி. ஆனல் எக்பால் அவருக்குப் பதிலொன்றும் சொல்லாமல் மழுப்பிவிட்டுத் தன் இருப்பிடம் சென்ருள்.

கையில் பணமில்லாமல் எப்படி ஊர் செல்வது என்ற யோசனை எக்பாலுக்குப் பலமாக ஏற்பட்டு விட்டது. ராஜாவின் கையில் பணம் இருப்பதும் இல்லாததும் அவளுக்குத் தெரியாது. அவரிடம் இருந்தால் பிற்பாடு திருப்பிக் கொடுத்து விடலாம். இல்லாவிட்டால் என்ன செய்வது? இப்படி யெல்லாம் யோசித்து யோசித்து கடைசியில் "சரி, பகவான் விட்டபடி விடட்டும்" என்ற முடிவுக்கு வந்து தன் காரியங்களைக் கவனிக்க ஆரம்பித்தாள் எக்பால்.

இதற்கிடையே ராஜாவின் மேல் பெரிதும் அபிமானம் வைத்திருந்த பலர் ராஜாவிடம் வந்து நோட்டீஸ் விஷயம் பற்றிப் பிரஸ்தாபித்து டேவாரியைப் பற்றியும் ஹோமி மாஸ்டரைப் பற்றியும் தங்கள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்து, தாங்கள் அதற்கெல்லாம் பயப்படுவதாக இல்லையென்றும், அவர்கள் என்ன வேண்டுமானலும் செய்து கொள்ளலாமென்றும் தாங்கள் அவருடன் ஸ்டேஷன் வரைக்கும் வந்து அவரை வழியனுப்பப் போவதாகவும் தெரிவித்தனர்.

ராஜாவுக்கு அவர்கள் வருவது பற்றி திருப்தியே யானலும், டேவாரி ஒரு சமயம் அவர்களை வேலையை விட்டு நீக்கி விட்டால் என்ன செய்வது என்ற கவலை ஏற்படாமலில்லை. ஆகவே இது பற்றி அவர்களிடம் பிரஸ்தாபித்தார் ராஜா.

"இது என்ன பிரமாத அதிகாரம்? இவர்கள் அதிகாரம் ஷூட்டிங் நடக்கும்போது சரி, ஷூட்டிங் இல்லாதபோதுகூட அதிகாரமா?" என்ருன் ஒருவன்.

"அப்படித்தான் போனல் என்ன செய்து விடுவான்? வேலையை விட்டு நீக்குவான். அதற்கு மேல் என்ன செய்ய முடியும்? ஜெகதீஷ் பிலிம் கம்பெனி இருக்கவே இருக்கிறது. நம்மை யெல்லாம் வேண்டாம் என்று சொல்லிவிட மாட்டார்கள்" என்ருன் மற்ருெருவன்.

கடைசியாக என்ன ஆனலும் சரி, ராஜாவை வழியனுப்ப ஸ்டேஷனுக்குப் போவது என்று முடிவு செய்து ஐந்து மணிக்கு அங்கு தயாராக வருவதாக ராஜாவிடம் சொல்லிச் சென்ருர்கள். அவர்கள் சென்ற பின் சற்று நேரம் நிம்மதியாய்ப் படுத்துத் தூங்கினர் ராஜா.

ராஜா கண்விழித்த போது மாடியில் யாரோ நாலைந்து பேர் பேசிக்கொண்டிருந்த சப்தம் கேட்டது. எக்பாலைத் தன்னுடன் வராமல் இருக்கச் செய்வதற்கான உபதேசங்கள் நடைபெறுகின்றன என்று ராஜா ஊகித்துக் கொண்டார். அதைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல் மேற்கொண்டு செய்யவேண்டிய ஏற்பாடுகளை முடித்துக்கொண்டு பிரயாணத்திற்கான உடையணிந்துகொண்டார்.

சற்று நேரத்தில் "பூம் பூம்" என்ற சப்தத்துடன் ஸ்டூடியோ லாரி வந்து ராஜாவின் வீட்டெதிரில் நின்றது. லாரியிலிருந்து இறங்கி வந்த டிரைவர் ராஜாவிடம் ஒரு இரண்டாவது வகுப்பு டிக்கெட்டைக் கொடுத்தான். ராஜா வாங்கிப் பார்த்தார். பம்பாய் தாதர் ஸ்டேஷனுக்கு வாங்கி யிருந்தது. அதைப் பத்திரமாக வைத்துக் கொண்டு ஹாலில் மாட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தார் ராஜா. ஐந்தரைக்குச் சில நிமிஷங்கள் இருந்தன. "சரி, இனி புறப்பட வேண்டியதுதான்" என்று வீட்டு வாயிற்படிக்கு வந்து சற்று நின்ருர். அதே சமயத்தில் ராஜாவின் சகாநடிகர்கள் இருபது முப்பது பேர் கும்பலாக ராஜாவை நோக்கி வந்தார்கள். சாமான்களை லாரியில் ஏற்றும்படி அவர்களிடம் தெரிவித்து விட்டு மேல்மாடிக்குச் சென்ருர் ராஜா.

எக்பால் கட்டிலின் மேல் உட்கார்ந்தபடி ஒரு திண்டின்

எம்ராய்டரி சம்பந்தமான எல்லா சாமான்கள், ஸ்டேஷனரி, நூதன விளையாட்டு சாமான்கள் கிடைக்குமிடம்

☆

ஜெயா எம்ராய்டரி ஹவுஸ்

(தேர்முட்டி) ராஜவீதி, கோயமுத்தூர்.

இலவசமாக எம்ராய்டரி கற்றுக் கொடுக்கப்படும்

மேல்சாய்ந்திருந்தாள். நாராயண் டேவாரி, ஹோமிமாஸ்டர் இன்னும் இரண்டொருவர் கட்டிலுக் கருகில் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் உட்கார்ந்திருந்தனர். ராஜாவைக் கண்டதும் எக்பால் எழுந்தாள். அதே சமயத்தில் மற்றவர்களின் பார்வையும் பிரயாணக் கோலத்தில் வந்த ராஜாவின் மேல் விழுந்தது.

"எக்பால், லாரி வந்துவிட்டது, நான் புறப்படுகிறேன்" என்றார் ராஜா.

"சற்று இருங்கள், மிஸ்டர் ராஜா!" என்று சொல்லிவிட்டு "ரங்கூ" என்று சற்று உரத்த குரலாய்க் கூப்பிட்டாள்.

"ஏனம்மா" என்று கேட்டபடி அவள் வேலைக்காரன் வந்துநின்றான். சற்றுதூரத்தில் ஒரு மூலையில் கட்டி வைக்கப்பட்டிருந்த பெட்டி படுக்கை முதலானவைகளைச் சுட்டிக்காட்டி "லாரியில் கொண்டு போய் வை!" என்றாள். ரங்கு பெட்டியையும் படுக்கையையும் எடுத்துக் கொண்டு மாடியிலிருந்து கீழே இறங்கினான்.

எக்பாலின் செய்கையைக் கண்டு டேவாரி முதலியோர் திகைத்துவிட்டனர். ஏனெனில் கையில் காசில்லாததாலும், தாங்கள் வேண்டியமட்டும் உபதேசம் செய்திருப்பதாலும் எக்பால் முக்காலே மூன்று வீசமும் ராஜாவுடன் போகமாட்டாள் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் நினைப்புக்குச் சாதகமாகவே அதுவரை எக்பால் பேசி வந்தும், அப்போது ராஜா வந்ததும் அவள் கிளம்பிவிட்டது அவர்களுக்கு பெரிய குழப்பத்தை உண்டாக்கி விட்டது. அவர்கள் குழப்பம் தீருவதற்குள் எக்பால் ராஜாவுடன் கீழிறங்கிச் சென்றுவிட்டாள். அவர்களும் கீழிறங்கி வந்தனர்.

ராஜாவும் எக்பாலும் கீழே வந்தபோது மற்றொரு லாரியில் சகா நடிகர்கள் அடைந்திருந்தார்கள். தன் சாமான்களும், எக்பாலின் சாமான்களும் ஏற்றப்பட்டிருந்த லாரியருகில்வந்து திரும்பிப் பார்த்தார் ராஜா. டேவாரி, ஹோமி மாஸ்டர் முதலானோர் சோர்ந்துபோனமுகத்துடன் நின்று கொண்டிருந்தனர்.

"ஹோம்லா, இதோ எக்பால். மெயிலுக்குப் புறப்படுகிறேன். குட் பை!" என்றார் ராஜா.

"ராஜா, நீ ஒரு மதராஸிதான். சந்தேகமில்லை, உன் சபதத்தை நிறைவேற்றி விட்டாய்! போய் வா, குட்பை!" என்றார் ஹோமிமாஸ்டர் தன்னையும் மீறி. சிரித்த முகத்தோடு எக்பாலுடன் லாரியில் ஏறினார் ராஜா.. "ராஜா சாண்டோவுக்கு ஜே" என்ற பெருத்த ஆரவாரத்துடன் இரு லாரிகளும் ஸ்டேஷனை நோக்கிக் கிளம்பின. சற்றுநேரம் லாரிகள் சென்றதைப் பார்த்துக்கொண்டிருந்து விட்டு ஹோமி மாஸ்டரும், நாராயண் டேவாரியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

பதினொருவது அத்தியாயம்

ரயில் பிரயாணம்

லாரி ஸ்டேஷனுக்குப் போவதற்குள்ளாக எக்பால, டேவாரி தன்னிடம் பணம் கொடுக்காதது, ராஜாவுடன் போகவேண்டாம் என்று தடுத்தது முதலிய விபரங்களைச் சொல்லிவிட்டாள். ராஜா எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு, "சரி. டிக்கெட் இல்லையே என்று கவலைப் படவேண்டாம். இந்தா இதை வைத்துக் கொள். நான் என்னைப்பற்றி கவனித்துக்கொள்கிறேன்" என்று தன் டிக்கெட்டை எடுத்து அவளிடம் கொடுத்துவிட்டார். இதற்குள்ளாக ஸ்டேஷனும் நெருங்கியபடியால் லாரி நின்றது. எல்லோரும் இறங்கி பிளாட்பாரத்திற்குச் சென்றார்கள். சற்று நேரத்தில் மெயில்வந்து நின்றது.

ராஜா எக்பாலை ஒரு இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏற்றி உட்காரச் செய்து, தன் சகாக்களையும் சற்று நேரம் அங்கேயே இருக்கும்படி சொல்லி விட்டு கார்டைப் பார்க்கச் சென்றார்.

கைப் பிடியைப் பிடித்தபடி நின்று கொண்டிருந்த கார்டைப் பார்த்ததும் "நமஸ்காரம்" என்றார் ராஜா. ராஜாவை ஒரு தரம் ஏற இறங்கப் பார்த்த கார்டு "நீங்கள் ராஜா சாண்டோ அல்லவா?" என்றார்.

"ஆம், உங்களிடம் ஒரு விஷயம் பேச வேண்டியிருக்கிறது."

"ஆஹா! தாராளமாய். ஏன், இப்படி உள்ளே வாருங்களேன். இன்னும் மூன்று நிமிஷத்திற்கு மேல் டயம் இருக்கிறது."

கார்டிடம் சுருக்கமாக நடந்த விஷயத்தைப்பற்றிச் சொல்லி தன்னிடம் பணமோ அல்லது டிக்கெட்டோ இல்லாத விஷயத்தையும், தன் சகா நடிகர்களிடம் தான் பணம் கேட்க விரும்பவில்லை என்பதையும் தெரிவித்தார் ராஜா. ஏற்கனவே ராஜாவின் மேல் ஒருவித அபிமானமும் நல்லெண்ணமும் வைத்திருந்த அந்த கார்டு (நாயுடு வகையைச் சேர்ந்தவர்) ராஜாவின் நிலைமையை உணர்ந்து எதற்கும் பயப்பட வேண்டாம என்றும், தான் அதற்கான ஏற்பாடுகள் செய்வதாகவும், அவர் போய் சௌக்கியமாய் வண்டியில் ஏறி உட்கார்ந்து கொள்ளலாம் என்றும் சொல்லி அவரை அனுப்பிவிட்டார்.

ராஜா, எக்பால் இருந்த பெட்டியை நோக்கிச் சென்று நிம்மதியாய் தன் சகாக்களுடன் பேசிக் கொண்டிருந்தார். உரிய நேரமானதும் ராஜா வண்டியில் ஏறிக் கொண்டார். "ராஜா சாண்டோவுக்கு ஜே" என்ற கோஷம் பிளேட்பாரமெங்கும் எதிரொலித்தது அடுத்த வினாடியே "கூ" என்ற கூச்சலுடன் கரிய புகையைக் கக்கிக் கொண்டு மெயில் கிளம்பியது.

(இன்னும் வரும்)

பொங்கல் வாழ்த்துக்கள்

நமது அன்பர்கள் அனைவருக்கும் நமது மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்.

FOR ALL KINDS OF

ELECTRICAL AND SANITARY WARES

K. B. RAJAGOPAL

RAJA STREET :: COIMBATORE

S. KARUPPANNA GOWDER

BOOK-SELLER, STATIONER & PAPER MERCHANT

RAJA STREET, COIMBATORE

★

Stockist of

- PAPER
- PRINTING INK
- STRAW BOARDS
- ACCOUNT NOTE BOOKS
- STATIONERIES

★

College, High School and all other Students' and printers' requirements

நடிக டைரக்டர்

ராஜா சாண்டோ

★

நமது **பேசும் படம்** பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவந்த ராஜா சாண்டோவின் வாழ்க்கைச் சித்திரம் பல அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க புத்தக ரூபத்தில் கூடிய சீக்கிரம் வெளிவரும். இதையொட்டி பழைய பிரதிகள் கேட்டு பலர் எழுதியிருக்கின்றனர். பழைய பிரதிகள் கைவசம் கிடையாதாகையால் நேயர்களை இன்னும் சில மாதங்கள் மட்டும் பொருத்திருக்குமாறு கோருகிறோம்.

பேசும் படம் காரியாலயம்

289, எஸ்பிளனேட் :: சென்னை

திவான்பகதூர்

பேசும் பட விமரிசனம்

தமிழ்ப் படங்களுக்குப் பதினோராயிரமடி போதாது. பதினாலாயிரமடியாவது வேண்டும் என்று சில பட முதலாளிகள் வாதாடிக்கொண்டிருந்த காலத்தில் துணிந்து பதினோராயிரமடிக்குள் 'அருந்ததி' யைத் தயாரித்து வெளியிட்ட மாடர்ன் தியேட்டர்ஸாரின் இரண்டாவது பதினோராயிரமடிப் படம்தான் இந்த 'திவான் பகதூர்'.

தயாரிப்பு :	மாடர்ன் தியேட்டர்ஸ்
கதை, வசனம் :	ஹரிதாஸ்
நடிகர்கள் :	டி. ஆர். ராமசந்திரன் ஜே. சுசீலாதேவி பி. எஸ். சிவபாக்கியம் கே. கே. பெருமாள் காளி ரத்தினம் ராஜகாந்தம்
டைரக்ஷன் :	டி. ஆர். சுந்தரம்

கதை :

கேசவனும் அவன் நண்பன் கோபாலனும் வேலையற்ற பட்டதாரிகளின் ஜாபிதாவில் சேர்ந்தவர்கள். இருவரும் கலந்து ஆலோசித்து, பணம் சம்பாதிக்க வெல்லம் கரைத்த தண்ணீர்தான் தாது புஷ்டி மருந்து என்று கண்டுபிடித்து அந்த வியாபாரத்தை நடத்துகிறார்கள். ஒருநாள் திவான் பகதூர் ரங்கனாத முதலியார் என்பவரை கேசவன் ஒரு மோட்டார் விபத்திலிருந்து காப்பாற்றியதின் காரணமாக அவரது அன்புக்குப் பாத்திரனாகி அவரது ஒரே மகளும், நவநாகரிக யுவதியுமான கமலாவுக்கு ஒழுக்கம் கற்பிக்கும் உபாத்தியாயராக நியமிக்கப் படுகிறான். கேசவனும், கமலாவும் ஒருவரையொருவர் காதலிக்கின்றனர். தன் காதல் விஷபத்தில் குறுக்கிட்ட தன் தாய் தந்தையரை, கமலா தன் சாகஸங்களால் ஏமாற்றி, தன் இஷ்டப்படி கேசவனையே மணந்துகொள்கிறாள். ரங்கனாத முதலியாரின் திவான் பகதூர் பட்டம் கேசவனை வந்தடைந்து கேசவன், திவான்பகதூர் கேசவ முதலியாராகிறார். இதுதான் கதை.

பிரகதியின் 'சபாபதி'யைப் போல் இதுவும் ஒரு முழுநீள ஹாஸ்யப் படம்தான் என்றாலும், அதற்கும் இதற்கும் எவ்வளவோ வித்தியாசங்களிருக்கின்றன.

சமூகத்தின் குறைபாடுகளையும் ஊழல்களையும் அதற்குச் சம்பந்தப்பட்டோரின் மனம் புண்படாத வகையில் கிண்டல்செய்து சீர்திருத்துவது, அவற்றை நேரடியாய்க் கண்டித்து சீர்திருத்துவதைவிட சிரேஷ்டமானது என்று சொல்லலாம். இதை அடிப்படையாகக்கொண்டுதான் 'திவான் பகதூ'ரின் கதை உருவாகியிருக்கிறது.

கதையில் உருக்கமான அல்லது உணர்ச்சி ததும்பக்கூடிய கட்டங்கள் இல்லை. சில இடங்களில் கதை அனாவஸ்யமாக வளர்த்தப்படுகிறது. ஜமீன்தாரும் நர்ஸும் கதைக்கு அவசியமற்ற பாத்திரங்கள். காளி என். ரத்தினமும், ஸி. டி. ராஜகாந்தமும் படத்தில் வரவேண்டும் என்பதற்காகவே ஜமீன்தார், நர்ஸ் பாத்திரங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கதைக்காகப் பாத்திரங்களே தவிர பாத்திரங்களுக்காகக் கதையல்ல என்பதை இந்த இடத்தில் ஞாபகமூட்டவேண்டியிருக்கிறது.

வசனம் :

கதை மட்டமானதாக இருந்தாலும் அதைச் சரிக்கட்டி இழுத்துச் செல்வது ஸ்ரீ ஹரிதாஸின் வசனம்தான். ஹரிதாஸ் (இவர் ஒரு அமைச்சூர் நடிகரென்று கேள்வி) இத்துறைக்குப் புதியவராயிருந்தும், திறமையாகவும், கதைக்கேற்ப கிண்டல் செய்யும் முறையிலும் வசனத்தை அமைத்திருப்பதுபற்றி அவரைப் பாராட்டவேண்டும். தேர்தலில் வெற்றிபெற இடத்திற்கேற்றபடி கேசவன் பேசும் கட்டங்கள் சுவாரஸ்யமாயிருக்கின்றன.

பாட்டு :

'திவான்பகதூர்' கதையில் பாட்டுகளை அதிகமாகப் புகுத்த சந்தர்ப்பங்களில்லையென்றாலும், பலவந்தமாக அத்தகைய சந்தர்ப்பங்களை நுழைத்துக்கொண்டு அனாவஸ்யமான இடங்களிளெல்லாம் அசந்தர்ப்பமாகப் பாடச் செய்திருக்கிறார்கள். கமலாவின் (சுசீலாதேவி) வாயிலிருந்து தொனிப்பதாகத் தோன்றும் யு. ஆர். ஜீவரத்தினத்தின் பாட்டுகள் அவ்வளவாகச் சோபிக்கவில்லை. 'நம் பாட்டும் இருக்கட்டுமே' என்ற தோரணையில் சிவபாக்கியமும், ராஜகாந்தமும் ஒவ்வொரு பாட்டைப் பாடிவைத்திருக்கிறார்கள்.

நடிப்பு :

கேசவனாக நடிக்கும் டி. ஆர். ராமச்சந்திரன்தான் படத்திலேயே கூடியவரையில் உருப்படியாக நடித்திருக்கிறார். இவர் வார்த்தைகளை அழுத்தம் திருத்தமாக உச்சரித்துப் பேசி ரஸிகர்களின் பாராட்டுகளைப் பெற்றுவிடுகிறார். சுசீலாதேவி கமலாவாகத் தோன்றி நடிக்க முயன்றிருக்கிறார். கே. கே. பெருமாளும், பி. எஸ். சிவபாக்கியமும் சுமாராய் நடித்திருக்கிறார்கள். காளி ரத்தினம் ஜமீன்தாராக வருகிறார். தமக்கே பூரண உரிமையுள்ள முகக் கோரணிகளை இப்படத்தில் குறைத்துக்கொண்டிருப்பது, இவருக்கும், தமிழ் நாட்டிற்கும் நல்லகாலம். வீட்டு வேலைக்காரனாக வரும் குமார், பிறரைக் காப்பியடிக்காமல் தன் சொந்த பாணியில் நடித்து வருவாரானால் திரையுலகில் முன்னேறிப் பிரகாசிக்க முடியும்.

வர்ணப்பூச்சு :

மட்டமான நீல, காப்பி வர்ண மசிகளைப் படத்தின்மேல் அப்படியே கொட்டிவிட்டதுபோலிருக்கிறது படத்திற்கு வர்ணம் கொடுத்திருப்பது. இந்த வர்ணப்பூச்சு வேலைகளெல்லாம் ஏதோ

ஒன்றிரண்டு கட்டங்களுக்குக் கொடுத்தால்தான் படம் மேற்கொண்டு சோபிக்க இயலும்.

சில குறைகள் :

படத்தில் வரும் ஜமீன்தாரின் தர்பார்களும், அவர் முன்னிலையில் அலங்கோல ஆடை யணிந்து ஒரு மாது ஆடும் நடனமும் கதைக்கு அவசியமே இல்லை. ஜமீந்தார் நர்ஸுடன் நடத்தும் சரஸங்களும் விரஸமாக இருக்கின்றன. இவற்றை வெட்டி எறிந்திருக்கலாம்.

கேசவ முதலியாரின் தேர்தல் பிரசாரம் அளவுக்கு மீறி வளர்த்தப்படுவதால் சலிப்புண்டாகி விடுகிறது.

கேசவ் முதலியாரின் பிரசாரத்தை மட்டும் பிரமாதமாகக் காண்பித்துவிட்டு அவரது எதிரியின் பிரசாரத்தைக் கொஞ்சம் கூடக் காட்டாதது இயற்கையாயில்லை.

இதர அம்சங்கள் :

ஸ்ரீ டி. ஆர். சுந்தரம் படத்தை டைரக்ட் செய்திருக்கிறார். சில இடங்களில் டைரக்ஷன் நன்றாக இருக்கிறதென்றாலும் இன்னும் கொஞ்சம் கவனம் செலுத்தியிருந்தால் அங்கங்கே தலை காட்டும் குறைகளை நிவர்த்தித்திருக்கலாம்.

படப் பிடிப்பு நன்றாக இருக்கிறது. காட்சி ஜோடனை, பின்னணி முதலியவைகள் மாடர்ன் தியேட்டர்ஸின் வழக்கமான தரத்தில் இருக்கின்றன.

மிஸ்டர் நட்கர்னி என்ற இந்தியர், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் வார்னர் பிரதர்ஸ் கம்பெனியின் ஜெனரல் மானேஜர் பதவியை வகித்து வருகிறார். சினிமாத் துறையில் நட்கர்னியைத் தவிர இதுவரை எந்த இந்தியரும் இவ்வளவு உயர்ந்த பதவியை வகிக்கவில்லை. இக்கம்பெனியில் எட்டு வருஷங்களுக்கு முன்னால் நட்கர்னி வாரத்திற்கு எட்டு ரூபாய் சம்பளத்தில் ஒரு 'டைபிஸ்ட்'டாக வேலை செய்துவந்தாராம்!

* * *

பிரபல ஆங்கில டைரக்டரான ஆல்பிரட் ஹிட்ச்காக் என்பவரின் எடை 300 பவுண்டுகளாம். இவர் தற்போது ஹாலிவுட்டில் இருக்கிறார்.

* * *

டைரக்டர் சாந்தாராமுக்கு, சாந்தா என்ற பெயரின் மீது அபார அபிமானமாம். இந்த அபிமானம் அவரது 'எதிர்பாராதது' படத்திலிருந்து ஆரம்பமாகியிருக்கிறதாம். 'எதிர்பாராத'தில் சாந்தா ஆப்தேயும், 'ஆத்மி'யில் சாந்தா ஹுப்ளிகாரும், 'படோஸி'யில் சாந்தா மஜும்தாரும், 'சகுந்தலா'வில் சாந்தரின்னும் நடித்திருப்பது இதை ஊர்ஜிதம் செய்கிறது.

* * *

ஒரு காலத்தில் உருது நாடக மேடை பிரபல நக்ஷத்திரமாய் விளங்கிய 'ஷரிபானு' என்ற நடிதான், பம்பாயில் முதன் முதலாகச் சொந்த வீடு கட்டினவராம்.

* * *

FINEST QUALITY

FRENCH COLONIAL RUM

AT REASONABLE RATES

★

Ask Your Local Dealer to apply to:

SOLE DISTRIBUTOR FOR SOUTH INDIA

V. SRINIVAS

5/361, AVANASHI ROAD, COIMBATORE

கிஸ்மத்

பேசும்பட விமரிசனம்

பம்பாய் டாக்கீஸாரின் படங்கள் பெருவாரியான வெற்றி பெறுவதற்கு, அவர்கள் பொதுஜனங்களின் ருசியை உணர்ந்து, அவர்களுக்குப் பெரிதும் திருப்தியளிக்கக்கூடிய பாடல், ஆடல், காதல், ஹாஸ்யம் இவை யெல்லாம் நிறைந்த கதைகளைப் படமாகத் தயாரித்து வெளியிடுவதுதான் காரணம் என்று சொல்லலாம்.

பம்பாய் டாக்கீஸாரின் இக் கொள்கையை யொட்டி சமீபத்தில் திரையிடப்பட்ட 'கிஸ்மத்' படத்திலும் ஆடல், பாடல், காதல், ஹாஸ்யம் எல்லாம் இருக்கின்றன. கதைச் சுருக்கம் வருமாறு:

சேகர் ஒரு நவநாகரீகத் திருடன்! போலீஸாரின் கண்களுக்குப் படாமல் வெகு சாமர்த்தியமாகத் தன் வேலைகளைச் செய்யக் கூடியவன். ஒருநாள் இரவு ஒரு வீட்டினுள் புகுந்து தன் கை வரிசையைக் காட்ட முயன்ற போது, எதிர்பாராத விதமாய் அங்கு ராணி என்ற ஒரு அழகிய பெண்ணைச் சந்திக்கிறான். ராணியும் சேகரும் ஒருவரையொருவர் காதலிக்கிறார்கள். கடன் விஷயமாக ராணியின் தகப்பனருக்கு பண உதவி செய்து அவர் அன்பையும் தேடிக் கொள்கிறான் சேகர்.

தான் ஒரு திருடன் என்பதைத் துளியும் காட்டாமல் சமாளித்து வந்த சேகர், ஒருநாள் தான் களவாடி வந்த ஒரு ஹாரத்தை ராணிக்குப் பரிசளிக்கிறான். ஆனால் அதன் மூலம் சேகர் ஒரு திருடன் என்ற விஷயம் வெளிப்பட்டு அதன் காரணமாக ராணி சேகரை நிந்தித்து வெறுக்கிறாள்.

சேகர் ராணிக்காக திருட்டுத் தொழிலை விட்டுவிட முயன்றும் முடிவதில்லை. அதே சமயத்தில் போலீசாரின் கண்காணிப்பும் தன்மேல் அதிகமாவதை சேகர் உணர்ந்தாலும் தன் தொழிலை அனாயாசமாகவே செய்துவந்தான் சேகர்.

ராணி ஒரு நடனமாது. நடனமாடிய போது ராணியின் காலில் ஏற்பட்ட ஊனத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் கொட்டகை முதலாளியான இந்திரபாபுவின் வீட்டில் திருடி மறைமுகமாய்ப் பண உதவி செய்து ஒரு டாக்டர் மூலமாய் ராணியின் ஊனத்தைப் போக்கிவிடுகிறான் சேகர். இந்திரபாபு எப்படியும் சேகரைப் பிடித்துச் சிறையிலடைக்க முடிவு செய்து அதற்கான சூழ்ச்சிகளைச் செய்கிறார். அவர் வலையில் விழுந்த சேகருக்கு போலீஸார் விலங்கு மாட்டுகிறார்கள். ஆனால் அச்சமயத்தில் எதிர்பாராதபடி சேகரின் பூர்வ வரலாறு வெளிப்பட்டு இந்திரபாபுதான் சேகரின் தகப்பனார் என்று வெளியாகிறது. கடைசியில் எல்லாம் சுபமாக முடிவடைகிறது. ராணியும் சேகரும் தம்பதிகளாகின்றனர்.

தயாரிப்பு:	பம்பாய் டாக்கீஸ்
பாஷை:	ஹிந்தி
நடிகர்கள்:	அசோக்குமார், மும்தாஸ் ஷாந்தி, ஷா நவாஸ், வி. எச். தேசாய்
டைரக்ஷன்:	எஸ். முகர்ஜி

நம்ப முடியாததும், விளங்காததுமான இரண்டொரு காட்சிகள் நீங்கலாக கதை சுவாரஸ்யமாகத்தான் செல்கிறது. வசனத்தின் தெளிவும், எளிமையும் பாஷை புரியாதவர்களும் சம்பாஷணையின் போக்கை உணர்ந்து சுமாராய் அறிந்து கொள்ள உதவி செய்கின்றன.

ராணியாக நடிக்கும் மும்தாஸ் ஷாந்தி பாடும் (அதாவது மும்தாஸ் ஷாந்தி வாயசைத்து அமீர்பாய் கர்னாடகி பாடும்) பாட்டுகள் கேட்க இனிமையாயிருக்கின்றன. 'தீரே தீரே' என்ற பாட்டை மட்டும் திரும்பத் திரும்பக் கேட்கலாம் போலிருக்கிறது. சேகராகத் தோன்றும் அசோக் குமாருக்கு இப்படத்தில் பாடுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகமில்லை. இருந்த போதிலும் கிடைத்த சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல்தான் அசோக் குமார்தான் என்பதைக் காட்டியிருக்கிறார்.

நடிப்பைப் பொருத்தவரையில் சேகர் சேகர்தான். ராணி, ராணிதான். இருவர் நடிப்பும் சிறந்து விளங்குகிறது. பம்பாய் டாக்கீஸாரின் உப பாத்திரங்களில் ஒருவரும் சோடையாகக் காணப்படவில்லை. வி. எச். தேசாயும் தன் ஹாஸ்யபாகத்தை உணர்ந்து நடித்திருக்கிறார். ஆனால் 'பந்தனி'ல் ம்ஸ்டர் ஸாகெப்பாக நடித்து நமது பாராட்டுக்களைக் கூடைக் கணக்கில் பெற்றுக் கொண்ட அதே தேசாய்தானா இவர் என்ற சந்தேகம் ஏற்படுகிறது. 'பந்தனி'ல் சோபித்த அளவு இவர் ஹாஸ்யம் இதில் சோபிக்கவில்லை.

டைரக்ஷன், காட்சி ஜோடனை, படப் பிடிப்பு, பின்னணி கீதம், ஒலி, ஒளிப்பதிவுகள் ஆகியவை பம்பாய் டாக்கீஸாரின் வழக்கமான தரத்திலிருக்கின்றன.

'ஹிந்துஸ்தான் ஹமாரா' என்று பாடிக்கொண்டே இந்திய வீரர்கள் அணிவகுத்துச் செல்வது போல் காட்டப்படும் நாடக மேடைக் காட்சிகளும், நடனங்களும் திருப்தி யளிக்கத் தவறவில்லை.

மொத்தத்தில், 'கங்கண்' 'பந்தன்' 'பஸந்த்' போன்ற படங்களைக் கண்டுகளித்த கண்களுக்கு 'கிஸ்மத்' அவ்வளவு திருப்தியளிக்கவில்லை யென்றாலும் பார்க்கக் கூடிய படம்.

பாகவதரும் வசுந்தராவும்

தியாகராஜ பாகவதரும் வசுந்தராவும் சேர்ந்து ஒரு புதுப்படத்தில் நடிக்கப் போகிறார்களாம். துலாபாரம் என்பது கதையாயிருக்கலாம் என்று தோன்றுகிறது.

★

தேவிகா ராணி

★

★

உல்ஜான் படத்தில்

★

டைரக்டர் ஸ்ரீராமுலு

"கலிங்கம்"

ஓரே ஒரு படத்தில் எழு லக்ஷம் ரூபாய் லாபம்! இன்னமும் அப் படம் மாதக் கணக்காய் ஓடிக்கொண்டிருக்கிறது! சென்ற விடமெல்லாம் சிறப்புத்தான். படங்கள்தான் 50 நாள், 100 நாள் ஓடியபிறகு விழாக்கள் நடத்தப்படுகின்றன என்றால், பலர் தாங்கள் 50-வது தடவையாகவோ, 100-வது தடவையாகவோ இப்படத்தைத் திரும்பத் திரும்பப் பார்த்ததைக் கொண்டாடலாம். அத்தகைய படம் ஆரியமாலா. இன்னும் மக்கள் அதைப் பார்த்த வண்ணமிருக்கிறார்கள். சுமார் 25 லக்ஷம் ரூபாய் மொத்த வசூலை அள்ளிக் கொடுத்திருக்கிறாள் ஆரியமாலா. இப் படத்தை டைரக்ட் செய்தவர்தான் ஸ்ரீ எம். எஸ். ஸ்ரீராமுலு நாயுடு.

ஸ்ரீராமுலு நாயுடு ஒரு சங்கோஜப் பேர்வழி போலிருக்கிறது. அல்லது வெறும் பெயர் படைப்பதில் என்ன பிரயோஜனம் என்று இருந்திருக்க வேண்டும். எப்படியானாலும் முதன் முதலில் படம் வெளிவந்தபோது அவர் பெயர் படத்திற்குப் பொறுப்பாளிகளின் ஜாபிதாவில் சேர்க்கப் படவில்லை. காமிராமென் ஒருவரின் பெயர்தான் டைரக்டரெனக் காணப்பட்டது. பெயரும் பொருளும் அவரை நாடி வந்தபிறகு, தான்தான் ஆரியமாலாவை டைரக்ட் செய்த குற்றவாளி என்பதை ஒப்புக் கொண்டார். பிறகு அவர் பெயருடன் சில பிரதிகள் வெளி வந்தன. இன்னும் சில பிரதிகளில் டைரக்டர் பெயரே இல்லை'

நாயுடு கோயமுத்தூர் வாசி. 1936-ம் வருஷம் கோவை நகரைச் சேர்ந்த பிரபல தியேட்டர் முதலாளியான ஸ்ரீ எஸ். வின்சென்ட் அவர்களும், மற்றும் சில பிரமுகர்களும் சேர்ந்து கோயமுத்தூரில் ஒரு படப்பிடிப்பு ஸ்டூடியோ நிர்மாணிக்க வேண்டுமென்று தீர்மானித்தனர். அதன் பயன்தான் சென்ட்ரல் ஸ்டூடியோ. இந்த ஸ்டூடியோவை ஆரம்பித்த ஸ்தாபகர்களில் நாயுடுவும் ஒருவர். ஆரம்பமுதல் நாளது வரை மானேஜிங் டைரக்டர் பதவி வகித்து வருகிறார்.

கோவை நகரிலிருந்து கிழக்கே செல்லும் திருச்சி ரஸ்தாவில் நகர எல்லையைக் கடந்து சற்றுதூரம் செல்வோமானால் கோவை சென்ட்ரல் ஸ்டூடியோவின் அழகிய தோற்றம் கண்ணில் படும்.



'சிவகவி'யில் ராஜகுமாரியின் நடனக்காக்ஷிக்கு ஒத்திகை நடக்கிறது.
ஸ்ரீராமுலு பார்வையிடுகிறார்.

தென்னிந்தியாவில் நவீன சாதனங்கள் உள்ளதும், வசதிகள் நிறைந்ததுமான ஒரு சில ஸ்டூடியோக்களில் கோவை சென்ட்ரல் ஸ்டூடியோவுக்கு ஒரு நல்ல ஸ்தானம் உண்டு.

சென்ட்ரல் ஸ்டூடியோ ஆரம்ப காலத்திலேயே நல்ல படங்களைத் தயாரித்து வெளியிட்டிருக்கிறது என்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இங்கு தயாரிக்கப்பட்ட தெலுங்கு துகாராம் அவ்வருஷத்திய பிலிம் தேர்தலில் தெலுங்குப் படங்களில் முதல் ஸ்தானம் பெற்றது. முசிரி நடித்த தமிழ் துகாராமும் நன்றாகவே இருந்தது. இவற்றிற்குப் பிறகு எத்தனையோ படங்கள் இங்கு தயாரிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் தயாராகிவருகின்றன.

சென்ட்ரல் ஸ்டூடியோவிலிருந்து வெளிவந்த படங்களில் மிகவும் பிரபலமானது ஆரியமாலாதான். 1941-ம் வருஷம் எப்ரல் மாதம் ஆரியமாலாவின் படப்பிடிப்பு ஆரம்பமாயிற்று. அதே வருஷம் தீபாவளி தினத்தன்று ஆரியமாலா பல நகரங்களில் ஏக காலத்தில் காட்சி யளித்தாள். செலவழித்த பணத்தைத் திரும்ப எடுக்கக்கூட சில பட முதலாளிகள் திண்டாடிக் கொண்டிருந்தபோது ஆரியமாலா போட்ட பணத்தை அள்ளிக் கொடுத்ததுடன் எந்தப் பட முதலாளியும் இதுவரை ஒரு படத்தில் அடைந்திருக்க முடியாத அமோக லாபத்தையும் தேடித் தந்திருக்கிறது. அப் படத்தைத் தயாரித்தவர்கள் கூட அவ்வளவு எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்!

ஸ்ரீராமுலு நாயுடு ஊக்கமும் நுட்ப புத்தியும் உள்ளவர். தனது ஸ்டூடியோவிலேயே பல படங்கள் பிடிபட்டுக் கொண்டிருந்தபோதே டைரக்ஷன் விஷயத்தில் உள்ள பல நுட்பங்களையும் செம்மையாகக் கற்றுக் கொண்டார். சிவகவி படம் எடுக்கப்படும் பொழுது, சமீபத்தில் காலஞ் சென்ற ஸ்ரீ பி. கே. ராஜா சாண்டோ விலகிவிடவே, ஸ்ரீராமுலு நாயுடுவே அப் படத்தை டைரக்ட் செய்து முடித்தார்.

தற்போது ஜெகதலப்ரதாபன் நாயுடுவின் டைரக்ஷனில் வெகு வேகமாக வளர்ந்துகொண்டு வருகிறான். ஜெகதலப்ரதாபன் கதையும் ஆரியமாலா வகையில் சேர்ந்ததுதான். நடிகர்களும் பெரும்பாலும் அதில் நடித்தவர்களே. இதனால் இப்படமும் நல்ல வசூலைக் கொடுக்கக் கூடியதாயிருக்கவேண்டும்.

சென்ட்ரல் ஸ்டூடியோ நாளுக்கு நாள் வளர்கிறது. ராயல் டாக்கீஸாரின் ஹரிதாஸ் இங்குதான் தயாராகிறது. சௌடையா நடிக்கும் வாணியும் இங்கு தயாரிக்கப் பட்டு முடிவடைந்து விட்டது. அடுத்தபடியாக வால்மீகி, சாலிவாஹனன் ஆகியவை காத்துக் கொண்டிருக்கின்றன. இவற்றில் வால்மீகி நாயுடுவால் டைரக்ட் செய்யப்படும்.

இதுவரை ஸ்ரீராமுலு நாயுடு ஒரு சில படங்களை மட்டுமே டைரக்ட் செய்திருந்த போதிலும் வசூல்விஷயத்தில் .பாமர ஜனங்களின் மனப்பான்மையை செவ்வனே உணர்ந்து கொண்டு தன் படங்களைத் தயாரித்திருக்கிறார். பிரபல நடிக நடிகைகள் பலர் இவரது டைரக்ஷனில் நடித்துள்ளனர். ஸ்டூடியோ வசதிகள் சகலமும் படைத்த இவர் சீக்கிரமே பிரபல டைரக்டர்களில் ஒருவராகக் கூடுமென நம்பலாம்.

———

ஸ்ரீராமுலுவும் ராஜகுமாரியும்; சிவகவி படப்பிடிப்பின்போது

புஷ்பவல்லி

படப்பிரதிநிதிகளின் வாழ்க்கையில் ருசிகரமான சம்பவங்கள் உள்ளன. படப்பிரதிநிதி ஒருவர் சொல்லுகிறார், கேளுங்கள்

★ படப் பிரதிநிதி ★

— பி. எஸ். கணேசன்

'கணகண' வென்று சினிமாக் கொட்டகையின் முதல் மணி ஒலித்தது. கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி ஆறு. 'இரண்டாவது மணி அடிக்கட்டுமே' என்று எண்ணியவனாய் ஹாலில் மாட்டப்பட்டிருந்த படங்களைப் பார்த்துக்கொண்டே வந்தேன். "ஏன் ஸார், உங்களைத்தான்" என்று ஒரு சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். கோட்டும் சூட்டும் அணிந்த ஒருவர் "உங்களைத்தான் ஸார், இந்தப் படத்து 'ரெப்ரசென்டேடிவ்' எங்கே இருக்கிறார்?" என்றார்.

"எங்கிருக்கிறார் என்று எனக்குத் தெரியாது ஸார். மாடியிலே இருக்கலாம், போய்ப் பாருங்க" என்றேன் பணிவாக.

"ரொம்ப தேங்ஸ்" என்று மாடிப் படியில் ஏறிச் சென்றார் அந்த ஆசாமி.

ரெப்ரசென்டேடிவ் (பிரதிநிதி) என்ற வார்த்தை என் உள்ளத்தைக் கிளறியது. பழைய எண்ணங்கள் என் உள்ளத்திரையில் ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து ஒரு சினிமாப் படம்போல் காட்சியளிக்க ஆரம்பித்தன.

* * *

அப்போது எனக்கு பதினேழு அல்லது பதினெட்டு வயதுதான் இருக்கும். எங்கள் ஊர் சினிமாக் கொட்டகையில், அதாவது நாடோடிக் கொட்டகையில் (டூரிங் டாக்கீஸ்) ஏதோ ஒரு படம் நடந்துகொண்டிருந்தது. ('வள்ளித் திருமணம்' என்று ஞாபகம்) நானும் சினிமாவுக்குப் போயிருந்தேன். அப்படத்தை பார்த்து அக் கிராமவாசிகள் எல்லோரும் மகிழ்ந்தார்கள் என்பது உண்மையே. ஆனால் அப்படத்தைக் கொண்டுவந்திருந்த படப் பிரதிநிதியை (ரெப்ரசென்டேடிவ்) அவர்கள் பார்த்தபிறகு அவர்கள் மகிழ்ச்சி பன்மடங்கு பெருகிவிட்டது. அந்த மகிழ்ச்சியின் பெருக்கத்தால் அந்தப் பிரதிநிதியணிந்திருந்த தூய வெள்ளையான கோட், சூட் முதலியவை கூட ஒரு புது வர்ணமாக மாறிவிட்டன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாக அந்தப் பிரதிநிதியைப் பாராட்டினார்கள். சிலர் மித மீறிய ஆனந்தத்தில் அந்தப் பிரதிநிதியைக் கையெடுத்துக் கூடக் கும்பிட ஆரம்பித்துவிட்டார்கள்.

இவையெல்லாம் கும்பலோடு கும்பலாய் நின்றுகொண்டு நானும் பார்த்துக்கொண்டிருந்தேன். "அந்தப் படப் பிரதிநிதி ஒரு பாக்யசாலிதான். இதில் சந்தேகமேயில்லை. அடடா, எத்தனை பாராட்டுக்கள்! எத்தனை வாழ்த்துக்கள்," இப்படி என் மனம் எண்ணத் தொடங்கிவிட்டது. அந்த எண்ணக்கடலிலேயே மிதந்து சென்று எப்படியோ வீடு சென்று சேர்ந்தேன்.

அன்றுமுதல் என் உள்ளத்தில் ஒரு உறுதி ஏற்பட்டுவிட்டது. "பார்த்தால் படப்பிரதிநிதி உத்தியோகம். இல்லாவிட்டால் சும்மா இருந்துவிடுவது." இப்படித் தீர்மானித்துக்கொண்டேன். மூன்று நான்கு மாதங்களில் என் கலாசாலைப் படிப்பு முடிந்து விட்டது. பலர் உத்தியோக வேட்டையில் இறங்கினார்கள். எனக்கு அவர்களைப்போல் உத்தியோக வேட்டையில் இறங்க மனமில்லை. ஒன்றிரண்டுமுறை என் நிலைமை உத்தியோக வேட்டையில் இறங்கித்தான் ஆகவேண்டும் என்று ஏற்படும்போது எனது கிராமவாசமும், அங்கு கண்ட படம், படப் பிரதிநிதி முதலியவை பற்றிய எண்ணங்கள் மேலெழுந்து அந்த நிலைமையை மாற்றி என் திடசங்கல்பத்தை இன்னும் திடமாக்கிவிடும். எனக்கு சிபார்சு செய்து வேலை வாங்கித் தருவதாக முன்வந்த இரண்டொருவரிடமும் இதன் காரணமாக நான் முட்டாள் பட்டம் பெற்றுக்கொள்ள நேரிட்டது.

இந்த நிலைமையில் என்னை மருமகனாக்கிப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் பலருக்குக் கிளம்பி, பெண் ஜாதகம், ஆண் ஜாதகம் என்ற வித்தியாசம்கூடப் பார்க்காமல் வெகு தீவிரமாக ஜாதகங்களைப் பொருத்தம் பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள். ஆனால் நானோ 'படப் பிரதிநிதி, படப் பிரதிநிதி' என்றே ஜபம் செய்துகொண்டிருந்தேன். முடியுமானால் படப் பிரதிநிதியாக வட இந்தியாவுக்குப் போகக்கூடத் தயாராய் இருந்தேன் என்றால் இந்தப் படப் பிரதிநிதி பைத்தியம் எனக்கு எவ்வளவுதூரம் முற்றியிருக்கும் என்று வாசகர்களே கற்பனை செய்துகொள்ளலாம்.

இப்படி வேறு வேலைக்குப் போக முயற்சிகூட செய்யாமல், வெட்டிச்சோறு தின்றுகொண்டு வீட்டில் முழுச் சோம்பேறியாகிக் கொண்டிருந்த சமயத்தில் என் நண்பன் ஒருவன் தெரிவித்த செய்தி என்னை கந்தர்வலோகத்திற்கே கொண்டுபோய்விட்டது. செய்தி வேறு என்னவாக இருக்க முடியும்? படப் பிரதிநிதி உத்தியோகம் ஒன்று காலியிருப்பதாகத் தெரிந்த செய்திதான் அது. மறுநாளே அக் கம்பெனியாரைப் பார்த்துப் பேசிவரக் கிளம்பினேன். ஆனால் அதற்குள்ளாக என் நண்பர்கள் என்னைப்பற்றி அந்தக் கம்பெனியின் முதலாளிக்குப் பலமாகச் சிபாரிசு செய்திருந்தார்களாதலால் என் வேலை வெகு சுலபமாக முடிவடைந்துவிட்டது. அன்றைக்கு மூன்றாவது நாள் நான் படத்துடன் சேலம் ஜில்லாவைச் சேர்ந்த தர்மபுரி என்ற ஊருக்குச் செல்லவேண்டும் என்று அவர் (முதலாளி) தெரிவித்த

போது என் ஆனந்தம் அமோகமாகப் பொங்கி விட்டது. அந்த ஆனந்தத்தில் அவரிடம் சொல்லிக்கொள்ளாமல் கூட வீட்டுக்குப் புறப்பட்டுவிட்டேன்.

அன்று மாலை என்னைக் காட்டிலும் என் நண்பர்கள் மகிழ்ச்சியால் துள்ளிக்கொண்டிருந்தார்கள். வெங்கடேசா லாட்ஜில் நான்கு நாளுக்கு ரூபாய் நாலும் அணா பதினைமட்டும் பில் ஆகியிருக்கும்போது அவர்கள் துள்ளாமல் இருக்க முடியுமா என்ன?

குறிப்பிட்ட நாளில் முதலாளியிடம் உத்திரவு பெற்றுக்கொண்டு, அவர் சொன்ன புத்திமதிகளையும் காதில் வாங்கிக்கொண்டு படப்பெட்டி. என் உடுப்புப்பெட்டி சகிதமாக ரயில்வே ஸ்டேஷனுக்குப் புறப்பட்டேன்.

அங்கு விசாரித்ததில் அன்றைய இரவு வண்டியில் புறப்பட்டால் மறுநாள் காலையில் தர்மபுரி சேர்கிறது என்று தெரிந்தது. 'சரி, நல்லதாகப் போயிற்று' என்று எண்ணியவனாய் இரவு வண்டியில், நண்பர்கள் உற்சாகத்தோடு வழியனுப்ப, தர்மபுரிக்குப் புறப்பட்டேன்.

படப்பிரதிநிதியாகப் போகிறோம் என்ற உற்சாகத்தில் இரவெல்லாம் தூக்கம் விழித்தது கூட சிரமமாகத்தோன்றவில்லை. பொழுதும் மெல்ல மெல்லப் புலர ஆரம்பித்தது. புகைவண்டி தர்மபுரியை நெருங்க நெருங்க என் மனம் ஏனோ பட படவென்று அடித்துக்கொண்டது. தர்மபுரி ஸ்டேஷனில் பெருமூச்சு விட்டுக்கொண்டு நின்றது புகைவண்டி. பிளாட்பாரத்தில் பத்துப் பதினைந்துபேர் யாரையோ எதிர்பார்த்தபடி நின்று கொண்டிருந்தார்கள். ஒரு சமயம் என்னையா இவர்கள் எதிர்பார்த்து வரவேற்கக் காத்திருக்கிறார்கள்? என்று எண்ணினேன். அடுத்த சமயமே 'சீ இதென்ன அசட்டுத்தனம், என்னையாவது இத்தனை பேர் வரவேற்கவாவது, வேறு யாரோ ஒரு பெரிய மனிதர் இறங்குவார் போலிருக்கிறது" என்று என் எண்ணத்தை மாற்றிக் கொண்டு பரபரப்பாய் பெட்டி படுக்கைகளை பிளேட்பாரத்தில் இறக்கிவைத்தேன்.

இரண்டொருவர் அந்த ஸ்டேஷனில் இறங்கியதையும் அவர்களில் ஒருவர்கூட பெரிய மனிதராய் இராமல் சாதாரண கிராமவாசிகளாய் இருந்ததையும் ஜாடையாகக் கவனித்தேன். இதற்குள்ளாக ஜனக்கூட்டம் என்னை நெருங்கிவர ஆரம்பித்தது. வரவர அவர்களில் சிலர் என்னைப் பற்றி ஏதேதோ மெல்லப் பேசிக்கொண்டு வந்தார்கள். கொஞ்சம் நாகரீகமான உடையணிந்திருந்த ஒருவர் எனக்கருகில் வந்து "என் ஸார் நீங்கள்......... இருந்துதானே வருகிறீர்கள்?" என்றார். "ஆம்" என்றேன். "சரி, வாங்க, வண்டி தயாராயிருக்கிறது" என்றார் அவர். நான் ஒன்றும் புரியாமல் விழித்ததைக்கண்டு அவர் மீண்டும் பேச ஆரம்பித்தார். "நான்தான் இந்த ஊர் டூரிங்டாக்கீஸ் மானேஜர். இவர்களெல்லாம் படங்கொண்டுவரும் உங்களைப் பார்க்க வந்தவர்கள். புறப்படுங்கள்." என்றார்.

அப்போது தான் எனக்கு விஷயம் விளங்க ஆரம்பித்தது. பெட்டியையும் படுக்கையையும் கையில் எடுத்தேன். "நீங்க சும்மா வச்சிருங்க" என்று என்னிடம் சொல்லிவிட்டு "டேய்! சுப்பா, இந்தப் பெட்டிபடுக்கைகளையெல்லாம் அந்த வில்வண்டியில் கொண்டுபோய் வை" என்று அந்த ஆள்களில் ஒருவனுக்கு உத்திரவிட்டார். பெட்டிபடுக்கைகள் வண்டியில் ஏற்றப்பட்ட பின் நானும், மானேஜரும் வண்டியில் ஏறிக்கொண்டோம். "ஜலங், ஜலங்" என்று சலங்கைகள் சப்திக்க காளைகள் பாய்ந்து செல்லத் தொடங்கின.

கால்மணி நேரத்திற்குள் டூரிங் கொட்டகைக்குவந்துவிட்டோம். அதற்கு அருகிலிருந்த ஒரு வீட்டின் எதிரில் வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கினார் மானேஜர். நானும் இறங்கினேன். பெட்டி படுக்கைகள் உள்ளே எடுத்துச் செல்லப்பட்டன.

எனக்கென்று ஒரு தனி அறை ஒழித்துவிடப் பட்டிருந்தது. சௌகரியங்களுக்கும் ஒன்றும் குறைவில்லை. காலைக்கடன்களை முடித்து, சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டு இரவெல்லாம் கண்விழித்த சிரமம் தீர நன்றாகப் படுத்துத் தூங்கி 3 மணி சுமாருக்குத்தான் எழுந்திருந்தேன். நான் எழுந்திருப்பதற்கும் மானேஜர் அங்கு வருவதற்கும் சரியாக இருந்தது.

"நல்ல தூக்கம் போலிருக்கிறது' என்றார் மானேஜர்.

"ஆமாம், இரவெல்லாம் தூக்கமில்லை யல்லவா?" என்றேன்.

"ஆமாமாம், அதனால்தான் சாப்பிடக்கூட உங்களை எழுப்பவில்லை, எழுந்திருங்கள். வெந்நீர் காய்ந்து கொண்டிருக்கிறதாம். குளித்துவிட்டு சாப்பாட்டை முடித்துக் கொள்ளுங்கள். அதற்குள் நான்வந்து விடுவேன். பிறகு இருவரும் கொட்டகைக்குப் போவோம்" என்றார்.

"சரி" என்று சொல்லிக்கொண்டு எழுந்து ஸ்நானம், சாப்பாடு முதலியவற்றை முடித்துக்கொண்டு வெற்றிலை பாக்குப் போட்டுக் கொண்டிருந்தேன். சொன்னபடி மானேஜர் வந்துவிட்டார். இருவரும் சற்று நேரம்பேசிக்கொண்டிருந்தோம்.

அன்றுமாலை நான் கொண்டு போயிருந்த படம் திரையிடப்பட்டது. சுமாரான படம். அதோடு கிருஷ்ண பக்தியை அடிப்படையாகக் கொண்டது. கூட்டத்திற்குக் குறைவில்லை. கிராமவாசிகள் படத்தை வெகுவாக ரஸித்தார்கள். குறிப்பாக கிருஷ்ணபகவான் பிரத்தியக்ஷமாகும் இடங்களிலெல்லாம் அவர்கள் பயபக்தியுடன் கன்னத்தில் போட்டுக்கொண்டு கைகூப்பிக் கும்பிட ஆரம்பித்து விட்டார்கள். எனக்குச் சிரிப்பாய் வந்தது என்றாலும் அடக்கிக் கொண்டேன்.

அன்று முதல் நான் கொண்டு போயிருந்த படத்திற்கும், எனக்கும் ஏகப்பட்ட ஆதரவு. ஆறு வாரம் அந்த ஊரில் தங்கியிருந்தேன். பிறகுவேறொரு ஊருக்குப் படத்துடன் போகவேண்டி நேரிட்டது. அந்த ஆறுவார காலத்தில் படப்பிரதிநிதி என்ற ஹோதாவில் எனக்குக் கிடைத்த மரியாதையையும், வரவேற்பையும் நான் என்றென்றும் மறக்க முடியாது.

* * *

சினிமா அன்பர்களுக்கு எங்கள் பொங்கல் வாழ்த்துக்கள்!

கீழ்க்கண்ட படங்களை உங்கள் தியேட்டரில் காண்பித்து லாபமடையுங்கள்

★

குன்வர்ரா பாப்

கிஷோர் ஸாஹு
ப்ரோதிமா தாஸ்குப்தா

★

உல்ஜான்

சர்தார் அக்தார்
மஷார் கான்

★

ஸ்வாமிநாத்

சோபன சமார்த்
பிரேம் அதீப்

★

பிளாக் அவுட்

பெஞ்ஜாமின் மன்சூர்
பயில்வான்

★

ராஜா

கிஷோர் ஸாஹு
ப்ரோதிமா தாஸ்குப்தா
ராணிபாலா முதலியோர்

ரேகா

லீலா சிட்னிஸ்
ஹரிஷ்
மாயா பானர்ஜி

★

துல்ஹான்

ஸாஹு மோடக்
யசோதரா காட்ஜு
மாயா பானர்ஜி

★

வருகிறது!

கிரான்

அசோக் குமார்
லீலா சிட்னிஸ்

★

தோஸ்த்

மோதிலால்
மும்தாஸ் ஷாந்தி
நூர்ஜஹான்

சென்னை நகருக்கும் தென்னிந்தியாவுக்கும் விநியோகஸ்தர்கள்:
(இலங்கை உள்பட)

சௌத் இந்தியா பிலிம் டிஸ்ட்ரிப்யூடர்ஸ்

159, மவுன்ட் ரோட் :: சென்னை

கோயமுத்தூர், மலபார், சேலம் ஜில்லாக்களுக்கு:

சரோஜ் பிலிம்ஸ், கோயமுத்தூர்.

அடுத்தபடியாக என் முதலாளியின் உத்திரவுப்படி தஞ்சாவூரைச் சேர்ந்த கிராழத்திலுள்ள ஒரு டூரிங்டாக்கீஸுக்குச் செல்ல வேண்டியிருந்தது. அந்த கிராமம் சற்றுப்பெரியது. ஜனத்தொகையும் கொஞ்சம் அதிகம். இதனால் அங்கு இரண்டு டூரிங்கொட்டகைகளில் படம் காட்டப்பட்டு வந்தது.

நான் சென்ற தினத்திற்கு முன் தினம் தான் மற்றோர் கொட்டகைக்கும் ஒரு பிரதிநிதி படம் கொண்டுவந்தார் என்று கேள்விப்பட்டேன். இருவரும் ஹோட்டலில் சந்தித்துப் பேசிக்கொண்டோம். தான் அந்தப் படமுதலாளிக்கு நெருங்கிய பந்துவென்றும், வேறொருவரையும் அனுப்ப மனமில்லாமல் தன்னை அவர் அனுப்பியிருக்கிறாரென்றும் அந்தப் பிரதிநிதி சொன்னார். 'சரிதான்' என்று அவர் சொன்னவைகளை கேட்டுக் கொண்டேன். அன்றுமுதல் நானும் அவரும் அந்த ஹோட்டலிலேயே சாப்பிட்டு வந்தோம்.

ஒரு நாள் 5 மணி இருக்கும். அந்தப் பிரதிநிதியின் படம் ஓடும் கொட்டகைக்குச் சென்றேன். அவரைக் காணவில்லை. அங்கு கிடந்த நாற்காலியொன்றில் உட்கார்ந்தேன். சற்று நேரத்தில் அப்பிரதிநிதியாரே இரண்டுவயதுப்பெண்களுடன் அங்குவந்தார். வந்தவர் நான் அங்கு உட்கார்ந்திருந்ததைப் பார்த்துவிட்டு "ஓஹோ! வாங்க"...... என்று சொல்லிவிட்டு நான் என்ன நினைத்துக் கொள்ளப் போகிறேனோ என்று எண்ணிக்கொண்டோ என்னவோ "இவர்கள் எங்க முதலாளிக்கு ரொம்ப வேண்டியவர்கள், படச்சுருள்களையும் பாடும்பெட்டி, பிளேட் முதலியவைகளையும் பார்க்க வேண்டுமென்று வந்திருக்கிறார்கள்" என்றார்.

பாடும்பெட்டி, பிளேட் என்றதும் எனக்குச் சிரிப்புவந்து விட்டது. சிரமப்பட்டு சிரிப்பை அடக்கிக்கொண்டேன். அதே சமயத்தில் "ஐயோ பாவம்" என்று அவர்மேல் அனுதாபமும் உண்டாயிற்று. நால்வரும் மிஷின் வைத்திருக்கும் அறைக்குச் சென்றோம்.

படம் காட்டுபவர் (ஆபரேட்டர்) இருக்கும் மிஷின் ரூமுக்குச் சென்றதும் அந்தப் பிரதிநிதி என்னிடம் சொன்ன விஷயத்தையே அவரிடமும் திருப்பி ஒப்பித்து படச்சுருணைகள், பாடும் பெட்டி, பிளேட் முதலியவைகளைக் காட்டும்படி சொன்னார்.

ஆபரேட்டருக்குச் சிரிப்புத் தாங்க முடியவில்லை. "பாடும் பெட்டியா?" என்று கேட்டுக்கொண்டே விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

பிரதிநிதிக்கு ஆத்திரமும், கோபமும் வந்துவிட்டன. பெண்கள் இருவரும் ஆபரேட்டர் சிரிப்பின் காரணத்தைத் தெரிந்துகொள்ள முடியாமல் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். சிரித்து முடிந்த பிறகு ஆபரேடர் விஷயத்தை சொல்லி பாடுவதற்கு என்று பெட்டியோ, பிளேட்டோ கிடையாது என்றும் படத்துடனேயே அவற்றை இணைத்து விடுகிறார்களென்றும் சொல்லி விளக்கி விட்டு "பாடும் பெட்டி" என்று ஒரு முறை சொல்லிக்கொண்டு மறுபடியும் சிரிக்க ஆரம்பித்து விட்டான்.

பிரதிநிதி அந்த அவமானத்தைச் சகிக்கமுடியாமல் அப்பெண்கள் இருவரையும் அழைத்துக் கொண்டு விடு விடென்று அந்த இடத்தைவிட்டுப் போய்விட்டார். நானும் என் இருப்பிடம் சென்றேன்.

இரண்டு மூன்று நாட்களில் இந்தப் பிரதிநிதி தன் முதலாளிக்கு ஆபரேட்டரைப் பற்றி ஏதேதோ புகார் செய்து கடிதம் எழுதியதாகவும், கடிதத்தைக் கண்ட முதலாளி நேரில் புறப்பட்டு வந்து விஷயத்தை அறிந்து அந்தப்படப் பிரதிநிதிக்குச் சீட்டுக் கொடுத்து அனுப்பி விட்டதாகவும் கேள்விப்பட்டேன்.

மேற்கொண்டு அங்கு ஒன்றிரண்டுவாரம் தங்கியிருந்துவிட்டு ஊர் வந்து சேர்ந்தேன். இரண்டு இடங்களில் எனக்கேற்பட்ட அனுபவம், படப் பிரதிநிதியின் பொறுப்பு என்ன, அவருக்குவேண்டிய சாமர்த்தியம் எவ்வளவு, இதுபோன்ற விஷயங்கள் உள்ளங்கை உருளைக்கிழங்கு என்பார்களே, அதுபோல் விளங்கிவிட்டன. ஆனால் மற்றோர் அனுபவத்தையும் நான் வெகு சீக்கிரம் அறிந்துகொள்ள ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது.

மூன்றாவது முறை நான் படப் பிரதிநிதியாகச் சென்றிருந்த இடம் திருவண்ணாமலை. இந்தத் தடவை கையில் இருந்தது மட்டமான மூன்றாம் தரப்படம். முதல் நாள் படம் பார்த்தவர்கள், திரும்பிவரும்போது படத்தை திட்டிக்கொண்டே வந்தார்கள். வழியில் வெள்ளை வேஷ்டி, அங்கவஸ்திரம் இவற்றுடன் நின்றுகொண்டிருந்த என்னைப் பார்த்ததும் ஒருவன் "இவன் தாண்டா இந்தப் பாடாவதிப் படத்தைக் கொண்டு வந்தவன்" என்று என்னை அறிமுகம் செய்து வைத்தான். எனக்கு அங்கே மேற்கொண்டு நிற்க முடியவில்லை. மரியாதையாக நான் தங்கியிருந்த ஹோட்டலை நோக்கிக் கிளம்பினேன்.

சற்றுதூரம் சென்றிருப்பேன். எனக்குப் பின்னால் பேச்சுக் குரல் கேட்டது.

"வேஷ்டியைப் பார்ரா, இவன் படம் கொண்டுவந்த அழகுக்கு வெள்ளை வேஷ்டி" என்றான் ஒருவன்.

"தொரைக்கு மேல் வேஷ்டி வேறே" என்றான் இன்னொருவன். இதுபோல் ஏதேதோ பேசிக்கொண்டு வந்தார்கள். பேசினாலும் பாதகமில்லை; எங்கே நம்மை அடித்து விடுகிறார்களோ என்ற பயம் வேறு ஏற்பட்டு விட்டது. உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு காது கேட்காதவன்போல் மௌனமாகவே சென்று, நான் தங்கியிருந்த அறைக்குச் சென்று கதவைத் தாழ்ப்பாள் போட்டபிறகுதான் மனம் நிம்மதியடைந்தது.

மறுநாள் அதிகாலையில் கொட்டகை முதலாளியின் வீட்டிற்குச் சென்றிருந்தேன். போனதும் போகாததுமாக அவர் என்னை வாழ்த்த ஆரம்பித்துவிட்டார்.

"என்ன படமையா கொண்டு வந்தே? படத்தைத் தூக்கிட்டு ஓடினாலொழிய படம் ஓடாது போலிருக்கே" என்றார் அந்த முதலாளி.

சாரதா
எம்ராய்டரி ஸ்டோர்ஸ்
(Govt. Regd.)
ராஜ வீதி :: கோயமுத்தூர்

★

எல்லாவிதமான எம்ராய்டரி நூல்களும், உல்லன் வகைகளும், புத்தகங்களும் எங்களிடம் மலிவாகக் கிடைக்கும்

எங்களிடம் நூல் வகைகள் வாங்குபவர்களுக்கு எம்ராய்டரி சித்திர வேலைகள் இலவசமாகக் கற்று கொடுக்கப்படும்

★

SARADA EMBROIDERY STORES
RAJA STREET :: COIMBATORE

ஆனந்த விலாஸ்
டிபன் ரூம்
பிராமணாள் காப்பி கிளப்
ராஜவீதி :: கோயமுத்தூர்

காலை மாலை
எங்களால் தயாரிக்கப்படும் ஸ்பெஷல்
டிபன்
(சிற்றுண்டி)
சுகாதார முறையில் நவீன முறைப்படி
சுத்தமான நெய்யைக்கொண்டு
தயார் செய்யப்படும்

N. G. நாணுவையர்
ப்ரொப்ரைட்டர்

சேலம் பிராவிடெண்டு சொசைடி லிமிடெட், சேலம்
THE SALEM PROVIDENT SOCIETY, LIMITED, SALEM

முக்கிய அம்சங்கள்

1. நமது சொசைடி தென்னிந்தியாவில் முதன்மை ஸ்தானம் பெற்றுள்ளது.
2. இந்தியாவிலே இருக்கும் மூன்று பெரிய சொசைடிகளில் ஒன்று.
3. புதிய இன்ஷுரன்ஸ் சட்டத்தின்கீழ் வேலைசெய்து வருகின்றது.
4. திருவாங்கூர் சமஸ்தானத்திலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்டுள்ளது.
5. பாலிசிதாரர்களுடைய பாதுகாப்பு நிதி 1943-ம் ளு அக்டோபர் முடிய ரூ. 1,40,000 மேல்.
6. நடுத்தரக் குடும்பங்களுக்கு அவசியமான இன்ஷுரன்ஸ்.

முக்கிய பட்டணங்களிலும், பிரதம கிராமங்களிலும் நாணயமும் செல்வாக்குமுள்ள உள்ளூர் ஏஜண்டுகள் தேவை. ஏஜன்ஸி கமிஷன் வார்சுகளுக்கும் கொடுக்கப்படும்.
முழு விபரங்களுக்கு கீழ்க்கண்டவரிடம் விண்ணப்பித்துக்கொள்ளலாம்.

K. N. ராஜாராம் ராவ், B.A., B.L.,
ரிடையர்டு டிஸ்டிரிக்ட் முன்சிப்
சேர்மென்

V. ராஜகோபால், M. A.
காரியதரிசி.

"படம் சில பேருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். இன்னும் இரண்டு மூன்றுநாள் ஓட்டிப் பார்......" என்று நான் முடிப்பதற்குள்ளாக "எதையையா ஓட்டிப் பாக்கறது? ஓம் படம் இருக்கிற லக்ஷணத்துக்கு அதை ஓட்டி வேறே பாக்கறதாம். படத்தைத் தூக்கிக்கொண்டு ஓடையா. எங்கொட்டகையிலே ஏதாவது டான்ஸ் கீன்ஸ் வைத்தாலாவது காசு வரும்" என்று சரமாரியாக ஆரம்பித்துவிட்டார்.

மேற்கொண்டு அவருடன் வாதாடுவதில் பயனில்லையென்று தெரிந்தது. "எனக்குச் சேர வேண்டிய பணத்தைக் கொடுத்து விடுங்கள். பிறகு நீங்கள், டான்ஸ் வைத்தாலும் சரி, கச்சேரி வைத்தாலும் சரி" என்றேன்.

அவருக்கு ஆத்திரம் பொங்கிவிட்டது. "ஓம்ம படத்திற்கு பணம் வேறுவேண்டுமா?" என்று கேட்டுவிட்டு சடக்கென்று எழுந்துபோய் விட்டார். மேற்கொண்டு அங்கு இருந்தால் அடிதடி உண்டாகிவிடும் என்று என் அறைக்கு வந்து இந்த விஷயங்களைப் பற்றி என் முதலாளிக்குக் கடிதம் எழுதினேன். அதற்கு "பணம் வாங்காமல் ஊர் திரும்பாதே" என்று பதில் வந்துவிட்டது. பெரிய தர்ம சங்கடத்தில் சிக்கிக்கொண்டு அவதிப்பட்டு அந்தக் கொட்டகை முதலாளியுடன் கெஞ்சிக் கூத்தாடி, வரவேண்டிய பணத்தில் முக்கால் வாசி பெற்றுக்கொண்டு படத்துடன் ஊருக்குத் திரும்பினேன். எவ்வளவோ ஆசைப் பட்டுப் பெற்ற படப் பிரதிநிதி உத்தியோகம் "சீச்சீ" என்றாகி விட்டது.

* * *

மற்றோர் சமயம் ஒரு கிராமத்திற்கு பக்த ராமதாஸ் படத்தைக் கொண்டுபோயிருந்தேன். படத்தை ரொம்பவும் ரஸித்துப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மிளகாய்ப்பொடி பார்ஸ் கட்டம். சாரங்கபாணி உலக்கையை எடுப்பது காட்டப்பட்டது. அடுத்த படியாக அவர் உலக்கையுடன் திரும்பி வருவது காட்டப்பட்டது. இதற்கு இடையிலுள்ள காட்சி வெட்டப்பட்டுவிட்டது. கொட்டகையில் ஏகப்பட்ட கூச்சல் "அவன் உலக்கையைத் தூக்கிக் கொண்டு ஓடுவதைக் காட்டு" என்று. என்னிடம் கொடுத்த பிரதியில் என்ன காரணத்தினாலோ அந்தப் பாகம் இல்லை. எனக்குப் பகீர் என்றது. இதற்குள்ளாகக் கொட்டகையில் கூச்சல் அதிகமாகி "காசைத் திருப்பிக் கொடு" என்ற சப்தம் வர வர அதிகமாகிவிட்டது. கொட்டகை முதலாளி "போலீஸுக்குச் சொல்லிவிட்டு வருகிறேன்" என்று மெல்ல நழுவிவிட்டான். நான் ஆபரேட்டரிடம் சென்று "என்ன ஸார் செய்வது? போலீஸார் சீக்கிரம் வந்து விடுவார்களா?" என்று கேட்டேன். அவர் "போலீஸாவது, மண்ணாங்கட்டியாவது. போலீஸ் ஸ்டேஷன் இங்கிருந்து 4 மைலுக்கு மேலே போகணும். முதலாளி வீட்டுக்குப் போய் ரூமைத் தாள் போட்டுப் படுத்துத் தூங்கப்போகிறார். நீர்பேசாமல் இரும். நான் போய் சமாதானம் சொல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு படத்தை நிறுத்திவிட்டு மேடையில் தோன்றி கையமர்த்தினர். படிப்படியாக சப்தம் குறைந்தது. ஆபரேட்டர் அந்தப் பிரதியில் அந்தக் காட்சி இல்லையென்ற விஷயத்தை தெரிவித்து அதற்காக வருந்துவதாகவும், கூடிய சீக்கிரம் புதுக்காப்பி ஒன்று கொண்டுவருவார் என்றும் தெரிவித்த பின் ஜனங்கள் ஒருவாறு தங்கள் ஆட்டபாட்டங்களை அடக்கிக்கொண்டு படம் பார்த்தார்கள். "நல்லகாலம்" என்று சொல்லிக் கொண்டே ஒரு பெருமூச்சு விட்டேன்.

* * *

"என் ஸார் இங்கே நிக்கறீங்க" என்றான் சினிமாக் கொட்டகையின் கேட்கீப்பர்.

உள்ளத்திரையில் நடைபெற்றுக் கொண்டிருந்த சினிமாப் படம் நின்று, சுய உணர்வடைந்தேன். நிலைமை தெளிந்தது.

"கடைசி ரெண்டு ரீல்தான் பார்க்க வேண்டும்" என்று சொல்லி, கையிலிருந்த 'பெஞ்சு டிக்கட்'டைக் காட்டினேன்.

"காசையும் கொடுத்திட்டு..." என்று ஏதோ முணுமுணுத்துக் கொண்டு போனான் அந்த கேட்கீப்பர்.

நியூயார்க் நகரில் ரேடியோ சிடி மியூசிக் ஹால் என்றொரு தியேட்டர் இருக்கிறது. உலகத்திலேயே இதைத்தான் பெரிய தியேட்டர் என்று கருதுகிறார்கள். ஆறு மாடிகள். ஆறாயிரத்தைநூறு மக்கள் ஒரே காலத்தில் உட்காரலாம். தியேட்டரின் மேல் மாடிக்குச் செல்ல 16 'லிப்டுகள்' இருக்கின்றன. வெளியே செல்ல 64 கதவுகள் இருக்கின்றன. தியேட்டருக்கு உள்ளே சென்றால் ஒரு அரண்மனையைப் போலிருக்கிறது. அங்கு செல்வதால் உண்டாகும் இன்பம் செல்கிறவர்கட்கெல்லாம் பொதுவுடமை. மாலை 4 மணிக்கு ரொட்டியும், டீயும் எல்லோருக்கும் இனமாக வழங்குகிறார்கள்.

* * *

பிரபல ஹிந்தி நடி சோபனா சமார்த்தின் கணவரான குமார் ஸமார்த், இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் பம்பாய் ஹைகோர்ட்டில் பிரபலமான நீதிபதியாயிருந்த ஸ்ரீ என். என். ஸமார்த்தின் பேரராம்.

* * *

செய்திப் படங்கள்

பத்திரிகையில் ஒரு விஷயத்தைப் படிக்கிறோம். ரேடியோவில் அதேவிஷயத்தைக் கேட்கிறோம். ஆனால் செய்திப்படத்தில் அதே விஷயத்தைப் பார்த்தும் கேட்டும் மகிழ்கிறோம். பத்திரிகையில் ஒரு விஷயத்தை நாம் படிக்காமல் இருந்து விடக்கூடும். ரேடியோவில் ஒரு விஷயத்தை நாம் கேட்காமல் இருந்து விடக்கூடும். ஆனால் சினிமாவுக்குச் சென்றால் செய்திப் படங்களை நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், பார்த்துத்தான் ஆகவேண்டும்.

ஏ. கே. செட்டியார்.

பேசும் படம்

அடுத்த இதழ் பிப்ரவரி மாதம் 15உ தேதியன்று தமிழ் நாடெங்கும் கிடைக்கும்.

உள்ளூர் ஏஜெண்டிடம் பெற்றுக் கொள்ளுங்கள்.

மூக்கம்மா பிரேமாவாக மாறுவது தற்போதைய சினிமா உலகில் சர்வ சாதாரணம்தான். பெயரில் எவ்வளவு மாறுதல் உண்டாகிறதோ, அவ்வளவு வாழ்விலும் ஏற்படத்தானே வேண்டும்?

மிஸ் பிரேமா ★

—'வல்லிக்கண்ணன்'

அன்று மிஸ் பிரேமாவின் மனம் ஒரு நிலையில் இல்லை. எங்கெங்கெல்லாமோ சுற்றி வந்தது. சினிமாக் கலையைப் பற்றி யாரோ இழிவாகப் பேசியது அவள் காதில்பட்டது. அவளுக்கு தன்னைப்பற்றியும், தன் தொழிலைப் பற்றியும் நினைவு ஓடியது.

மூலைக்கரைப்பட்டி மூக்கம்மா மிஸ் பிரேமாவாக மாருத காலம் அது. முதலில் யாருமே அப்படி நினைத்திருக்க மாட்டார்கள்! அழுக்குப் பாவாடையும், பழம் கவுனும், பரட்டைத் தலையுமாக, தெருப் புழுதியில் ஆடி மகிழ்ந்த மூக்கம்மா உருவிலே எதிர்கால நட்சத்திரத்தின் சாயை மறைந்து கிடந்தது என்பது எந்தச் சோதிடப் புலியும் அறியாத விஷயம்.

வேண்டுமானல் அவள் பாட்டியின் வாக்கு பலித்தது என்று சொல்லிக் கொள்ளலாம். ஆடி அட்டகாசம் செய்யும் பேத்தியைக் கண்டிக்கும் போதெல்லாம் அவள், "எட்டி, எ ஆடுகாலி, என் இப்படிப் படுத்துறே......? புள்ளேயான ஒரு இடத்திலே இருந்து விளையாடும், பாத்திருக்கேன். இது என்னடான்னு சதுர்த்தாசி மாதிரி மினுக்கிக்கிட்டு..........எ, கூத்தாடிச்சி" என்று பிரலாபிப்பது வழக்கம்.

அப்பொழுது அவளுக்கு வயது பத்துப் பன்னிரண்டு இருக்கலாம். தனது வருங்காலத்தைப் பற்றி அவள் எண்ணவேண்டிய அவசியமே இல்லை. குடும்ப வண்டி ஊர்ந்து ஊர்ந்து குழி பட்ட சமூக சம்பிரதாயப் பாதையிலே நடைபோட வேண்டிய அவள் வாழ்வில், எதிர்பாரா அற்புதமா நிகழ்ந்துவிடப் போகிறது? யாரும் அவளைப்பற்றி பிரமாதக் கவலை எடுத்துக்கொள்ளவில்லை.

ஆனல் அவர்கள் எதிர்பாராதது நடந்துவிட்டது.

அவளுடைய சித்தப்பா பொன்னையா பிள்ளைக்கு அவள்மீது அலாதிப் பற்று. அது சிரத்தையாக மாறி, அவளை மேனிலைக்குக் கொண்டுவர வேண்டுமென்ற கவலையாக வளர்ந்தது. ஆகவே பாளையங்கோட்டை 'பெரிய பள்ளிக்கூடத்திலே' கல்வி பயிலச் செய்வதற்காக மூக்கம்மாவை நகரத்துக்கு அழைத்து வந்தார் அவர்.

அவர் கண்ட கனவு காலப் போக்கில் நனவாக மலர்ந்து கொண்டிருந்தது. மூக்கம்மா எஸ். எஸ். எல். ஸி. பாஸ் செய்த பிறகு கலாசாலையில் சேர விரும்பினள். முன்பு மூலைக்கரைப்பட்டிப் புழுதி மண்ணிலே புரண்டவள் இவளா என்ற சந்தேகம் நிலைத்து நிற்காது அவளைப் பார்த்தால். அது நினைவுக்கும் எட்டாத சேதியாக மங்கியது. அவள் புதுமைக் கன்னியாகவே வளர விரும்பிய சித்தப்பா அவளைக் கூட்டுக் கல்வி வளர்ந்த ஜங்ஷன் கலாசாலையிலே சேர்த்தார். அது முதல் அவள் எம். கே. அம்மா வானள்!

ஜங்ஷன் கலாசாலை கல்வி புகட்டுவதிலும், நல்ல ரிஸல்ட் கொண்டு வருவதிலும் புகழ்பெற்றதோ என்னவோ தெரியாது. ஆனல் மாணவ மாணவிகளின் பருவக் குறும்புகள் வளரவும், காதல் லீலைகளுக்கும் பேர் போன இடமாகத் திகழ்ந்தது அது. கூச்சமின்றிக் கூடிப் பழகிக் கூத்தடிக்கக் கற்றுக்கொண்டதுதான் அவர்களது கூட்டுக் கல்விமுறையின் விளைவு.

பொழுது புலர்ந்தது; சவேராவில்

வருகிறது!

மானசம்ரக்ஷணம்

S.D.சுப்புலக்ஷ்மி : காளி.N.ரத்னம்
C.T.ராஜகாந்தம் : T.R.ராமச்சந்திரன்
V.N.ஜானகி : G.பட்டு அய்யர்
ராவ்பகதூர் கிருஷ்ணராவ்
போன்ஸிலே
ராஜகோபாலய்யர்

டைரக்ஷன்

K.சுப்ரமணியம், B.A.B.L.
&
C.S.V.அய்யர்

பாட்டு, சங்கீதம்
பாபநாசம் சிவன்
ராஜகோபால அய்யர்

ஸ்டுடியோ
நியூடோன்

S.I.P
ரிலீஸ்

S.I. PUBLICITIES

G.H.RAO

குமாரி எம். கே. அம்மா சுபாவமாகவே 'துரு துரு' என்று திரிபவள். பிறர் கவனம் அவள்மீது பாயாமல் இருக்குமா? இப்பொழுதோ அவள் வேண்டுமென்றே பிறரது கவனத்தைக் கவர்வதற்குரியன வெல்லாம் செய்து வந்தாள். அவள் சுமாரான அழகி. எதிலும் முன்னுக்கு நிற்கும் துணிச்சல் உண்டு. அவள் 'கலாசாலை நாடக மண்டலி'யில் சேர்ந்தது ஆச்சர்யமல்ல.

அவளிடம் உண்மைத் திறமை ஒளிந்து கிடந்தது. அதைச் சிண்டைப் பிடித்து இழுத்து வந்து நிறுத்திய பெருமை புரொபசர் சீதாராமனையே சாரும். என்றாலும் அவளையும் அவள் திறமையையும் வெளியுலகுக்கு விளம்பரப்படுத்தியது - குடத்துள் விளக்கை வானத்து நட்சத்திரமாக்கியது-சந்தர்தான். அவர் சினிமா டைரக்டர் என்று அறிமுகப்படுத்தினால் போதுமானது. 'ஓ, அவரா!' என்பார்கள் அனைவரும். அவள் நட்சத்திரமான கதை இதுதான்.

குமாரி எம். கே. அம்மா 'சும்மா — தமாஷாக' நாடக மண்டலியில் சேர்ந்து நடித்துத் தன் திறமையையும் ஆர்வத்தையும் காட்டி வந்தாளே தவிர, அத்துறையில் முன்னேறிப் புகழ் பெறவேண்டும் என்ற எண்ணம் அவளுக்குத் துளிகூடக் கிடையாது. ஆனால் பொழுது போக்காக அவள் பின்பற்றிய அந்தக் கலைக்கே முழுத் தொண்டும் செய்ய வேண்டியதாயிற்று. சந்தர்ப்பம் அப்படி முடிவு கட்டியது.

கலாசாலை ஆண்டு விழாவில் நடந்த நாடகத்திலே அவள் 'ஜமாய்த்து விட்டாள்' என்று எல்லோரும் ஒப்புக்கொண்டனர். தற்செயலாக அங்கு வந்திருந்த டைரக்டர் சந்தர் ஆர்வமாகத் தலையாட்டி ஆமோதித்தார். அவரது தலை ஆடியது மட்டுமல்ல. கண்களும் அவள்மீது விழுந்தன. "இவளை நடிக்க வைத்துவிட்டால் நமக்கு நல்ல பெயர் வரும். நம் படம் புதுமைப் பெண் அற்புதமாகி விடாதா?" என அவர் மனம் பேசியது.

அதற்காகத் தீவிரமாக முயன்றார். சுலபமாக முடியக்கூடியதாகவா இருந்தது அம்முயற்சி! எம். கே. அம்மா முதலில் தயங்கினாள். பிறகு பிகு பண்ணினாள். முடிவில் எப்படியோ சம்மதித்தாள். என்றாலும் அவளது சித்தப்பாவின் சம்மதம் வேண்டுமே!

சந்தர், சினிமாக் கலையின் உயர்வு, அதனால் நாட்டுக்கு வரும் நன்மை, அதில் குடும்பப் பெண்கள் சேர வேண்டிய அவசியம் எல்லாம் பற்றி பல பிரசங்கங்கள் செய்தார்—பொன்னையா பிள்ளையிடம்தான்! பேச்சோடு பேச்சாக "உங்கள் பெண்ணிடம் அற்புதமான திறமை இருக்கிறது, சார். அவள் மட்டும் சினிமாவில் நடித்தால் அவளுக்கும் நல்ல புகழ். கலைக்கும் மதிப்பு" என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றினார்.

பிள்ளைவாளுக்கு அதிறடித்தது முதலில். பிறகு, புதுமைக்குத் தலை வணங்கும் அவர் இதற்கும் இசைந்தார். சந்தருக்கு அளவற்ற ஆனந்தம். அவளுக்கு,

அடுத்தபடியாக எந்தப் படத்தில் நடிக்க வேண்டியிருக்குமென்ற யோசனையிலிருக்கிறார் ஜே. சுசிலாதேவி

பப்பாளிப்பழம் பறிப்பதற்குள் பார்வை என்ன வேண்டியிருக்கிறது?

மகிழ்வு. பிள்ளைக்கும் திருப்திதான். சினிமாவில் புகுவதென்றால் எம். கே. அம்மாவாகவே இருக்க முடியுமா? அதனால் வேறு பெயர் சூட வேண்டியதாயிற்று. அன்றுதான் மூலைக்கரைபட்டி மூக்கம்மா மிஸ் பிரேமா ஆனாள்.

பிரமாத விளம்பரங்கள்.........அமர்க்களம். மிஸ் பிரேமாவின் கன்னிப்படம் வெள்ளித்திரைக்கு வந்துவிட்டது. தனது முதல் கதையைப் பார்த்து மகிழும் ஆரம்ப எழுத்தாளனின் சந்தோஷத்தையும் தோற்கடித்தது. பிறகென்ன?

மிஸ் பிரேமாவுக்குப் படத்திற்குப் பின் படமாக அழைப்பு வந்தது. அவள் பெருமையும் வளர்ந்தது. அவள் நட்சத்திர ஸ்தானம் எய்தி விட்டாள். அவளைத் தேடி வந்தவர் எவ்வளவு பேர்! எவ்வளவு புகழ்ச்சிக் கடிதங்கள்........பத்திரிகைகளில் வந்த படங்கள், புகழ் மொழிகளுக்குத்தான் கணக்குண்டா!

அவளுக்கு வாழ்க்கையே இன்பமாகத்தான் இருந்தது.

தன் வாழ்வின் போக்கை எண்ணிச் சிரித்துக்கொண்டாள் மிஸ் பிரேமா. அந்தப் பட்டிக் காட்டிலே சம்பிரதாயப் பாதையில் செக்குமாடு போல் உழன்றால், தனது வாழ்வில் இன்பம் சுரக்குமா?

அவளுக்குத் தன்னைப் பற்றி பலர் என்ன சொல்கிறார்கள் என்பது தெரியாமல் இல்லை. அவர்களுக்கு வேறு என்ன வேலை?

சினிமா சிறந்த கலை. ஒவ்வொருவர் நடிப்புத் திறமையும் வெளிப்படும் சிறந்த சாதனம். அதுமட்டுமா? அதற்குத் தகுந்த புகழும் தருவது. கலையைக் கைக்கொண்டு பழகும்பொழுது ஜாக்கிரதையாகத்தான் இருக்க வேண்டும். விளக்குச் சுடர் அழகாக இருக்கிறது என்று அதில் கையைப் புகுத்தலாமா, என்ன? அதன் ஒளியமுதைத் தான் அனுபவிக்க வேண்டும்... கலை பவித்ரமானது. அது மோசமாகி விடாது. அதில் ஈடுபடுபவர்கள்தான் அதைக் கெடுப்பது......

இப்படி அவள் நினைத்துக் கொள்வாள்.

உதகமண்டலத்தில்

"பேசும் படம்," மற்றும் தங்களுக்குத் தேவையான வாரப் பத்திரிகைகள், மாதமிரு முறைகள், "கலைமகள்" வெளியீடுகள், மற்ற வெளியீடுகள்

கிடைக்குமிடம்:

A. அமீர் அலி,
மவுண்டன் நியூஸ் ஹால்,
உதகமண்டலம்

K. P. கேஸ்டர் ஹேர் ஆயில்

மூளையைக் குளிர்ச்சி செய்து கூந்தலை மிருதுப்படுத்தி
உற்சாகம் அளிக்கத்தக்கது

மற்றும் சுத்தம் செய்த
தேங்காய் எண்ணெயில்
தயாரித்த
K. P. ஆமலா, ஷண்பகா,
ரோஸ், ஜாஸ்மின்
ஹேராயில்கள்
தினசரி உபயோகத்திற்கு
மிகவும் சிறந்தவை

சென்னை இராஜதானியிலுள்ள எல்லா முக்கிய நகரங்களிலும் ஏஜெண்டுகளும்
ஸ்டாக்கிஸ்டுகளும் தேவை. விவரங்களுக்கு உடனே எழுதவும்:—

K. P. கேஸ்டர் ஆயில் ஒர்க்ஸ்

சம்பந்தம் ரோடு :: ஆர். எஸ். புரம் :: கோயமுத்தூர்

தற்காலம் யுத்தத்தின்பொருட்டு பட்டுவிலைகள் தினம் தினம் ஏறிக்கொண்டு வருவது உலக சரித்திரத்திலேயே கேட்டிராத அதிசயம்

அப்படியிருந்தும் நாங்கள் எப்பொழுதும் போல் கேரண்டியுடன் உயர்ந்த பட்டுப் புடவைகளும் மற்ற ஜவுளி தினுசுகளும் அதிக விலையன்னியில் - கொடுத்து வருகிறோம் -

எப்பொழுதும்போல் ஆதரவு கோரும்:

V. N. சுப்ரமணிய அய்யர்

ராஜ வீதி :: கோயமுத்தூர்

ஹெட் ஆபிஸ்:
மணி பவனம், கும்பகோணம்

அவள் ஒரு அனாதை. அனாதையை ஆதரித்த பட முதலாளி அவள்தான் காணாமற்போன தன் மகள் என்றால் எப்படி இருக்கும்?

சிந்தனை அலைகள்

எஸ். பி. மாதையன்

நளினி : நான் யார்? என் பெற்றோர்கள் யார்? என் உற்றார் உறவினர்கள் யார்? இந்த விஷயங்கள்கூட எனக்குத் தெரியாது.........என்னை அன்புடன் ஆதரித்து வந்த அந்தக் கிழவருக்கும் நான் யாரென்று தெரியாதாம்......அனாதைச் சிறுமியாயிருந்த எனக்கு ஆதரவளித்தது திரையுலகம். அதன் அன்பணைப்பிலும், போஷணையிலும் இப்போது சினிமாவில் மிஸ் நளினியாகி விட்டேன். இன்று சினிமா வானில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் நட்சத்திரமாயிருக்கிறேன்.

பத்திரிகை நிருபர்கள் என்னைப் பேட்டி காண காத்துக் கிடக்கிறார்கள். என்னைத் தங்கள் படத்திற்கு ஒப்பந்தம் செய்துகொள்ள கடிதத்தின் மேல் கடிதமும் ஆளின் மேல் ஆளும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள் பட முதலாளிகள். கட்டுரையும், வாழ்க்கை வரலாறும் கேட்டு பத்திரிகை ஆசிரியர்கள் என்னை நச்சரித்து வருகிறார்கள். இந்நிலையில் காதற் கடிதங்கள் வேறு கணக்கு வழக்கு இல்லாமல் வருகின்றன. இதையெல்லாம் நினைத்தால் எனக்கு சிரிப்புத்தான் வருகிறது.

ஆனால், 'சினிமா உலகில் இதெல்லாம் சகஜம் அம்மா' என்று கூறுகிறார் தணிகாசலம். ஆம். இவரும் ஒரு பட முதலாளிதான். உத்தமமான குணசீலர். சினிமா உலகில் நேரான பாதையில் செல்ல வேண்டிய வழியைக் காட்டிய என் குரு என்றாலும் தகும். பணக்காரர் என்றாலே கர்விகள் என்பார்கள். அதற்கு இவர் விதிவிலக்கு. 'சினிமாக் கலைக்கு உண்மையாகப் பாடுபடும் முதலாளி.........ஆம். இவர்தான் அதற்கும் காரணம். இவர் எடுத்த 'விதி' என்ற படத்தில்தான் சேகர் என்பவர் என்னுடன் நடித்தார்.

நானும் இது வரையில் பலருடன் சேர்ந்து நடித்திருக்கிறேன். அப்போதெல்லாம் என் உள்ளத்தில் எவ்வித உணர்ச்சியும் உண்டாகவில்லை. ஆனால் இவருடன் நடித்ததில் என் உள்ளமே ஒருவித அபூர்வ உணர்ச்சியில் லயித்து விட்டது. அவர் கைகள் என் மேல் பட்ட பொழுதெல்லாம் என் மனம் இன்பத்தில் மூழ்கிற்று. அவர் என்னுடன் பேசின பொழுதெல்லாம் நான் ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்திருந்தேன். இந்த மாறுதலுக்குக் காரணமென்ன? 'விதி' செய்த சதியா!......

சேகரன் : ஆமாம். 'விதி' செய்த சதிதான். சந்தேகமில்லை. இதற்கு முன் நான் பல படங்களில் நடித்திருக்கிறேன். அழகு சுந்தரிகள் அநேகர் என்னுடன் நடித்திருக்கிறார்கள். அப்பொழுதெல்லாம் எவ்வித உணர்ச்சியும் என் உள்ளத்தில் உண்டானதில்லை. ஆனால், நளினியுடன் நடித்த சமயம் என் எனக்கு அந்த அபூர்வ உணர்ச்சி உண்டாயிற்று? அவளுடைய பேச்சும், ஸ்பரிசமும் என்னை இன்பக்கடலில் தள்ளுவானேன்? ....நளினி என்றாலே என் மனம் நளினமாகத் துள்ளிக் குதிக்கிறது. அவளை அடிக்கடி பார்க்க வேண்டும் போலிருக்கிறது.........சே! இது என்ன சிந்தனை. அவளோ சினிமா ராணி. சங்கீதக் குயில். இந்த சாதாரண நடிகனை அவள் சட்டை செய்வாளா என்ன? அவள் தயவுக்காக எத்தனையோ பெரிய பிரபுக்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கே ஏமாற்றத்தை யளிக்கும் அவள், பணமோ, கௌரவமோ இல்லாத இந்த நடிகனையா காதலிக்கப் போகிறாள்! இது வீண் கற்பனை.

அவள் யாரோ! எந்த லட்சப் பிரபுவின் செல்வப் புதல்வியோ! யாருக்குத் தெரியும்? ஏழடுக்கு உப்பரிகையில் ஏகாந்தமாயிருக்கும் அந்த அழகு தெய்வத்தைக் காண இந்த ஏழை உள்ளம் ஏன் இப்படித் துடிக்கிறது? ஏதோ அதிர்ஷ்ட வசமாக அவளுடன் ஒரு படத்தில் நடித்து விட்டேன. அதனால் அவள் நம்மைக் காதலிக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது எவ்வளவு முட்டாள் தனம். வெட்கக்கேடு! இந்த சங்கதி மாமா தணிகாசலம் அறிந்தால்?......... அவர் முகத்தில் எப்படி முழிப்பது......சே...சே...இந்த எண்ணத்தை விட்டுவிடத்தான் வேண்டும்.. ...

தணிகாசலம் : ஆம். இந்த எண்ணத்தை விட்டுவிடத்தான் வேண்டும். வேறு வழியில்லை. அவளும் உண்மையில் யார் என்று தெரியாது. அதை அறியவோ வழியில்லை. அது விஷயத்தைப்பற்றிக் கேட்டால் மழுப்பி விடுகிறாள். என்ன செய்வது? என்னால் பொறுக்கவே முடியவில்லை. அவளைக் காணும்தோறும் என் உள்ளத்தில் கொந்தளித்து எழும் அந்த உணர்ச்சி என் நிலைமையையே மறக்கச் செய்துவிடுகிறது. வாய்விட்டுக் கதறிவிடலாம் போல் தோன்றுகிறது......

நானும் எத்தனையோ சினிமா நடிகைகளைக் கண்டிருக்கிறேன். அவர்களெல்லாம் பலவந்தமாகத் தங்கள் வரலாற்றைக் கூறியிருக்கிறார்கள். ஆனால், இவளோ...... நான் பலதடவைகள் கேட்டும் கூறாது ஏமாற்றிவிட்டாள்........, ஒருவேளை விஷயத்தை ஏதாவது பத்திரிகையின் மூலமாக வெளியிட்டுவிடுவேன் என்று பயந்து

AT LAST!

For the First Time

The First SINGHALESE TALKIE

IS IN THE MAKING

BANKER'S SON

(BANKER-GE-PUTHRAYA)

IN

SINGHALESE

Starring: VIOLET PERERA & CHARLES WEERASINGHE

STORY, DIALOGUE & SONGS

BY

D. V. SENEVIRATNA

☆

Apply :—

RAJEN PICTURES (CEYLON)

289 ESPLANADE :: G. T., MADRAS

Ready for Bookings:—

SHAHENSHA AKBAR

WITH

VANMALA, HUSN BANU & KUMAR

N. தாசே கவுண்டர் & கோ.

41 பந்தர் தெரு, சென்னை

★

- மருந்து வகைகள்
- வைத்திய கருவிகள்
- சோப்புகள்
- வாசனை திரவியங்கள்
- குடும்பத்திற்கு வேண்டிய இதர சாமான்கள்

★

நியாயமான விலை
பிரசித்தி பெற்ற கடை

★

பெங்கால் கெமிகல் அண்டு பார்மக்யூடிகல் ஒர்க்ஸின் மருந்துகளுக்கும் இதர சாமான்களுக்கும் ஏஜண்டுகள்

★

N. Dasai Cowder & Co.

41 Bunder St., MADRAS

Agents for the products of Bengal Chemical and Pharmaceutical Works Ltd.

விட்டாளோ? அல்லது உண்மையாகவே இவளுக்கு, தான் யார் என்று தெரியாதோ!...சே, அப்படி யிருக்க நியாயமில்லை. அறியாத சிறு குழந்தையா என்ன?......ஒரு சமயம்...... அந்தக் கிழவனின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு கூறுதுவிட்டாளோ!......இருக்கலாம்......

ஆம் பதினைந்து வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அந்தப் பார்வை ......அந்த அற்புதத் தலையசைப்பு ....ஆம்.........என் அருமை மனைவி இப்பொழுது இருந்திருந்தால் நளினி போல்தான் இருப்பாள்........சந்தேகமில்லை.......... நளினிதான் என் கண்மணிக்குப் பிறகு என் மனதிற்குச் சாந்தி யளிக்கிருள்.........ஆனல் அவள் வரலாற்றை யறியத் துடிக்கிறது என் மனம். நாளைக்கே சென்று அந்தக் கிழவனைக் கேட்டுவிடுகிறேன். இதுதான் சரியான யோசனை.

கிழவன்: ஆம். இதுதான் சரியான யோசனை. நளினி தன் வரலாற்றை யறியத் துடித்துக் கொண்டிருக்கிருள். அந்த தணிகாசலமும் ஏதோ ஓர் அபூர்வ அன்பின் சக்தியால் அடிக்கடி வந்து அவள் வரலாற்றை அறிய முயல்கிருர். ஆதலால் இனியும் நான் பேசாமலிருப்பது ஞாயமில்லை. எப்படியோ இவ்வளவு நாட்களைக் கழித்து விட்டேன். இனி எந்த சமயத்தில் என் வாழ்நாள் முற்றுப் பெறுகிறதோ! எப்பொழுது யமன் என் உயிரைக் கவர வருகிருனே?......ஆம். அதற்கு முன்பே இவளை ஒரு துணைவனுடன் சேர்த்து விட வேண்டாமா?......

அந்தப் பயல் சேகரன்மீது தான் நளினியின் கண் விழுந்திருக்கிறது............போகட்டும். மனதிற்கிசைந்த மணளனேடே கூடி வாழட்டும்.........இருந்துமென்ன? தாய் தந்தையற்ற அனதை......தலைவிதி யாரைவிட்டது...........அருங்குண மங்கையான இவளின் தாய் தந்தையர் யாரோ? ஐந்து வயதில் கைதவறி விட்டுவிட்ட அவர்கள் இதுநாள் வரையில் உயிரோடு இருப்பார்கள் என்பது என்ன நிச்சயம்?

சினிமா தியேட்டரின் முன் கண் கலங்கி நின்ற இவள் இன்று சினிமா ராணியாகத் திகழ்கிருள். அன்று இவளை அசட்டையுடன் பார்த்துக் கொண்டு சென்ற அதே மனித சமூகம் இன்று இவளைக் காண போட்டி போட்டுக்கொள்கிறது.......இதெல்லாம் உலக விசித்திரம்......எதற்கும் இந்த விஷயத்தைத் தணிகாசலத்திடம் தெரிவித்து விடுகிறேன்.

தணிகாசலம்: என்ன ஆச்சரியம்! மிஸ் நளினி என் செல்வப் புதல்வியா? நான் நினைத்தது சரியாய்ப் போய்விட்டது. என் கவலை தீர்ந்தது. இப்பொழுதே போகிறேன். என் செல்வமே! இவ்வளவு காலமாகப் பிரிந்து என்னைத் தவிக்க வைத்துவிட்டாயே! இது உனக்குத் தர்மமா என்று அவளைக் கேட்கிறேன். நான் தான் அவளுடைய தகப்பனென்று அவளறிந்தால் எவ்வளவு ஆனந்தப்படுவாள். ஓடிவந்து அப்பா என்று கூறிக் கட்டிக் கொள்வாளல்லவா! ஆஹா......இப்பொழுது நளினியின் தாயிருந்தால்......ஹூம்..... அவளைப் பற்றிக் கவலைப்பட்டு என்ன பிரயோஜனம். சரிதான். இதே சிந்தனையில் காலம் போகிறதே! இதோ போகிறேன்.

சேகரன்: என்ன?...மிஸ் நளினி என் மாமன் மகளா?...ஆச்சரியம்! இதுவும் என் பாக்கியம் தான். கிட்டாத பொருள் என்று எண்ணி எட்டிச் செல்ல மனதைக் கட்டி இழுத்தேன். ஆனல் ஆண்டவன் அருளால் அது கிடைக்கும் போலிருக்கிறது. நடிகன் என்ற முறையில் என்னைப் பார்த்த நளினி இப்பொழுது அத்தான் என்று அறிந்தால்...... வேடிக்கையாகத் தானிருக்கும். அப்பொழுது அவள் முகம் எவ்வளவு நளினமாயிருக்கும்! அந்த அழகிய சிவந்த கன்னங்களில் ஏற்படும் குழியில்தான் எவ்வளவு வசீகரம்!...இப்பொழுது மாமா போயிருக்கிருர். அதோ...கார் வருகிறதே! வந்து விடடார்கள்......!

* * *

நளினி: நான் இப்பொழுது மிஸஸ். சேகர். நானும், என் நாதர் மிஸ்டர் சேகரும் நடிக்கும் "இன்ப வாழ்வு" வெகு விரைவில் தயாராகிறது. வாசகர்களே! காணத் தவருதீர்கள்.

பிரசித்திபெற்ற "மான் மார்க்"

கைத்தறி ஜவுளிகளை உபயோகியுங்கள்

பிரபல சினிமா நடிகர் சின்னப்பா கூறுவதைப் பாருங்கள் ——>

நீடித்த உழைப்பு, பட்டுப்போன்ற மென்மை, நாகரீக ரகங்கள், கைத்தறி உற்பத்தி, ஆனதால்தான் நெடுநாளாக "மான் மார்க்" ஷர்ட்டிங்குகளையே உபயோகிக்கிறேன்.

P. U. சின்னப்பா

Regd. No. 2746

☆

A. முருகேச முதலியார் & பிரதர்ஸ்

சுதேசி ஜவுளி வியாபாரம்

திருப்பூர்

பிராஞ்சுகள்: ஈரோடு, கோயமுத்தூர்

ராதாஸ்வாமி சகாயம்

இந்தியாவின் கைத்தொழிலை ஆதரித்து

தயாள்பாக் சாமான்களையே வாங்குங்கள்

அவை சுத்த சுதேசி; நாகரீகம், நயம், நாணயம், உறுதியான வேலைத்திறமை வாய்ந்தனவென்பது தாங்கள் அறிந்த விஷயம். தாங்கள் கொடுக்கும் பணம் வேறொருவருக்கும் போகாமல் இந்தியாவின் கைத்தொழிலின் அபிவிருத்திக்கே ஆதரவளிக்கிறது.

கோவை தயாள்பாக் ஸ்டோர்ஸ் லிமிடெட்

ராஜ வீதி :: கோயமுத்தூர்

தினசரி தேவைக்கான அனேகவித சுதேசி சாமான்கள் கிடைக்கும்

பஞ்ச காவியத்தில்
ஜீவக சிந்தாமணி சிறந்தது!

★

ஜீவக சிந்தாமணியின்
மறுமலர்ச்சி இதோ வருகிறது!!

★

ஜீவகன்

★

தென்னாட்டின் நட்சத்திர
நடிகர்கள் அனைவரும்
இதில் நடிக்கிறார்கள்

★

கதை, வசனம், சினரியோ, டைரக்ஷன்:
'இளங்கோவன்'

இளங்கோவன் புரொடக்ஷன்ஸ்

கீழ்ப்பாக்கம் :: சென்னை

சர்க்கரை என்ருல் தித்திக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

சந்திரா டாக்கீஸாரின் ரிலீஸ் என்ருல்

A—1 ஆக இருக்கும் என்று சொல்லவும் வேண்டுமா?

1944 வருடம் பிறந்திருக்கிறது

சென்னை நகரில் உள்ள எங்கள் அபிமானிகளுக்கெல்லாம்
புதுவருஷம் பொன்னுன வருஷமாக இருக்கவேண்டும் என்பதே எங்கள் பிரார்த்தனை

கிருஷ்ணு பிக்சர்ஸ்
● பிரபாவதி

ஜுபிடர் பிக்சர்ஸ்
● மஹாமாயா

சாரதி பிலிம்ஸ்
● பத்தினி (தெலுங்கு)

சன்ரைஸ் பிக்சர்ஸ்
● அனுசூயா (ஹிந்தி)

சென்னை நகரத்திற்கு விநியோக உரிமையாளர்கள்:

சந்திரா டாக்கீஸ் லிமிடெட்

158-B, பிராட்வே :: சென்னை

பத்மா பிக்சர்ஸின்

ரமணீயமான உன்னத புராணப் படம்

பக்த காளத்தி

(தர்ம தேவதை)

தமிழ்

தென்னிந்தியாவின் சிறந்த நக்ஷத்திரங்கள் ஒன்று சேர்ந்து நடிக்கும் படம்

வி. நாகய்யா
என். எஸ். கிருஷ்ணன்
டி. ஏ. மதுரம்
செருகளத்தூர் சாமா
டி. ஆர். மஹாலிங்கம்
என். ஏ. சுந்தரம்

மற்றும் அநேக பிரபல நடிகர்கள் நடிக்கின்றனர்

டைரக்ஷன்: ஆர். பத்மனுபன்

: விவரங்களுக்கு :

பத்மா பிக்சர்ஸ் லிமிடெட்

தியாகராயநகர் :: சென்னை

பொங்கல் புதுநாளன்று குதூகலமான ஆரம்ப விழா

சென்னை

பிரபாத் டாக்கீஸில்

திவான் பகதூர்

T. R. ராமச்சந்திரன் J. சுசிலாதேவி
காளி N. ரத்தினம் P. S. சிவபாக்கியம்

முதலியோர் நடித்தது

கதை, வசனம்: ஹரிதாஸ்
டைரக்ஷன்: டி. ஆர். சுந்தரம், B.A., B.Sc. (Leeds)

வேகமாகத் தயாராகிறது:

ராஜ ராஜேஸ்வரி

ஹொன்னப்ப பாகவதர் K. L. V. வசந்தா
செருகளத்தூர் சாமா M. R. சந்தானலக்ஷ்மி
N. S. கிருஷ்ணன் T. A. மதுரம்

விவரங்களுக்கு

மாடர்ன் தியேட்டர்ஸ் லிமிடெட்

சேலம் :: மதுரை

★ மலர் மணம் ★

பேசும் படம் அன்பர்கள் பலர் பல மாதங்களாகவே குறைகூறும்படியான நிலைமை நமக்கு ஏற்பட்டுவிட்டது. சில காலமாக பல வித காரணங்களால் குறித்த காலத்தில் பத்திரிகை வெளிவரவில்லை. இதைக்குறித்துப் பல நண்பர்கள் நமதுபேரில் கோபங் கொண்டுவிட்டார்கள். அதை ஈடுகட்டவே நமது பத்திரிகாலயத்தை சென்னைக்கு மாற்றவும், சென்னையி லிருந்து முதன் முதலாக வெளிவரும் இதழைப் பொங்கல் மலராக்கி விசேஷக் கட்டுரைகளுடனும் சித்திரங்களுடனும் பிரசுரிக்கத் தீர்மானித்தோம்.

இந்தப் பொங்கல் மலரைப் புரட்டிப் பார்க்கும்போது, உயர்தரக் கட்டுரைகளும், சினிமா சம்பந்தப்பட்ட சிறு கதைகளும் நேயர்களுக்கு இன்பவிருந்தளிக்குமென்பதில் சந்தேகமில்லை.

கோயமுத்தூர் ஸ்ரீ ஜி. டி. நாயுடு அவர்களை எல்லோருக்கும் தெரிந்திருக்கும். ஆனால் அவர் சினிமாவின்பேரில் கொண்டுள்ள ஆர்வம் பலருக்குத் தெரிந்திருக்காது. அவர் அமெரிக்கா சென்றிருந்தபொழுது கல்வி சம்பந்தப்பட்ட படங்களில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டார். மேல் நாடுகளில் சினிமா மூலம் கல்வி போதிக்கப்படுவதை நேரில் கண்டபோது, அம்மாதிரி கல்வி நமது நாட்டிலும் ஏற்படவேண்டுமென்ற ஆசை அவருக்குண்டாயிற்று. அதன் காரணமாகவே பல அமெரிக்கக் கல்விப் படங்களைத் தாமே தமிழில் வியாக்யானம்செய்து அவைகளைத் தம்முடன் இந்தியாவுக்குக் கொண்டு வந்தார். இந்தியாவிலோ ஒரே ஒருவிதமான படங்கள்தான் ஏராளமாகத் தயாராகின்றன; பொதுமக்களுக்குக் காட்டப்படுகின்றன.

விரைவில் வெளிவரும்!

செருகளத்தூர் சாமா	ஜெயம்மா
N. S. கிருஷ்ணன்	T. A. மதுரம்
காளி N. ரத்தினம்	C. T. ராஜகாந்தம்
T. S. துரைராஜ்	V. N. ஜானகி

முதலியோர் நடித்த

கலைவாணி பிலிம்ஸாரின் மகத்தான தமிழ் படம்

பர்த்ருஹரி

டைரக்ஷன்: K. சுப்ரமணியம், B.A., B.L.

ஸ்டுடியோ :— **நியூடோன்**

டிஸ்ட்ரிப்யூடர்ஸ்:

ஸ்வர்ண பிலிம்ஸ்—சௌத் இந்தியா பிக்சர்ஸ்

இதை விட்டால் பிரசாரப்படம். கல்விப் படம் என்றால் என்ன என்று தெரியாதென்றே கூறிவிடலாம். இந் நிலையைச் சீர்திருத்தவேண்டியது மிகவும் அவசியம். அறிவு வளர்ச்சிப் படங்கள் வேண்டும் என்ற அவரது கோரிக்கை பட முதலாளிகளின் காதில் விழ வேண்டும்.

மற்றும் இம் மலரில் திறம்பட்ட எழுத்தாளர்கள் பலரின் கட்டுரைகள் வெளிவந்துள்ளன. பி. எஸ். என்., கந்தருவா, கலிங்கம், மருகி ஆகியோர் நமது வாசகர்களுக்குப் புதிதல்ல. ஆயினும் அவர்கள் இம் மலருக்குச் சமர்ப்பித்திருக்கும் கட்டுரைகள் விசேஷ மணம் கொண்டுள்ளன. யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரும் பாரதி தாஸன் அவர்களும் இரண்டு இசையமுதங்களை அளித்துள்ளார்கள். தமிழ்நாட்டுப் பிரபல எழுத்தாளரான ஸ்ரீ ஆர். ஷண்முகசுந்தரம் கூறும் "விசித்திரம்" நிஜமாகவே விசித்திரமாயிருக்கிறது. நமது நட்சத்திரங்கள் கலையுணர்ச்சி பெறவேண்டிய அவசியத்தை அவர் வற்புறுத்தியிருக்கிறார்.

மலர் பிரசுரம் செய்வது சென்ற இதழ் பிரசுரமாவதற்குச் சில தினங்களுக்கு முன் தான் நிச்சயமானபடியாலும், நமது [illegible]யாலயம் கோவையிலிருந்து சென்னை[illegible] மாற்றப்பட்டு எல்லா வசதிகளும் அமை[illegible] வில்லையாதலாலும் மலரை மேற்கொ[illegible] அழகுபடுத்த இயலாதுபோயிற்று. இருந் போதிலும் நறுமணம் கமழும் மலரைத்தா[illegible] நேயர்கள் அனுபவித்து மகிழப்போகிறார்க[illegible] என்பதைக் கவனிக்கும்போது, 'பேசு[illegible] படம்' வருங்காலத்தில் தமிழ் நாட்டி[illegible] தலைசிறந்த சினிமாப் பத்திரிகையா[illegible] விளங்கும் என்று நிச்சயமாய்க் கூ[illegible] லாம்.

நம்பிக்கையான இடம்

ஒரே விலை

கலியாண காலங்களுக்கும் தீபாவளி, பொங்கல்
சம்பவங்களுக்கும் புதிய ஜவுளிகளுக்கும்
பிரபலமான இடம்

கந்த விலாஸ்

காஞ்சீபுரம் அ. கந்தசாமி முதலியார் & சன்ஸ்

பட்டு ஜவுளி வியாபாரம்

காஞ்சிபுரம் சேலம் திருநெல்வேலி

N. B. குழந்தைகள் முதல் யார் வந்தாலும் ஒரே விலையாகக் கொடுக்கப்படும்

8.4.2.73